தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 437 பிலவ வருடம், தை மாதம் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (25.01.2022) ஹிஜ்ரி - 1443, ஜமா அத்துல் ஆகீர் - 21, 0115886187 - பக்கங்கள் 16 விலை ரூ.30


## இவ்வருட இறுதிக்குள் புதிய அரசியலமைப்பு



வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் திட்டவட்டம்

02 பக்கம்

## துண்டிப்பில்லாத மின் விநியோகத்தை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானம்



மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே அறிவிப்பு

02 பக்கம்

# நீதியைப் பெற்றுக்கொடுக்க சர்வதேசம் செல்வோம்!



## பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை எச்சரிக்கை

02 பக்கம்

## எரிபொருள் பாவனையை குறைக்க கம்மன்பில முன்வைத்த யோசனைகள்

தற்போது நிலவும் கடுமையான எரிபொருள் நெருக்கடிக்கு முகங்கொடுத்து எரிபொருள் பாவனையை குறைப்பதற்கான அவசர யோசனையொன்றை எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளார்.

வாரத்தில் ஒரு நாள் வீடியோ தொழில்நுட்பம் மூலம் பாடசாலைகளை நடத்த வேண்டும் என்றும், போக்குவரத்து நெரிசலை குறைக்க பல்வேறு நேரங்களில் அலுவலகங்களை திறக்க வேண்டும் என்றும் அமைச்சர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

எரிபொருள் விலை சூத்திரத்தை உடனடியாக அமுல்படுத்துமாறும், கொழும்புக்கு வரும் வாகனங்களை கட்டுப்படுத்துமாறும் அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அரச நிறுவனங்களின் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் மாநாடுகளுக்கு அதிகாரிகளை அழைப்பதை மட்டுப்படுத்தவும், பிரதேச செயலாளர்கள் போன்றவர்களை கொழும்புக்கு வரவழைப்பதை மட்டுப்படுத்தவும் முன்மொழிந்துள்ளார்.

இதேவேளை, போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கும், தொழில்துறையினரை தமது தொழிற்சாலைகளுக்கு ஆற்றலை உற்பத்தி... 02 பக்கம்

## புலமைப்பரிசில் வினாத்தாள் வெளியானதாக கூறப்படும் தகவல்களில் உண்மையில்லை

பரீட்சைகள் திணைக்களம் தெரிவிப்பு

02 பக்கம்

## எண்ணெய்த் தாங்கிகளுக்கான டொலரை செலுத்த நடவடிக்கை!



எதிர்காலத்தில் மின்வெட்டு இல்லை – உதய கம்மன்பில

02 பக்கம்

## மத்திய வங்கியினால் அதிவிசேட வர்த்தமானி

02 பக்கம்

## இந்திய மீனவர்கள் வழக்கில் முன் நகர்த்தல் பத்திரம் தாக்கல்

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் 43 பேரின் வழக்கு தொடர்பில் நேற்று முன் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளால் ஊர்காவற்றுறை நீதவான்... 02 பக்கம்



திருகோணமலையில் படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் 16ஆவது நினைவுதினம் மட்டக்களப்பில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

## சுயநிர்ணய உரிமையுடன் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி

- இடைக்கால ஏற்பாடாக 13,
- தமிழ்க் காங்கிரஸ் யாழில் கூட்டம்
- 'டெல்லியின் காவடிகள்' என்ற பெயரில் நாடகமும் அரங்கேற்றம்

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு சமஷ்டி அடிப்படையிலான இறுதித் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும், அதற்கிடைப்பட்ட காலத்தில் காணி, பொலி; அதிகாரங்களுடன் கூடிய 13ஆவது திருத்தத்தை - இடைக்கால ஏற்பாடாக அமுல்படுத்த வேண்டும் - என பிரதான தமிழ்க் கட்சிகள்... 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..




அரசாங்கமும் வச்சுக்கொண்டா இல்லையெண்டு சொல்லுது? முடிஞ்சதை தானே அரசாங்கம் செய்யுது? செய்ய முடியாததை செய் செய்யெண்டு சொன்னா எப்படிச் செய்வாங்கள்...?

## சஜித்தும், சம்பிக்கவும் கரங்கோர்த்து செயற்பட



# த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் அழைப்பு



## அரசாங்கம் விழ முன் நாடு விழுந்துவிட்டது என்கிறார்

02 பக்கம்



### உஷ்

இராஜாங்க அமைச்சர் அருந்திக்கவை பதவிநீக்கம் செய்வது குறித்து அரச மேல்மட்டத்தில் ஆராயப்பட்டு வருகிறது.

பொலிஸாரால் தேடப்பட்டு வந்த குற்றவாளி ஒருவரை வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு அழைத்துவந்தமை, விமான நிலைய பிரமுகர்கள் வரும் வழியை அதற்காக பயன்படுத்தியமை தொடர்பில் அவர் மீது விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இதுதொடர்பில் ஜனாதிபதி விரைவில் தீர்மானமொன்றை எடுப்பாரென தெரிகிறது.


## ஒமிக்ரோன் பரவினால் இலங்கையின் பொருளாதாரம் மேலும் பாதிக்கப்படும்



ஐ.தே.க. தலைவர் ரணில் கருத்து

02 பக்கம்

## அரசமைப்பு தொடர்பான விடயங்களில் வடக்கு, கிழக்கு மக்களுக்கு ஆர்வமில்லை



இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மொரகொட தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு மக்களுக்கு அரசமைப்பு தொடர்பான விடயங்களில் ஆர்வமில்லை - வாழ்வாதாரம், அபிவிருத்தியையுமே அவர்கள் விரும்புகின்றனர் என இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார். இந்திய ஊடகமொன்றிற்கு வழங்கியுள்ள பேட்டியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். 02 பக்கம்

## வெளிநாட்டு தூதரகங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியில் வெட்டு

யோ.தர்மராஜ்

அந்நிய செலாவணி கையிருப்பு வீழ்ச்சி மற்றும் அமெரிக்க டொலர் தட்டுப்பாடு காரணமாக வெளிநாட்டு தூதரகங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியை குறைக்க அரசு முடிவுசெய்துள்ளதாக அறிய முடிகின்றது.

செலவீனங்களைக் குறைப்பதற்காகவும் நாட்டிற்கு தேவையான அந்நிய செலாவணியின் கையிருப்பை பாதுகாப்பதற்கும், வெளிநாடுகளில் இலங்கையின் தூதரகங்கள் மற்றும் பதவிகளைப் பராமரிப்பதற்காக செலவிடப்படும் செலவைக் குறைக்கவும் வெளிவிவகார அமைச்சினால் அனைத்து தூதரகத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. 02 பக்கம்




LK Newspapers Viber Community

## சஜித்தும், சம்பிக்கவும்...

நாம் முன்னோக்கி சென்று, இந்த காட்டாட்சியை வீழ்த்த வேண்டும் என்றால் சஜித் பிரேமதாசவும், சம்பிக்க ரணவக்கவும் முரண்பாடுகளை மறந்து கரங்கோர்க்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி விரும்புகிறது என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் அமைந்துள்ள ஊழல் எதிர்ப்பு குழு அங்கத்தவர்களை விசாரிக்கும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் நேற்று சாட்சியம் அளித்து விட்டு, ஊடகங்களிடம் உரையாற்றிய மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியதாவது,

வழமையாக அரசாங்கங்கள் பதவிக்கு வரும். பின்னர் அது விழும். அதையடுத்து புதிய அரசாங்கம் பதவிக்கு வரும். அதுவும் விழும். இன்னொரு அரசாங்கம் வரும். இதுவே வழமை. ஆனால், இன்று அரசாங்கம் விழுவதற்கு முன் நாடு விழுந்துவிட்டது. அண்டை நாடுகளிடம் கெஞ்சிக் கூத்தாடி கைமாற்று வாங்கி, மூன்று மாதங்களுக்கு ஒருமுறை, பெருங்கடன்களின் மீள் செலுத்தும் தொகையை செலுத்தி காலத்தை ஓட்டும் நிலைமைக்கு நாடு விழுந்துவிட்டது.

ஆகவே புதிதாக கட்டியெழுப்ப வேண்டியது புதிய அரசாங்கம் என்பதை விட, புதிய நாடு என்றுதான் சொல்ல வேண்டும். ஆகவே இன்று இந்நாட்டின் அரச எதிர்ப்பு சக்திகள் அனைத்தும் கரங்கோர்க்க வேண்டும். அதற்கு முன் ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாசவும், 43ஆம் படையணி தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவும் கரங்கோர்க்க வேண்டும்.

"இல்லை, இல்லை" என்ற கூக்குரலை விட இந்நாட்டில் இன்று எதுவும் இல்லை என்றாகிவிட்டது. எண்ணெய் இல்லை, எரிவாயு இல்லை, பால்மா இல்லை, உரம் இல்லை, மருந்துகள் இல்லை, எதுவும் இல்லை, சொல்லப்போனால் இந்நாட்டில் இன்று அரசாங்கமே இல்லை.

உரம் இல்லை என்று கையை விரித்து மன்றாடும் விவசாயிகளிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, "உங்கள் நிலங்களில் நெல் விளைவிக்க முடியாவிட்டால், பாசிப்பயறு விளைவியுங்கள்" என்று கூறுகிறார். இது, "பாண் இல்லாவிட்டால், கேக் சாப்பிடுங்கள்" என்று சொன்ன பிரான்ஸ் நாட்டு கொடுங்கோல் அரசியை ஞாபகப்படுத்துகின்றது. வெள்ளைப்பூண்டு ஊழலை கண்டுபிடித்து, அம்பலப்படுத்திய முன்னாள் நுகர்வோர் அதிகார சபை பணிப்பாளர் துசான் குணவர்தன, வெளிநாடு செல்லமுடியாமல் தடுக்கப்பட்டுள்ளார். இது என்ன கோலம்? குற்றவாளிகள் சுதந்திரமாக சுற்றி திரிவது ஒருபுறம் இருக்க, குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் நடவடிக்கையை எடுத்த நேர்மையான அதிகாரிகள் தண்டிக்கப்படுகிறார்கள்.

இன்று இங்கே "ஊழல் எதிர்ப்புக் குழு என்று ஏன் முன்னாள் அரசாங்க பிரமுகர்கள் மீது நடவடிக்கை எடுத்தீர்கள்" என என்னைக் கேட்டு தொந்தரவு செய்கிறார்கள். ஊழல் செய்தவர்கள் மீதான வழக்குகளை சட்டமா அதிபர் திணைக்களம் மூலம் வாபஸ் வாங்கி விட்ட நிலையில், ஊழல் செய்தவர்கள் எல்லாம் சுதந்திரமாக திரியும்போது, ஏன் நீங்கள் நடவடிக்கை எடுத்தீர்கள் என இவர்கள் என்னைக் கேட்கிறார்கள்.

நான் மனோ கணேசன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவன். எங்கள் கூட்டணி, எவருக்கும் எடுபிடி வேலை செய்யாத, ஒரு பலமான, தைரியமுள்ள சுதந்திரமான கட்சி. இது மக்களின் கட்சி. எம்மை எவரும் பயமுறுத்த முடியாது. நாங்கள் பயந்து ஒதுங்க மாட்டோம். அதை இன்னமும் பலமாக நாம் வளர்ப்போம். அது ஒன்றே எமது பலம்.

## எண்ணெய்த் தாங்கிகளுக்கான...

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள இரண்டு எண்ணெய்த் தாங்கிகளுக்கு அமெரிக்க டொலர் கொடுப்பனவை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக மின்சக்தி அமைச்சரான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

எனவே எதிர்காலத்தில் மின்வெட்டு இருக்காது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எண்ணெய்த் தாங்கிகளில் ஒன்றிற்கு பணம் செலுத்தினால், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தா பனமானது உலை எண்ணெய்க்குப் பதிலாக வெஸ்ட்கோஸ்ட் அனல்மின் நிலையத்திற்கு டீசலை விநியோகிக்கவும், சப்புகஸ்கந்தவுக்கு உலை எண்ணெயை வழங்கவும் அந்தந்த பங்குதாரர் களுடனான சந்திப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, மின்சார உற்பத்திக்கான டீசல் மற்றும் உலை எண்ணெயை வழங்க முடியும். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு இலங்கை மின்சார சபை செலுத்த வேண்டிய 93 பில்லியன் ரூபா கடனை செலுத்துவதற்கான நிதியை வழங்குமாறு திறைசேரிக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனவரி மாதம் 30 ஆம் திகதிக்குள் சப்புகஸ்கந்த மின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்தி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க முடியும் என அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

## மத்திய வங்கியினால் ...

இலங்கைக்கு வெளியில் தங்கியுள்ளவர்கள் செலுத்தும் கட்டணங்களை அந்நிய செலாவணியில் மாத்திரம் ஹோட்டல் சேவை வழங்குனர்கள் ஏற்றுக்கொள்வதை கட்டாயமாக்கி மத்திய வங்கியின் நாணயச் சபை அதிவிசேட வர்த்தமானி ஒன்றை வெளியிட்டுள்ளது.

## இந்திய மீனவர்கள்

நீதிமன்றத்தில் முன் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

எல்லைத் தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் யாழ். நெடுந்தீவு கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட 43 தமிழக மீனவர்களும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து வாக்குமூலத்தை பெறும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாகவும் மீனவர்களை இலங்கை எல்லைக்குள் கைது செய்தமையை உறுதிப்படுத்தும் நில அளவை திணைக்களத்தின் சான்றுப்பத்திரம் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் முன் நகர்த்தல் பத்திரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனைக் கவனத்திற்கொண்ட ஊர்காவற்றுறை நீதவான் கஜநிதிபாலன், சந்தேகநபர்களான மீனவர்களை இன்றைய தினம் (25) மன்றில் ஆஜர்படுத்துமாறும் அவர்களுக்கு எதிரான குற்றப்பத்திரத்தை மன்றில் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார். இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 18ஆம் திகதி இராமேஸ்வரம் – தங்கச்சிமடம் பகுதியைச் சேர்ந்த 43 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

## எரிபொருள் பாவனையை

செய்வதற்கு புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்துவதற்கு ஊக்குவிப்பதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் கேட்டுக்கொண்டார். வர்த்தக வங்கிகள் மூலம் பெறப்படும் வெளிநாட்டுப் பணத்தில் மூன்றில் ஒரு பங்கை மத்திய வங்கிக்கு மாற்றி, மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக அரச நிறுவனங்களிடம் ஒப்படைக்குமாறும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

எரிபொருள் பாவனையை குறைப்பதற்காக எரிபொருட்களின் விலை கணிசமான அளவு அதிகரிக்கப்பட்ட போதிலும், தேவை தொடர்ந்து அதிகரித்து வருவதாக தெரிவித்த அமைச்சர், உல்லாசப் பயணம், குடும்ப சந்திப்புகள், இன்பங்கள் போன்றவற்றுக்கான பயணங்கள் அதிகரித்துள்ளமையும் எரிபொருள் பாவனை அதிகரிப்பிற்கு காரணமாகும்.

இதேவேளை, கொவிட் தொற்று பரவுவதைத் தடுப்பதற்காக பொதுப் போக்குவரத்து சேவைகளுக்குப் பதிலாக தனியார் வாகனங்களின் பாவனை அதிகரித்துள்ளமை மற்றும் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக மண்ணெண்ணெய் அடுப்புகளின் பாவனை அதிகரித்துள்ளமையும் எரிபொருள் பயன்பாடு அதிகரிப்புக்கு காரணமாக அமைந்ததாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரித்து வருவதாகவும், டிசம்பரில் 74 அமெரிக்க டொலர்களாக இருந்த ஒரு பீப்பாய் கச்சா எண்ணெயின் விலை தற்போது 86 அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளதாகவும், எரிபொருள் இறக்குமதிக்கு ஒரு மாதம் 400 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

## வெளிநாட்டு தூதரகங்களுக்கு

ஜனவரி 12ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிக்கையில், இராஜதந்திர பணிகளின் உயர் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இராஜதந்திர தூதரகங்களின் தலைவர் களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தூதரகங்களின் உயர் அதிகாரிகளுக்கு கொடுப்பனவுகளாக 700 – மூவாயிரத்து 600 டொலர் வரை வழங்கப்படுவதுடன், ஏனைய அதிகாரிகளுக்கு 200 - 400 டொலர் வரை வழங்கப்படுகின்றன.

இந்த கொடுப்பனவுகள் ஒவ்வொரு நாட்டின் அதிகாரிகளுடனும் உறவுகளை வலுப்படுத்துதல், இலங்கையின் சுற்றுலா, வர்த்தகம், அரசியல், பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு உறவுகளை மேம்படுத்துதல் மற்றும் இராஜதந்திர சந்திப்புகளில் உத்தியோகபூர்வ பரிசுகளை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

வெளிநாட்டில் உள்ள தூதரக பிரதானிகள், சிறப்புப் பிரதிநிதிகள், நிரந்தரப் பிரதிநிதிகள் அல்லது சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகள், தலைமைப் பணியாளர்கள், பிற இராஜதந்திரிகள் மற்றும் வெளிநாட்டுச் சேவை அதிகாரிகள் ஆகியோருக்கு இந்த கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

நாட்டின் நற்பெயரைப் பாதுகாத்து, நாட்டைக் கண்ணியத்துடனும் சிறப்புடனும் பிரதிநிதித்துவப்படுத்தி, தங்கள் கடமைகளை மிகவும் திறம்படச் செய்யும் அதிகாரிகளுக்கு இந்த கொடுப்பனவுகள் வழங்கப்படுவதாக உயர் மட்ட வட்டாரங்கள் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த அனைத்து செலவுகளும் குறைக்கப்படும் என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

## சுயநிர்ணய உரிமையுடன் ...

கூட்டாக இந்திய பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறது. இதன்படி நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் ஸ்ரீ அரியாலை கலைமகள் சனசமூக நிலையத்தில் கூட்டமொன்று இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ், மகளிர் அணி செயலாளர் வாசுகி சுதாகர், யாழ். மாநகர சபை உறுப்பினர் ரஜீவ்காந் உள்ளிட்ட சிலர் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தின்போது 'டெல்லியின் காவடிகள்' என்ற பெயரில் நாடகமொன்றும் அரங்கேற்றப்பட்டது.

## இவ்வருட இறுதிக்குள்...

**யோ.தர்மராஜ்**

அரசாங்கத்திலுள்ள சில சில குறைபாடுகளை நிவர்த்தி செய்தாக வேண்டும். புதிய வருடத்தில் பின்னூட்டல் ஒன்றை செய்வதோடு, உறுதியளித்ததன் படி, இவ்வருடம் நிறைவடைவதற்குள் புதிய அரசியலமைப்பை நாட்டுக்கு வழங்குவதே எங்களுடைய எதிர்ப்பார்ப்பாகும் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்திலுள்ள சில சில குறைபாடுகளை நிவர்த்திசெய்தாக வேண்டும். புதிய வருடத்தில் பின்னூட்டல் ஒன்றை செய்வது என்பது எங்களுடைய கலாசாரத்துக்குட்பட்டது. அதன்படி, அனைத்து அமைச்சர்களுக்கும் ஒவ்வொரு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, அமைச்சர்கள் தங்களுடைய வரையறைகளுக்குட்பட்டு பிரதிபலனை காட்ட வேண்டும்.

ஒரு அமைச்சர் மற்ற அமைச்சரின் பொறுப்பில் தலையிடுவது, விமர்சனம் செய்து, பொது வெளியில் குற்றச்சாட்டுவது சிறந்த ஆட்சிக்கு பொருத்தமற்றது. இவ்வாறு பல அமைச்சர்கள் தொடர்ந்தும் செயற்படுகின்றனர். குறிப்பாக, நிதி கிடைக்கவில்லையெனக் கூறிக்கொண்டிருக்கின்றனர். எனினும், நாட்டில் நிதி நெருக்கடி இருக்கும் நிலையில், வேலைத்திட்டங்களுக்கு தேவையான நிதியை பெற்றுக்கொள்வது கடினம். ஆனால், இருப்பதைக் கொண்டு எவ்வாறான பிரதிபலனை பெறமுடியும் என்பதை பார்க்கவேண்டும். அத்தோடு, இவ்வாறான விடயங்கள் தொடர்பாக அரசுக்குள்ளே பேசவேண்டும்.

அத்தோடு, சில அமைச்சர் சில விடயங்களுக்கு பொறுப்பேற்க முடியாது எனக் கூறுகின்றனர். கூட்டுப்பொறுப்பென்பது அனைத்து விடயங்களுக்கும் பொருத்தமானது. எனவே, கடந்த காலங்களில் ஏற்பட்ட தவறுகளை எதிர்வரும் மூன்று வருடங்களில் நிவர்த்தி செய்யவேண்டும். அப்போது, ஜனாதிபதியின் கொள்கை பிரகடனத்தை நிறைவேற்றுவதற்கு போதுமான காலப்பகுதி இருக்கின்றது. இந்த காலப் பகுதியை முழுமையாக பயன்படுத்த வேண்டும்.

இதேவேளை, புதிய வருடங்களில் புதுப் புது வேலைத்திட்டங்கள் முன்னெடுப்படவுள்ளது. அதன்படி, புதிய அரசியலமைப்பு கொண்டு வரப்படும் என ஜனாதிபதி ஏற்கனவே உறுதியளித்திருந்தார். இந்த நிலையில், புதிய அரசியலமைப்பு உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் செயற்பாடுகள் இறுதி கட்டத்திலுள்ளது.

எதிர்வரும் 2 அல்லது 3 மாதங்களில் தங்களுடைய செயற்பாடுகள் நிறைவுசெய்து புதிய வரைபு அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படும். புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்த குழுவிடம் முழுமையாக ஒப்படைக்கப்படவில்லை. அவர்கள் முன்வைக்கப்படும் யோசனைகள் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு, நாடாளுமன்ற குழுவில் மாற்றங்கள் செய்த பின்னரே முழுமையான விவாதம் முன்னெடுக்கப்படும்.

அதன்படி, இந்த வருடம் நிறைவடைவதற்குள் புதிய அரசியலமைப்பை நாட்டுக்கு வழங்குவதே எங்களுடைய எதிர்பார்ப்பாகும். இதில் தேர்தல் மாற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் - என்றார்.

## துண்டிப்பில்லாத...

**யோ.தர்மராஜ்**

நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய மின்சக்தி நெருக்கடிக்கு மின்துண்டிப்பில்லாது தீர்வு காணமுடியும் என நம்புவதாக தெரிவித்துள்ள மின்சக்தி அமைச்சரான காமினி லொக்குகே, ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைக்கு பின்னர் மின் துண்டிப்பில்லாது மின் விநியோகத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைக்கு பின்னர் ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஒன்றரை மணித்தியாலம் அல்லது இரண்டு மணித்தியாலம் மின் வெட்டப்படும் எனக் கூறப்படுகின்றன. ஆனால், அமைச்சும் அரசாங்கமும் மின் வெட்டின்றியே எரிபொருள் நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கும் முன்னோக்கிச் செல்வதற்கு முயற்சிக்கின்றோம்.

மின் உற்பத்திக்கு தேவையான எரிபொருள் தட்டுப்பாடுகள் காணப்பட்டன. எனினும், ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருள் கிடைக்கப்பெற்றது. அதனைக் கொண்டே தற்போது மின் உற்பத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால், அந்த எரிபொருளும் தற்போது நிறைவடைகின்றன. எனவே, அரசு மற்றும் எரிபொருள் கூட்டுத்தாபனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியுடன் நேற்றுக் காலை கலந்துரையாடினோம். மத்திய வங்கி மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் கலந்துரையாடி சில தீர்மானங்களை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

அதன்படி, எரிபொருளை கொள்வனவு செய்தவதற்கு தேவையான டொலரை வழங்குமாறு ஜனாதிபதி மத்திய வங்கிக்கு உத்தரவிட்டுள்ளார். அதற்கமைய, 35 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல், 37 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் டீசல் அடங்கிய கப்பலுக்கு டொலரை வழங்குவதற்கு மத்திய வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

இதனால், மின்சார சபைக்கு தேவையான எரிபொருளை தடையின்றி வழங்குவதற்கு எரிபொருள் கூட்டுத்தாபனமும் இணக்கம் தெரிவித்துள்ளதால் மின்வெட்டு அமுல்படுத்தப்படாது.

கடந்த வாரம் பல தொழிற்சங்கங்கள் 24 மணி நேரமும் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என கூறியது. 24 மணி நேர மின்வெட்டால் நாட்டில் மெழுகுவர்த்தி தட்டுப்பாடு ஏற்படும் என சிலர் எச்சரித்தனர். தாங்கள் பொதுமக்களை விட்டு ஓடவில்லை. மின்வெட்டு இல்லாமல் நாட்டை முன்னெடுப்போம் என நம்பிக்கையுள்ளது.

கடந்த வாரம் மின்வெட்டு அமுல்படுத்தப்படாததால், இந்த உறுதிமொழி நிறைவேற்றப்பட்டது. நாடளாவிய ரீதியில் பதிவாகியுள்ள சில மின்சாரத் தடைகள் தொடர்பில் விசாரணையை முன்னெடுக்க பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இந்த சம்பவங்கள் குறித்து ஆராய நிபுணர் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. அறிக்கை கிடைத்தவுடன் ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுப்போம் - என்றார்.

## ஒமிக்ரொன் பரவினால்...

இலங்கையின் பொருளாதாரம் மேலும் பாதிக்கப்படுவதை தடுப்பதற்கு அரசாங்கம் ஒமிக்ரொனை கட்டுப்படுத்தவேண்டும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒமிக்ரொன் வேகமாக பரவுகின்றது என தெரிவித்துள்ள ரணில் விக்ரமசிங்க மக்கள் பாதிக்கப்பட்டால் அவர்களால் தொழில்புரியவோ அல்லது பொருளாதாரத்திற்கு பங்களிப்பு வழங்கவோ முடியாது என சுட்டிக்காட்டியுள்ளார்.

பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியை சந்திப்பதை தடுப்பதற்காக அரசாங்கம் ஒமிக்ரொனை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுகாதார பணியாளர்கள் கொரோனா வைரஸினை கட்டுப்படுத்துவதற்காக கடுமையாக பாடுபட்டனர் என தெரிவித்துள்ள முன்னாள் பிரதமர், ஆனால் ஐரோப்பா ஒமிக்ரொனால் என்ன பாடுபடுகின்றது என்பதை நாங்கள் பார்க்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாவில் 50 வீதமானவர்கள் ஒமிக்ரொனால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களால் தொழில்புரிய முடியாத நிலை காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒமிக்ரொன் வேகமாக பரவக்கூடியது ஆனால் உயிரிழப்புகள் குறைவு என தெரிவித்துள்ள முன்னாள் பிரதமர், ஒருவர் பாதிக்கப்பட்டால் அவரால் வேலைக்கு செல்ல முடியாது இதனால் பொருளாதாரம் பாதிக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

புதிய வைரஸ் குறித்தும் நடைமுறையில் உள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் பொதுமக்களுக்கு அரசாங்கம் அறிவிக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

அனைவரும் பூஸ்டர் செலுத்திக்கொள்ள வேண்டிய தேவையில்லை என தெரிவித்துள்ள அவர் இது பரவலை தடுப்பதற்கு அவசியமானது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## நீதியை பெற்றுக்கொடுக்க ...

**யோ.தர்மராஜ்**

ஏப்ரல் தாக்குதல் தொடர்பாக எங்கள் மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க நாங்கள் எங்களால் முடிந்த அனைத்தையும் முயற்சிகளையும் செய்தோம். ஆனால் இந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்தன. எனவே, ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேசத்திற்கு செல்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயவேண்டும் என பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

பொரளை தேவாலயத்தில் வைக்கப்பட்ட கைக்குண்டு தொடர்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சூம் தொழில்நுட்ப கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு வைக்கப்பட்ட சம்பவத்தின் உண்மைத்தன்மைகள் அனைத்தையும் வெளியிடும் வரை நாங்கள் இந்த அரசாங்கத்திற்கு எதிராக நாங்கள் போராட்டங்களை முன்னெடுப்போம். இந்த அரசாங்கமும் பொலிஸ் துறையும் நடத்தும் நாடகம் எங்களுக்கு தெளிவாக புரிகின்றது. இதனாலேயே, அன்று காலை முதலுள்ள சிசிரிவி காட்சிகளை பார்க்கும்படி அருட்தந்தையரிடம் கூறினேன்.

இவ்வாறு பார்க்கும்போது, இந்த குண்டை வேறு யாரும் கொண்டுவந்து வைத்தார்களா என்பதை எங்களால் கண்டறியமுடியும். அதற்கமைய எங்களால் கண்டறியவும் முடிந்தது. ஆனால், முனி என்ற நபரின் பக்கம் திசைத் திருப்பிவிட்டு தப்பிப்பதற்கு பொலிஸார் முயற்சித்தனர். அதனையே பொலிஸ் அமைச்சரின் உரையில் கூறினார். ஆனால், மனசாட்சியுள்ள எந்தவொரு மனிதராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே, இந்த விடயத்திலிருந்து அரசாங்கத்தையும் பொலிஸையும் நழுவவிட மாட்டோம்.

நீதிமன்றங்கள் இருக்கின்றன. அவற்றின் மீது நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளதால் நீதிமன்றத்திற்குச் சென்று குறித்த நபருக்கு இழைக்கப்பட்ட அநீதியை நிவர்த்திசெய்வோம். சம்பவம் இடம்பெற்று காலம் கடப்பதற்கு முன்னரே இவர்தான் செய்தது என பொலிஸ் அமைச்சர் கூறினார். அதே போன்று, வைத்தியசாலையில் வைத்த குண்டையும் அவர் மீது திருப்பியுள்ளது.

உண்மையில் மனிதர்களை அடித்து வாக்குமூலம் பெற்றுக்கொள்ளும் பொலிஸாரின் நடவடிக்கைகளை கடுமையாக நிராகரிக்கின்றோம். ஆகவே, குறித்த நபர் மற்றும் ஏனைய மூவருக்கும் இடம்பெற்ற அநீதிக்கு நீதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்போம்.

இதேவேளை, ஏப்ரல் தாக்குதல் தொடர்பாக எங்கள் மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க நாங்கள் எங்களால் முடிந்த அனைத்தையும் செய்தோம். ஆனால் இந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்தன. ஆனால் சர்வதேசத்திற்கு செல்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய வேண்டும். குறிப்பாக, ஐக்கிய நாடுகள் சபைக்குச் செல்வது குறித்த ஆராய வேண்டும். இந்த வழக்கை முன்னெடுத்துச் செல்வதற்காக, இலங்கையுடன் உறவுகளை வைத்திருக்கும் சக்தி வாய்ந்த நாடுகளையும் நாடுவோம்.

கத்தோலிக்க திருச்சபையானது உலகெங்கிலும் உறவுகளைக் கொண்ட ஒரு சர்வதேச அமைப்பாகும். மேலும், பேராயர் என்ற முறையில் தனது சக பேராயர்களுடன் இந்த வழக்கு தொடர்பாக கலந்துரையாடி வருகின்றோம். தேசிய ரீதியில் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயே சர்வதேசத்தை நாடுவது தொடர்பான நடவடிக்கைகளை எடுக்கவில்லை - என்றார்

## புலமைப்பரிசில் வினாத்தாள்...

2021, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாப்பத்திரங்கள், பரீட்சை தினத்திற்கு முன்பாகவே வெளியானதாக கூறப்படும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாணவர்களிடம் வினாத்தாள்கள் கையளிக்கப்பட்டதன் பின்னர், சில வினாத்தாள்கள் நிழற்படம் எடுக்கப்பட்டு சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி.தர்மசேன கூறியுள்ளார்.

இதனால் பரீட்சைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை (22) நடைபெற்ற 2021, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 340,508 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

இதனிடையே, பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணிகள் எதிர்வரும் 31ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## அரசமைப்பு தொடர்பான

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ புதிய அரசமைப்பினை உருவாக்குவதற்காக தாம் உருவாக்கியுள்ள நிபுணர் குழு குறித்து குறிப்பிட்டார். அதனை அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்தின் முன்னிலையில் விவாதத்திற்கு சமர்ப்பிப்பதாக உறுதியளித்துள்ளதாகவும் இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

எனது வாழ்க்கையில் இது தொடர்பான பல விடயங்களில் ஈடுபட்டவன் என்ற அடிப்படையில் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு சென்றவேளை அவர்கள் அரசமைப்பு தொடர்பான விடயங்களில் ஆர்வமாக இல்லை என்பதை நான் அவதானித்தேன். அவர்கள் வாழ்வாதாரத்தையும் அபிவிருத்தியையுமே விரும்புகின்றனர் - அனைத்து அரசியல் கட்சிகளும் இதனை அடிப்படையாக வைத்தே செயற்படவேண்டும்.

இரண்டு விடயங்களில் ஒத்துழைப்பு இடம்பெறலாம் என நான் கருதுகின்றேன்.

ஒன்று அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய புதிய அரசமைப்பினை உருவாக்கும் யோசனை தொடர்பானது - இரண்டாவது வடக்கு கிழக்கை எவ்வாறு அபிவிருத்தி செய்யவேண்டும் என்பது தொடர்பான புரிந்துணர்விற்கு வருவது. ஏனென்றால் மக்கள் நாங்கள் அரசமைப்பு குறித்து தீர்மானிக்கும் வரை தங்கள் வாழ்வாதாரம் எதிர்காலத்திற்காக காத்திருக்கப்போவதில்லை - எங்கள் முன்னாள் இரண்டு சவால்கள் உள்ளன. முதலாவது அந்நிய செலாவணி நெருக்கடி அது தற்போது பாதிப்பை ஏற்படுத்திவருகின்றது.

இரண்டாவது நிதிசார்ந்த சவால் – இது எங்களின் சக்திக்கு அப்பால் நாங்கள் வாழ்ந்ததால் சுதந்திரத்தின் பின்னர் சுவீகரிக்கப்பட்ட பாரம்பரியம்.

அமெரிக்க வர்த்தக ஜாம்பவானும் முதலீட்டாளருமான வரென்பவட் அலை குறையும்போது யார் நிர்வாணமாக நீந்துகின்றார்கள் என்பது தெரியவரும் எனத் தெரிவித்துள்ளார். பெருந்தொற்று உண்மையான அலையை உருவாக்கியுள்ளது என நான் கருதுகின்றேன். இது நாங்கள் எதிர்கொள்ளும் உண்மையான சவால். நிலைமையை ஓரளவு ஸ்திரப்படுத்துவதற்கு இந்தியா முன்வந்துள்ளது. ஆனால் நாங்கள் அடிப்படை காரணங்களுக்கு தீர்வை காணவேண்டும்.

இலங்கையின் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ 2021 டிசம்பரில் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டவேளை நாங்கள் நான்கு ஒத்துழைப்பு தூண்களுக்கு குறுகிய காலத்திற்கு இணக்கம் தெரிவித்தோம்.

முதலாவது உணவு மற்றும் மருத்துவ பொருட்களுக்கான அவசர உதவி - சமீபத்தில் நிதியமைச்சருடன் மேற்கொண்ட மெய்நிகர் சந்திப்பின் பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் ஒரு பில்லியன் கடனுதவியை அறிவித்தார்.

இலங்கை ஜனநாயக நாடு அங்கு பலவிதமான குரல்கள் ஒலிக்கும். இன்று உலகம் முழுவதிலும் துருவமயப்படுத்தல் பிரிவினை பூதாகரமயப்படுத்துதல் போன்றவை காணப்படுகின்றன. இது இலங்கைக்கு மாத்திரம் தனித்துவமான விடயமல்ல இந்த சூழமைவின் அடிப்படையிலேயே இதனை நாங்கள் பார்க்கவேண்டும். சமூக ஊடகங்கள் மற்றும் தங்கள் அடையாளங்களில் கவனம் செலுத்தும் இன்றைய உலகில் பிரிவினைகள் பலவிதமாக உள்ளன. இதனை இந்த சூழமைவிலேயே வைத்துப்பார்க்கவேண்டும்.

வரலாறு முழுவதும் எங்களது மிகப்பெரும் சவால்களும் சந்தர்ப்பங்களும் இந்து சமுத்திரத்திலிருந்தே வந்துள்ளன. நாங்கள் போர்த்துக்கீசர்கள், ஒல்லாந்தர்கள் மற்றும் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் கீழ் காணப்பட்டோம். அனைத்திற்கும் எங்கள் கேந்திர முக்கியத்துவமே காரணமாக காணப்பட்டது.

1980களில் இலங்கை அமெரிக்காவுக்கு நெருக்கமாக உள்ளது என கருதப்பட்டவேளை இந்தியாவுடன் பதற்றம் காணப்பட்டது. அதனால் விளைவுகள் ஏற்பட்டன.

சீனா புதிய நாடு. இந்த விடயத்தினை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து நாங்கள் எங்கள் வரலாறுகளில் இருந்து பாடங்களை கற்றுள்ளோம். சிலவேளைகளில் நாங்கள் தவறிழைக்கின்றோம். பாடங்களை கற்றுக்கொள்கின்றோம். இதுவே எங்கள் தலைவிதி நாடொன்றின் யதார்த்தம். நாங்கள் இதனைக் கையாளவேண்டும்.

LK Newspapers Viber Community

# இன்றைய ராசி பலன்

25.01.2022 செவ்வாய்க்கிழமை தை 12

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**நட்சத்திரம்: சித்திரை** காலை 10.55 வரை **சுவாதி** காலை 10.55 -26.01.2022 காலை 10.07 வரை **யோகம்: திருதி** காலை 9.13 வரை **சூலம்** காலை 9.13 - 26.01.2022 காலை 6.52 வரை **திதி: அமர பட்ச அஷ்டமி** காலை 7.48 26.01.2022 காலை 6.25 வரை **முற்கரணம்: பவம்** காலை 7.48 வரை **பிற்கரணம்: பாலவம்** காலை 7.48 - இரவு 7.10

**சுப நேரங்கள்** காலை 10.55 -பி.ப. 12.22

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்** மாலை 3.20 - 4.48

**குளிகை காலம்** பிற்பகல் 12.23 - 1.51

**எமகண்ட காலம்** காலை 9.26 - 10.54

**துர் முகூர்த்தம்** காலை 8.51 - 9.38 இரவு 11.10 - 11.59

*லோகநாயகி ஸஹஸ்ர சீரஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி*

**மேஷம்:** சுயத்தொழில் வருவாய் அதிகரிக்கலாம். திருமண வாழ்வில் மகிழ்ச்சி நிலவும். அறிவுபூர்வமான நட்பின் நன்மை கிடைக்கலாம். கடன் பெற இன்று சாதகமான நாளாக இல்லை.

**ரிஷபம்:** பிள்ளைகளின் கடமைகள் நிறைவேற்றத்தில் கவனம் தேவைப்படலாம். புதிய தொழில் தொடங்குவதில் சிறிய தடைகள் ஏற்படலாம். தரகு தொழில் வருமானத்தில் குறைவு உண்டாகலாம். இறைவணக்கம் நன்மை.

**மிதுனம்:** கடந்த கால சில எதிர்மறை விடயங்கள் மீண்டும் பாதிப்பை உண்டாக்கலாம். காதல் உறவின் வரம்பில் கவனம் தேவைப்படலாம். உங்கள் உணர்வுகளை சிலர் மதிக்காமல் இருக்கலாம். மன அமைதி பெற இறை தியானம் நன்மை.

**கடகம்:** வணிகத்தில் ஒரு பெரிய ஒப்பந்தம் கிடைக்கப் பெறலாம். அன்னையின் உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். உடல்நலத்தில் கிருமி தொற்று ஏற்படாமல் இருக்க கவனம் தேவைப்படலாம். அன்றாட வழக்கங்களில் சிறு பிரச்சினை தோன்றலாம். இறைவணக்கம் தேவை.

**சிம்மம்:** பணியிடங்களில் மேலதிகாரிகளுடன் சிறந்த ஒருங்கிணைப்பு ஏற்படலாம். அரசியல் சம்பந்தப்பட்டவர்களுக்கு உயர் பதவி கிடைக்கலாம். சிலருக்கு பணியிட மாறுதல் உண்டாகலாம். வணிக இலாபம் மேம்படும்.

**கன்னி:** வேலைகளில் பணித்திறன் மேம்படும். சில பிரச்சினைகளின் தீர்வு மகிழ்ச்சி தரும். காதல் உறவில் பரஸ்பர நம்பிக்கை உயரலாம். இன்று உற்சாகமான, சுறுசுறுப்புடன் உள்ள நாளாக அமையலாம்.

**துலாம்:** இல்லத்தில் ஆன்மீக சடங்குகள் இடம்பெறலாம். நிதி சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு சாதகமான நல்ல நாள். உடல்நலத்தில் சிறிய பலவீனம் உணரப்படலாம்.

**விருச்சிகம்:** தேவையற்ற விடயங்களில் சிறிய பண இழப்பு ஏற்படலாம். இன்று பணிச்சுமையை தவிர்ப்பது நல்லது. மக்கள் அதிகம் கூடும் இடங்களை தவிர்த்து, உடல்நலத்தில் கிருமி தொற்று உண்டாகாமல் இருக்க கவனம் தேவைப்படலாம். இன்று அமைதியை கடைபிடித்தல் நல்லது.

**தனுசு:** சமூகத்தில் கௌரவம் மேம்படும். காணி, வீடு, சொத்து சம்பந்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகளில் இலாபங்கள் கிடைக்கப் பெறலாம். ஒரு புதிய திட்டப் பணி தொடக்கம் ஏற்படலாம். வேலைகளில் உங்களுக்கு மேலதிக அதிகாரம் கிடைக்கலாம்.

**மகரம்:** உறவுகளால் சுபச் செய்திகள் கிடைக்கலாம். உடல்நலம் சீராகும். தொழில்நுட்ப ஆர்வம் மேம்படும். நிதி விடயங்களுக்கு சாதகமான நாள். வேலைத்தளங்களில் சக பணியாளர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கலாம்.

**கும்பம்:** புதிய தொழில் தொடக்கம் ஏற்படலாம். மகிழ்வான பயணம் உண்டாகலாம். பணியிடங்களில் வேலைகளில் இன்று உற்சாகம் குறையலாம். நண்பர்களுடன் இன்று இனிமையான நாளாக அமையலாம்.

**மீனம்:** பணிகளில் சக ஊழியர்களால் சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம். செரிமான பிரச்சினைகள் ஏற்படலாம். நண்பர்களின் ஆதரவு குறையலாம். வரி மற்றும் சில பிரச்சினைகளால் சிறிய மனக் கவலை தோன்றலாம். இறைவணக்கம் தேவை.

சந்திராஷ்டமம்: உத்தரட்டாதி நட்சத்திரத்திற்கு அ.கா 5.02 - 26.01.2022 அதிகாலை 4.21 வரை.

# வடக்கு தொண்டர் ஆசிரியர்கள் நியமனம் கோரி ஆளுநர் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம்

*(யாழ். செய்தியாளர்)*

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள் வடமாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு நடவடிக்கையில் நேற்று (24) ஈடுபட்டனர்.

கவனயீர்ப்பில் ஈடுபட்ட தொண்டர் ஆசிரியர்கள் தெரிவிக்கையில்,

நாங்கள் பல இன்னல்களுக்கு மத்தியில் பல வருடங்களாக தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி வருகின்றோம்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட, கணவனை இழந்த மற்றும் விசேட தேவையுடையவர்களை கொண்ட குடும்பத்தில் இருந்து தான் நாங்கள் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி வருகின்றோம்.



இந்நிலையில், கடந்த 21ஆம் திகதி அமைச்சினால் கல்வி வலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் 60 தொண்டர் ஆசிரியர்கள் வடக்கு மாகாணத்தில் உள்ளார்கள் என்றும் அவர்களது நியமனம் தொடர்பாக ஆராயுமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் வடக்கு மாகாணத்தில் 210 தொண்டர் ஆசிரியர்கள் உள்ளோம். 60 தொண்டர் ஆசிரியர்கள் என குறித்த கடிதத்தில் எவ்வாறு வந்துள்ளது என எமது வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கத்தினை வினவியபோது அவர்கள் தமக்கு இது தொடர்பாக எதுவும் தெரியாது என்று கூறுகின்றனர்.

நாங்கள் இது தொடர்பாக அமைச்சினை வினவியபோது, வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கம் அனுப்பிய பெயர் விபரங்களின் அடிப்படையிலேயே தாங்கள் குறித்த கடிதத்தை அனுப்பியதாக தெரிவிக்கின்றனர்.

மிகுதி 110 பேருடைய பெயர்களும் அந்த கடிதத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என நாங்கள் இன்றுகவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

எனவே, உரிய அதிகாரிகள் எமது நிலையை கருத்தில் கொண்டு எமக்கான நியமனத்திற்கு ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# வவுனியா இலுப்பையடியில் பிள்ளையார் சிலை மாயம்



*(வவுனியா செய்தியாளர்)*

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் காணப்பட்ட பிள்ளையார் சிலை மாயமாகியுள்ளது.

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் உள்ள இலுப்பை மரத்தின் கீழ் சிறிய கூடாரம் அமைக்கப்பட்டு பிள்ளையார் சிலை வைத்து நீண்டகாலமாக வழிபடப்பட்டு வந்தது.

வவுனியா நகரின் இலுப்பையடிப் பகுதியில் உள்ள வர்த்தகர்கள், முச்சக்கர வண்டி சாரதிகள், அப் பகுதியால் பயணத்தில் ஈடுபடும் மக்கள் என பலராலும் வழிபடப்பட்டு வந்த பிள்ளையார் சிலையே மாயமாகியுள்ளது.

இனந்தெரியாத நபர்கள் குறித்த சிலையை அங்கிருந்து அகற்றியுள்ளதுடன், சிலை இருந்த இடம் வெறுமையாகக் காட்சியளிக்கின்றது.




பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரச முகாமைத்துவ சேவையாளர்கள் சங்கத்தினரால் மாகாண சபைகள் உள்ளூராட்சி விவகாரங்கள் அமைச்சுக்கு முன்பாக நேற்று (24) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

# வியாழேந்திரன் வீட்டுக்கு முன்பாக இளைஞர் படுகொலை விவகாரம்: இரு சாட்சியங்கள் தொடர்பான விசாரணைக்கு விண்ணப்பம்

## நகர்த்தல் பத்திரம் தாக்கல்செய்தார் சுமந்திரன் எம்.பி.

*(கனகராசா சரவணன்)*

இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் வீட்டிற்கு முன்னால் இளைஞன் ஒருவர் படுகொலை செய்யப்பட்டபோது அமைச்சர் தனது வீட்டிலே இருந்தார் என்றும் அதற்கு பின்னர் தான் அவர் அங்கிருந்து வெளியேறிச் சென்றார் என்ற சாட்சியங்கள் சம்பந்தமாகவும், சம்பவம் தொடர்பாக அவருடைய தொலைபேசியிலிருந்து பொலிஸாருக்கு தகவல் கொடுத்தது தொடர்பாக விசாரிக்கவேண்டும் என நகர்த்தல் பத்திரம் மூலம் நேற்று திங்கட்கிழமை (24) நீதிமன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கடந்த ஜூன் மாதம் 21ஆம் திகதி இராஜாங்க அமைச்சரின் வீட்டின் வாசலில் படுகொலை செய்யப்பட்ட இளைஞன் மகாலிங்கம் பாலசுந்தரம் தொடர்பான வழக்கு நேற்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்திலே நகர்த்தல் பத்திரம் செய்யப்பட்டு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதில் படுகொலை செய்யப்பட்ட இளைஞன் சார்பில் சட்டத்தரணி கமலநாதன், ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் ஆஜராகிய பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த படுகொலை தொடர்பாக மட்டக்களப்பு பொலிஸார் உகந்த முறையில் இதற்கு விசாரணை செய்யவில்லை என்ற காரணத்தினால் ஏறாவூர் பொலிஸாருக்கு பாரப்படுத்தப்பட்டிருந்தது.

படுகொலை செய்யப்பட்டவரின் பெற்றோர் சார்பாக சட்டத்தரணி கமலதாஸுடன் நான் நீதிமன்றில் ஆஜராகி இந்த வழக்கை வேறொரு பொலிஸ் நிலையத்திற்கு மாற்றுமாறு விண்ணப்பித்தபோது ஏறாவூர் பொலிஸார் உகந்த முறையிலே விசாரணை செய்யவில்லை எனவும் ஏற்கனவே இது இரண்டாம் தடவையாக கரடியனாறு பொலிஸாருக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் நீதவான் அறியப்படுத்தினார்.

அதேவேளை, நீண்ட நாட்களாக சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கை வராமல் இருந்த முறைப்பாட்டையும் செய்தோம். அது சில நாட்களுக்கு முன் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரதியை பெற்றுக் கொள்ளலாம் என நீதவான் தெரிவித்தார்.

இந்த சம்பவம் நடந்தபோது குறித்த அமைச்சர் தனது வீட்டிலே இருந்தார் என்றும் அதற்கு பின்னர் தான் அவர் அங்கிருந்து வெளியேறிச் சென்றார் என்ற சாட்சியங்கள் சம்மந்தமாக விசாரிக்கவேண்டும். அடுத்தது இந்தச் சம்பவம் சம்மந்தமாக பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததே அமைச்சர் தான். அவர் தன்னுடைய தொலைபேசியிலிருந்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு தகவல் கொடுத்ததாக நீதிமன்றத்தில் பதிவாகியிருக்கிறது.



ஆகையினால், அந்த தொலைபேசி அந்த நேரத்திலே எங்கிருந்தது என்பது இலகுவாக விசாரித்து அறியக்கூடிய ஒரு விடயம். அது மட்டக்களப்பில் இருந்தா அல்லது கொழும்பில் இருந்தா அந்த அழைப்பு சென்றது? என இலகுவாக அறிய முடியும். ஆகவே, அதனையும் விசாரிக்குமாறு கோரிக்கை விடுத்தோம்.

நேற்றைய தினம் நகர்த்தல் பத்திரம் ஊடாக இந்த வழக்கு நீதிமன்றத்திலே எடுத்துக் கொள்ளப்பட்டமையினாலே குறித்த பொலிஸார் மன்றில் ஆஜராகியில்லாத காரணத்தாலே அடுத்த தினமான பெப்ரவரி 2ஆம் திகதி வழக்கு விசாரணையின்போது இந்த விண்ணப்பங்களை பதிவு செய்யுமாறும் அந்தவேளையில் குறித்த உத்தரவை தான் பிறப்பிப்பதாகவும் நீதவான் சொல்லியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# எதிர்வரும் இரண்டு வாரங்கள் மிகவும் தீர்மானம் மிக்கவை

## அவதானமாக செயற்படுமாறு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் இரண்டு வாரங்களில் பொதுமக்கள் சுகாதார வழிமுறைகளை பின்பற்றாமல் செயற்படுவார்களாயின், சுகாதாரப் பிரிவினர் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் எனவும் அச்சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அச்சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், கொரோனா தொற்றுக்குள்ளாகி அடையாளம் காணப்படும் நோயாளர்களின் எண்ணிக்கையை விட, அடையாளம் காணப்படாமல் இருக்கும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், இந்நாட்களில் பாடசாலைகளில் அதிகளவான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். அத்தோடு பாடசாலை



மாணவர்களின் பாதுகாப்பு குறித்து பாடசாலை நிர்வாகம் மற்றும் பெற்றோர்கள் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

குறிப்பாக, இந்நாட்களில் பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங்களில் அதிகளவான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதாக தெரிவித்த உபுல் ரோஹண, எதிர்வரும் இரண்டு வாரங்களில் பொதுமக்கள் சுகாதார வழிமுறைகளை பின்பற்றாமல் செயற்படுவார்களாயின், சுகாதாரப் பிரிவினர் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

# 300 கிலோ ஹெரோயினுடன் தென்கடலில் பயணித்த படகு;

## விசேட சுற்றிவளைப்பில் 11 பேர் கைது

நாட்டின் தெற்கு கடற்பரப்பில் 300 கிலோ ஹெரோயினுடன், இலங்கையர்கள் சென்ற படகு ஒன்று கடற்படையினரால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

அரச புலனாய்வு சேவை மற்றும் கடற்படையினர் இணைந்து மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின்போது, குறித்த படகு கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சந்தேகநபர்கள் 11பேரை கைது செய்துள்ளதோடு, அவர்களிடமிருந்த 300 கிலோ ஹெரோயின் போதைப்பொருளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

# கல்லடியில் பூட்டியிருந்த வீட்டை உடைத்து 21 பவுண் தங்க ஆபரணங்கள் கொள்ளை

*(கனகராசா சரவணன்)*

மட்டக்களப்பு - கல்லடி டச்பார் வீதியில் பூட்டியிருந்த வீடு ஒன்றின் கூரை ஒன்றை கழற்றி அங்கிருந்த 21 பவுண் தங்க ஆபரணங்கள் 70 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையர்களால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (23) கொள்ளையிடப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள குறித்த வீட்டைச் சேர்ந்த உரிமையாளர் தனது மகனின் பட்டமளிப்பு விழாவிற்காக கடந்த 21ஆம் திகதி வீட்டை பூட்டிவிட்டு குடும்பமாக கண்டிக்கு சென்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (23) வீட்டிற்கு வந்து கதவை திறந்துள்ளனர். அதன்போது வீட்டின் கூரையை கழற்றி உள்நுழைந்த கொள்ளையர்கள் அலுமாரியில் இருந்த 21 பவுண் தங்க ஆபரணங்கள் மற்றும் 70 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து பொலிஸார் நேற்று திங்கட்கிழமை (24) அம்பாறையில் இருந்து மோப்ப நாய்கள் கொண்டுவரப்பட்டு தடயவியல் பிரிவு பொலிஸார் அழைக்கப்பட்டு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஹெரோயின் விநியோகித்த பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

*(அநுராதபுரம் செய்தியாளர்)*

கொழும்பு பகுதியிலுள்ள போதைப்பொருள் வியாபாரி ஒருவருடன் இணைந்து அநுராதபுரம் பகுதிக்கு ஹெரோயின் போதைப்பொருளை விநியோகித்துவந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரையும் அவருடைய நண்பர் ஒருவரையும் அநுராதபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய நேற்று முன்தினம் 23ஆம் திகதி மாலை அநுராதபுரம் விமான நிலைய வீதியிலுள்ள கைது செய்யப்பட்ட சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிளின் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்துள்ளதுடன் 15 கிராமும் 200 மில்லிகிராமும் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருளினை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரும் 32, 29 வயதுடைய விமான நிலைய வீதி, அநுராதபுரம் மற்றும் கொழும்பு பகுதிகளை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் அநுராதபுரம் வலய போக்குவரத்து பொலிஸ் பிரிவில் கடமை செய்து வந்தவர் என்பது மேலும் தெரியவந்துள்ளது. அவர் இதற்கு முன்னர் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தின் மது ஒழிப்பு பிரிவில் கடமை செய்துள்ளதுடன் குடு அஞ்சு எனப்படும் பெயர் போன போதைப்பொருள் வர்த்தகர் போன்றவர்களுடனும் இவருக்கு தொடர்புகள் உண்டு என்பது மேலதிக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

LK Newspapers Viber Community

நாடு வங்குரோத்து நிலையை நோக்கிச் செல்லும் தற்போதைய சூழ்நிலை ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலுக்குத் தயாராகும் நேரமல்ல. அதற்கு முன்னர் எதிர்வரும் சில மாதங்களில் நாடு, மியன்மார் மற்றும் வடகொரியா போன்ற நிலைமைக்கு செல்வதை தடுப்பதற்கு என்ன செய்வது என்பதே முக்கியம். எனவே, இந்த நாட்டை மீட்கும் புரட்சியை நாடாளுமன்றத்திலிருந்தே ஆரம்பிப்போம். அதற்கு அனைவரும் ஒன்றிணையுங்கள் - என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க அழைத்துவிடுத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்கவின் தலைமையில் நேற்றுமுன்தினம் 23ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுரவில் 'நம்பிக்கையோடு காத்திருப்போம். உயர்வோம் உயர்த்துவோம்' என்ற தொனிப்பொருளில் மாபெரும் தேசிய மாநாடொன்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

*"நாட்டில் ஏற்பட்டுள்ள மோசமான நிலைமைக்கு முகங்கொடுப்பதற்கு எங்களுக்கு பலம் மற்றும் அனுபவம் தேவையாகும். கடனை செலுத்த முடியாவிட்டால் நாட்டுக்கு ஏற்படும் ஆபத்துகள் குறித்து கடந்த ஆட்சியின்போதே சுட்டிக்காட்டினோம். முறையற்ற பொருளாதாரக் கொள்கையால் நாடு வங்குரோத்து நிலையை நோக்கி தள்ளப்படுகின்றதே உண்மை.*

*இயற்கை அனர்த்தத்தால் பொருளாதாரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டால், அதனை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு முடியும் என்பதையும், சமூக முரண்பாடுகள், மோதல்கள், ஆட்சி போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்தும் குறுகிய காலத்தில் பொருளாதாரத்தை மீட்க முடியும் என்பதையும் கடந்த கால வரலாற்றிலிருந்து தெரிந்துகொண்டுள்ளோம். ஆனால், தற்போது ஆட்சிமாற்றம் ஒன்றினால் மீளக்கூடிய சூழ்நிலையில்லை. நாடு வங்குரோத்து அடைவதிலிருந்து எவ்வாறு மீள்வது என்பதில் இதுவரை எமக்கு எவ்வித அனுபவமும் இல்லை. வங்குரோத்து அடையும் சில நாடுகள் மீண்டும் மீள முடியாதுள்ளது. ஆகவே, கடனை மீள செலுத்த முடியாது, நாடு வங்குரோத்து அடையும் பட்சத்தில் சுனாமி, யுத்தத்தால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து மீண்டதுபோன்று மீள முடியாது என்பதே நிதர்சனம்.*

*இதேவேளை, தற்போது நாங்கள் கடன் பெறவில்லை என ஜனாதிபதி கூறியுள்ளார். ஆனால், நாங்கள் கடன் பெறவில்லை என்பதைவிட எங்களுக்கு கடன் வழங்குவதற்குக்கூட யாரும் முன்வருவதில்லை என்பதே உண்மை. கடனை பெற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலைகூட இன்று இல்லாதுபோயுள்ளது. இதனாலேயே, இன்று எரிவாயு, மருந்துகள், பால்மா, மின்சாரம் மற்றும் எரிபொருள் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. மேலும், அத்தியாவசியப் பொருட்கள் இல்லாது மக்கள் பெரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். பால்மா இல்லாது அழும் குழந்தையின் வேதனை இவர்களுக்கு புரிகின்றதா என்பது தெரியவில்லை.*

*விவசாயிகள், பெருந்தோட்ட மக்கள் மற்றும் பொருட்களின் விலையால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் வேதனைகளை கார் ஓட்டப்பந்தயத்தில் பங்கேற்கும் மற்றும் வெளிநாட்டுக்குச் சென்று நட்சத்திர ஹோட்டலில் தங்கும் உறுப்பினர்களால் புரிந்துகொள்ளதான் முடியுமா? எதிர்வரும் காலங்களில் எரிபொருள் வழங்குவதில் பாரிய நெருக்கடி ஏற்படும் என்பதையும் புரிந்துகொள்ளவில்லை.*

*ஒரு குடும்பத்தின் வியாபார நோக்கம்கொண்ட இந்த கொள்கை, தவறான பொருளாதாரக் கொள்கையால் முழு நாட்டு மக்களும் இன்று நஷ்டஈடு வழங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. ஒரு குடும்பத்தால் முழு நாட்டின் பொருளாதாரமும் சீர்குலைந்துள்ளது. இன்று வணிக நம்பிக்கை முற்றாக இல்லாது போயுள்ளது.*

*இளைய தலைமுறையினருக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி புதிய*

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஜனவரி 25ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# சம்பிக்கவின் வருகை; கொழும்பு அரசியல்

*தொழில்நுட்பத்தினூடாக டொலரை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை முன்னெடுக்க வேண்டும். கடனை அதிகரிக்கும் அபிவிருத்திகளை நிறுத்திவிட்டு, நன்மைகளை ஏற்படுத்தும் அபிவிருத்திகளை முன்னெடுக்க வேண்டும்.*

*மேலும், 20ஆவது திருத்தத்தை நீக்கி, ஜனாதிபதிக்கும் நாடாளுமன்றத்திற்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்தும் மற்றும் சுயாதீன தேர்தல் முறைமையை கொண்டுள்ள 17ஆவது 19ஆவது திருத்தத்திற்குச் செல்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை நாடாளுமன்றத்தில் முன்னெடுக்க வேண்டும். தற்போது, முன்னெடுக்கப்படும் இராணுவமயமாக்கத்தை நிறுத்தி, அரச சேவைகள் மீது நம்பிக்கைகொண்ட யுகத்திற்குச் செல்ல வேண்டும்.*

*ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நினைத்தால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை 2023 டிசம்பரில் நடத்தலாம். இல்லையேல், 2024 டிசம்பரில் நடக்கும். அதேபோன்று, ஜனாதிபதி நினைத்தால் 2023 பெப்ரவரியில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தலாம். இல்லையேல் 2025ஆம் ஆண்டே தேர்தலை நடத்தலாம். ஆனால், தற்போதைய சூழ்நிலை ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலுக்கு தயாராகும் நேரமல்ல. அதற்கு முன்னர் எதிர்வரும் சில மாதங்களில் நாடு, மியன்மார் மற்றும் வடகொரியா போன்ற நிலைமைக்கு செல்வதை தடுப்பதற்கு என்ன செய்வது என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். ஆகவே, நாட்டை மீட்கும் புரட்சியை நாடாளுமன்றத்திலிருந்தே ஆரம்பிப்போம். அதற்கு அனைவரும் ஒன்றிணையுங்கள்"-- என்று தெரிவித்துள்ளார் சம்பிக்க.*

சம்பிக்க ரணவக்க 13ஆவது திருத்தம் குறித்து பேசுவதும், தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமையளிப்பதும் ஆச்சரிய விடயமே. சம்பிக்கவின் கடந்த காலங்களை எடுத்துக்கொண்டால் நாட்டின் சிறுபான்மை இனங்களுக்கு எதிரான கடும் நிலைப்பாட்டைக்கொண்டிருந்தவர். 'சின்ஹல வீர விதான' என்ற சிங்கள அடிப்படைவாத தேசிய இயக்கத்தை ஆரம்பித்து சிஹல உறுமய என்ற அரசியல் இயக்கம் வரை தீவிரமாக செயற்பட்டவர் அவர்.

அது மட்டுமல்ல, சிஹல அபியோகய , கொட்டி விනிவිதීම (புலிகளின் உள்ளார்த்தம்), கிழக்கு சிங்கள பாரம்பரியம், புலியை வெல்லும் வழி, இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம், வளர்ச்சியின் சூரிய அஸ்தமனம் போன்ற நூல்களை எழுதிய அவர், இப்போது அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராகி 43ஆம் படையணி என்ற ஒன்றை உருவாக்கியுள்ளார். சிங்கள கல்விமான்கள், அரசியல்வாதிகள் மற்றும் புத்திஜீவிகளைகொண்ட அமைப்பு அது.

சம்பிக்க ரணவக்க தீவிர இனவாதி. அவர் வந்தால் எப்படி அவருடன் நிற்பது என்ற தர்மசங்கடமெல்லாம் தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கு இருக்கப்போவதில்லை. சம்பிக்க அண்மையில் கிழக்கு மாகாணத்திற்கு சென்றபோது அவரை வரவேற்று பேச்சு நடத்தினார்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உள்ளூர்ப் பிரமுகர்கள். அதேபோல் முன்னர் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவையே ஆதரித்த தமிழ் அரசியல் பிரமுகர்கள் சம்பிக்கவை ஆதரிக்கமாட்டார்கள் என்று நம்பாமலிருக்க முடியாது.

ஆனால், சம்பிக்கவின் வருகை பல விடயங்களை சொல்கின்றன். இந்தளவு ராஜபக்ஷ தரப்புக்கு மூன்றிலிரண்டு நாடாளுமன்ற பெரும்பான்மை பலம் இருக்கையில், அதனை தனியாளாக எதிர்த்துநிற்கும் பலம் எவருக்கும் இல்லை. அதற்கான ஊடக அல்லது இதர மக்கள் ஆதரவும் எவருக்கும் இல்லை. அத்தனையும் மீறி சம்பிக்க முன்வருவதை நோக்குகையில் அவர் பின்னால் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது. இலங்கையின் இப்போதைய ஆட்சியினால் விரக்தியுற்ற நாடோ அல்லது அமைப்போ சம்பிக்க பின்னால் இருக்கக்கூடும். இப்போதுள்ள நிலைமையில் சம்பிக்க மீது எதாவது வழக்குகளை தொடுத்து அவரை சிறைக்குள் தள்ளினாலும் அது அவருக்கு சாதகமான பிரசாரத்தையே கொடுக்கும். அனுதாபத்தை வழங்கும். எனவே, இப்போதைய ஆட்சியாளர்களுக்கு சஜித் பிரேமதாஸவை விட சம்பிக்கவே பெரிய எதிரி. சிங்கள மேலாண்மைவாதிகள் சம்பிக்க பக்கம் அதிகமாக இருப்பது அதற்கான பிரதான காரணம்.

சம்பிக்க வருகையுடன் கொழும்பு அரசியல் புதிய கோணத்தில் திரும்பியுள்ளது. எதிர்க்கட்சியாக சஜித் ஆற்றாத கருமங்களை சம்பிக்க செய்வாராயின், அவரது அணிக்கு மக்கள் ஆதரவு அதிகரிக்கக்கூடும். ஆனால், சிங்கள தேசியவாத அணிகளின் அதிகரிப்பால் நடக்கும் இன்னொரு எதிர்வினையையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா, மைத்ரி, சஜித், அநுரகுமார, சம்பிக்க ஆகியோர் தலைமையில் அரசியல் அணிகள் அமையுமாயின் அது சிங்கள பெரும்பான்மை மக்களின் வாக்குகளையே பிரிக்கப்போகிறது. அப்படி பிரிவதானது ராஜபக்ஷமாரின் வாக்குவங்கியில் தாக்கத்தை ஏற்படுத்திவிடாது. கடந்தவாரம் ஜனாதிபதி கோட்டாபயவை சந்தித்த மகாநாயக்க மற்றும் உயர்மட்ட பௌத்த பிக்குமார் ஜனாதிபதி தலைமையிலான அரசு மீது மக்கள் இன்னமும் நம்பிக்கை வைத்து இருப்பதாக கூறியிருந்தனர். கொரோனா வைரஸ் நிலைமையே நாட்டின் இப்போதைய பிரச்சினைகளுக்கு காரணமென பெரும்பான்மை சிங்கள மக்கள் நம்புகின்றனர். அதுதான் யதார்த்த நிலைமை.

சம்பிக்கவின் அரசியல் மன்றம், இப்போதுள்ள நிலைமையில் மக்களின் துயரங்களை வெளிக்கொணரும் களமாகவே இருக்கிறது. அது ராஜபக்ஷக்களை ஆட்டுவிக்குமா என்பதற்கு காலம் பதில் சொல்லவேண்டும்.

# சோதனைகளுக்கு இடையில் ஜோ!

ஓராண்டுக்கு முன்பு டொனால்ட் ட்ரம்ப்பின் பதவிக்காலம் முடிந்து, ஜோ பைடன் 46ஆவது அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றபோது இருந்த நிலைமையே வேறு. அவர் பெற்ற 8.1 கோடி வாக்குகள் என்பது அமெரிக்க வரலாற்றில் அதுவரையில் எந்தவொரு ஜனாதிபதியும் பெறாதது.

அமெரிக்க ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்று ஓராண்டு கடந்துவிட்டது. வெள்ளை மாளிகையில் அவர் குடியேறியபோது இருந்த உச்சகட்ட ஆதரவும், எதிர்பார்ப்பும் குறைந்து இப்போது சவால்களுக்கு இடையே தொடர்கிறார் ஜனாதிபதி பைடன். அமெரிக்க சமுதாயம் இன உணர்வால் இன்னும்கூட பிளவுபட்டுக் கிடக்கிறது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஜனாதிபதி ஜோ பைடனின் செல்வாக்கு 54 வீதமாக காணப்பட்டது என்றால், டிசம்பர் கடைசி வாரத்தில் இதுவரை இல்லாத அளவிலான 41 வீதமாக சரிந்திருப்பதாக கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன. தன்னுடைய மசோதாக்களை நிறைவேற்ற முடியாமல், அதிகரித்துவரும் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாமல், கொவிட்-19 நோய்த்தொற்றுப் பரவலை தடுக்க முடியாமல் ஜோ பைடன் ஆட்சி தடுமாறுகிறது என்பதுதான் செல்வாக்கு சரிவுக்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

ஜனாதிபதி பைடன் சில முக்கியமான மசோதாக்களை நிறைவேற்றாமல் இல்லை. நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கும் ஏழை குடும்பங்களுக்கு உதவுவதற்கான மசோதாவை கடந்த ஆண்டு மார்ச் மாதம் நிறைவேற்றினார். அமெரிக்காவிலுள்ள சாலைகளையும், பாலங்களையும் சீரமைத்து கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ஒரு டிரில்லியன் டொலர் ஒதுக்கீடுசெய்து இன்னொரு மசோதாவை நிறைவேற்றிக்கொண்டார். இவையெல்லாம் மக்கள் மத்தியில் அவரது செல்வாக்கை அதிகரித்துவிடவில்லை என்பதைத்தான் கருத்துகணிப்புகள் உணர்த்துகின்றன.

1993 முதல் அமெரிக்காவில் ஜனாதிபதியாக இருந்தவர்கள் தொடர்ந்து இரண்டாவது முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். டொனால்ட் டிரம்புக்கு இரண்டாவது முறை வாய்ப்பை மறுப்பது என்கிற மக்களின் முடிவுதான் ஜோ பைடனின் ஜனாதிபதித் தேர்தல் வெற்றி.

அவரது ஜனாதிபதித் தேர்தல் வாக்குறுதிகளில் முக்கியமானது, அமெரிக்க மக்களை ஒன்றுபடுத்தி ஒருங்கிணைப்பது. பதவியேற்றபோது அவர் ஆற்றிய உரையில் எட்டு முறை ஒற்றுமை, ஒருங்கிணைப்பு ஆகிய வார்த்தைகளை உச்சரித்தார். ஓராண்டு கடந்துவிட்டது. அமெரிக்கா, ஜனாதிபதித் தேர்தலின்போது இருந்ததுபோலவே இப்போதும் பிளவுபட்டுக் கிடக்கிறது என்பதுதான் நிஜம்.

ஜனாதிபதி பைடனின் நாடாளுமன்றத் திட்டங்கள் குடியரசுக் கட்சியினரால் தடுக்கப்படுவதால் அவர் விரக்தி அடைந்திருக்கிறார் என்று கருத இடமுண்டு. அவரது கட்சியிலேயே சில உறுப்பினர்கள் அவரது திட்டங்களுக்கு எதிராக இருக்கிறார்கள். பருவநிலைப் பிரச்சினையை எதிர்கொள்ளவும், சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், சுகாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்தவும், அவர் கோரிய 1.75 டிரில்லியன் டொலர் திட்டத்தை அமெரிக்கக் காங்கிரஸில் (மக்களவை) நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை.

ஆப்கானிஸ்தானிலிருந்து ஒகஸ்ட் மாதம் அமெரிக்கத் துருப்புகளை திரும்பப்பெற்று தலிபான்களின் ஆட்சிக்கு ஜனாதிபதி பைடன் நிர்வாகம் வழிகோலியதை அவரது ஆதரவாளர்கள் பலரும் அங்கீகரிக்கவில்லை. டொனால்ட் ட்ரம்ப் போட்ட பாதையில் ஜனாதிபதி பைடன் பயணிப்பதாகக் குற்றஞ்சாட்டுகிறார்கள். ஆப்கானிஸ்தானில் ஜனநாயகம் தடம்புரண்டது, மனித உரிமைகள் தகர்ந்தன. பெண்களுக்கு சுதந்திரம் பறிபோனது. இவையெல்லாம் அமெரிக்க மக்களாலும், அமெரிக்காவிற்கு வெளியில் பலராலும் பைடன் நிர்வாகத்தின் பலவீனமாகக் கருதப்படுகின்றன.

1975இல் வியட்நாமிலிருந்து அமெரிக்கத் துருப்புகள் வெளியேறியதைபோல் ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க விமானங்கள் கிளம்பியதை தேசத்திற்கு அவமானமாகக் கருதுபவர்கள்தான் அதிகம்.



20 ஆண்டுகால பெண் உரிமைக்கான போராட்டத்தை ஒரு நொடியில் தகர்த்துவிட்டார் ஜனாதிபதி ஜோ பைடன் என்பதும், துணை அதிபராக பெண்மணி ஒருவர் இருந்தும் பைடன் நிர்வாகம் பெண் உரிமையைப் பாதுகாக்கவில்லை என்றும் குற்றச்சாட்டுகள் எழுகின்றன.

பைடன் ஆட்சியின் வெளியுறவுக் கொள்கை அமெரிக்க மக்களின் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கிறது. பசுபிக் கடலில் அதிகரித்துவரும் சீனாவின் ஆதிக்கம், மத்திய கிழக்கு நாடுகளில் காணப்படும் நிலையற்ற தன்மை, கிழக்கு உக்ரைனில் ரஷ்ய ஆக்கிரமிப்புக்கான சூழல் போன்றவை பைடன் ஆட்சிக்கு முதுகெலும்பில்லாத நிர்வாகம் என்கிற அவப்பெயரை ஏற்படுத்தியிருக்கின்றன.


78 வயதில் (மிக அதிகமான வயதில்) ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர் ஜோ பைடன். 2024 தேர்தலில் அவர் மீண்டும் போட்டியிட்டால் அவர் 82 வயதினராக இருப்பார். அதனால், குடியரசுக் கட்சி இளைஞர் ஒருவரை வேட்பாளராக நிறுத்தினால் வெள்ளை மாளிகை ஜனநாயகக் கட்சியிடமிருந்து பறிபோகக்கூடும் என்கிற பரப்புரைகள் எழுகின்றன.

நவம்பர் மாதம் நடக்கவிருக்கும் 'மிட்டெர்ம்ஸ்' என்கிற மக்களவைக்கான தேர்தல்களில் குடியரசுக் கட்சி காங்கிரஸில் பெரும்பான்மை பலம் பெற்றுவிட்டால் ஜனாதிபதி பைடனின் கரங்கள் முழுமையாக கட்டப்பட்டுவிடும். கொள்ளை நோய்த்தொற்று முடிவுக்கு வந்து, பொருளாதாரம் மீண்டெழுந்து, விலைவாசியைக் கட்டுக்குள் கொண்டுவந்தால் மட்டுமே அடுத்த மூன்று ஆண்டுகள் செயல்படும் அரசாக ஜனாதிபதி ஜோ பைடனின் ஆட்சி தொடரும்.

ஜனாதிபதி ஜோ பைடனின் ஓராண்டு வெள்ளை மாளிகை வாசம், மணம் வீசவில்லை!

**நன்றி - தினமணி**

# கல்லறை நகரம்



சில்லறை இல்லை என்றால், கல்லறையில் வாழவும் துணிந்து விடுவர் மனிதர்கள்.

ஆபிரிக்க நாடான எகிப்து தலைநகர் கெய்ரோவில் கல்லறைகள் நிறைந்த ஊர் ஒன்று இருக்கிறது. இங்கு பல நூற்றாண்டுகள் பழைமையான கல்லறைகள் மத்தியில் கட்டப்பட்ட வீடுகளில் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கியவர்கள் வசிக்கின்றனர்.

இங்குள்ள வீடுகளின் கதவு மற்றும் ஜன்னல்களை திறந்தால் கைக்கு எட்டும் தொலைவில் கல்லறைகளே காணப்படுகின்றன.

இப்பகுதியில் வாழும் குழந்தைகள் பேய், பிசாசுகள் என்றால் பயப்படுவதில்லை. மிகவும் பழைமையான கல்லறைகளைக் காண, சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

# இன்றைய நாளில்...

- 1498 – போர்த்துக்கீச நாடுகாண்பயணி வாஸ்கொடகாமா தென்கிழக்கு ஆபிரிக்காவை அடைந்தார்.
- 1755 – மொஸ்கோ பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1881 – தோமஸ் அல்வா எடிசன், அலெக்சாண்டர் கிரஹம்பெல் ஆகியோர் இணைந்து ஓரியண்டல் டெலிபோன் கம்பெனி என்ற நிறுவனத்தை ஆரம்பித்தனர்.
- 1882 – வேல்ஸ் இளவரசர்கள் அல்பேர்ட் விக்டர், ஜோர்ஜ் ஆகியோர் அரசமுறைப் பயணமாக கொழும்பு வந்தனர்.
- 1890 – நெல்லி பிளை தனது 72 நாள் உலகம் சுற்றும் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டார்.
- 1924 – முதலாவது குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுகள் பிரான்சில் சாமனீ என்ற இடத்தில் ஆரம்பமானது.
- 1947 – தோமஸ் கோல்ட்சிமித் என்பவர் முதலாவது இலத்திரனியல் விளையாட்டுக் கருவி, "எதிர்மின் கதிர் குழாய் கேளிக்கைக் கருவியை" கண்டுபிடித்தார்.
- 1949 – முதலாவது எம்மி விருதுகள் வழங்கப்பட்டன.
- 1971 – உகண்டாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் மில்ட்டன் ஓபோட் அரச தலைவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டு இடி அமீன் தலைவரானார்.
- 1971 – இந்தியாவின் 18ஆவது மாநிலமாக இமாசலப் பிரதேசம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- 1980 – அன்னை தெரேசாவிற்கு இந்தியாவின் பாரத ரத்னா என்ற அதியுயர் விருது வழங்கப்பட்டது.
- 1993 – கொட்டியாரக் குடாக்கடலில் மூதூர் - திருகோணமலை நகரங்களுக்கு இடையிலான சேவையில் ஈடுபட்டுவந்த பயணிகள் படகு ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் நூற்றுக்கும் அதிகமானோர் மூழ்கி இறந்தனர்.
- 1994 – நாசாவின் கிளமென்டைன் விண்கலம் சந்திரனை நோக்கி ஏவப்பட்டது.
- 2002 – விக்கிப்பீடியா மீடியாவிக்கி மென்பொருளுக்கு மாறியது.
- 2004 – ஒப்பர்சூனிட்டி தளவுளவி செவ்வாயில் தரையிறங்கியது.
- 2006 – சூரியக் குடும்பத்திற்கு வெளியே பால் வழியின் நடுவிற்குக் கிட்டவாக பூமியிலிருந்து 21,500 - 3,300 ஒளியாண்டுகள் தூரத்தில் OGLE-2005-BLG-390Lb என்ற கோள் கண்டுபிடிக்கப்பட்டது.

# நக்கல் நமசிவாயம்

"பிரச்சினைகளுக்குத் தீர்வை தருவார்கள் என்று பார்த்தால் பிரச்சினைகளை சமாளிக்கச் சொல்லுறாங்கள் அமைச்சர்மார்... இத நாங்களே செஞ்சிடுவம்.. இதை சொல்லுறதுக்கு அமைச்சர்மார் தேவையோ....?



Newspapers Viber Community

# இராணுவ புலனாய்வாளர்கள் தாக்குதல்: புதுக்குடியிருப்பில் ரிப்பர் சாரதி படுகாயம்

## காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதி

(வன்னி செய்தியாளர்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்று (24) அதிகாலை 3 மணியவில் இராணுவ புலனாய்வாளர்கள் வீதியால் சென்ற ரிப்பரினை வழிமறித்து சாரதிமீது தாக்குதல் நடத்தியுள்ளார்கள்.

சாரதிமீது இரும்புக்கம்பியால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கண் மற்றும் முதுகு பகுதிகளில் காயமடைந்த நிலையில் ரிப்பர் சாரதி புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

நேற்று அதிகாலையில் ரிப்பருடன் புதுக்குடியிருப்பு கைவேலிப் பகுதியில் பயணித்த வேளை வழி மறித்த சிவில் உடை தரித்த இராணுவ புலனாய்வாளர்கள் ரிப்பரில் எதுவும் இல்லாத நிலையில் சாரதியினை இறக்கி இரும்புக் கம்பியினால் தாக்கியுள்ளதாக பாதிக்கப்பட்ட நபர் தெரிவித்துள்ளார்.



இவர் தற்போது புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

புலனாய்வாளர்கள், ரிப்பரில் என்ன இருக்கின்றது என்று சாரதியிடம் கேட்ட நிலையில், அதில் ஒன்றும் இல்லை என தெரிவித்துள்ளார். இந்நிலையில் தாக்குதலை மேற்கொண்ட இராணுவ புலனாய்வாளர்கள் இருவர் மதுபோதையில் தன்மீது கம்பியால் தாக்கியுள்ளார்கள் என்று பாதிக்கப்பட்ட நபர் தெரிவித்துள்ளார்.

இதன்போது கண்ணில் காயமடைந்த நிலையில் குறித்த குடும்பஸ்தர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய நவரத்தினம் உதயசீலன் என்ற குடும்பஸ்தரே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்கான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட நபர் தெரிவித்துள்ளார்.

இதன்போது பாதிக்கப்பட்ட நபரின் நண்பர்களை இராணுவம் இராணுவ முகாமிற்கு அழைத்து சமரசம் செய்ய பேசிவருவதாகவும் பாதிக்கப்பட்டவர் தெரிவித்துள்ளார்.

## 24.01.2022 நாணய மாற்று வீதம்

ஸ்ரீ லங்கா மஹ பெங்குவ / இலங்கை மத்திய வங்கி / CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 030 582 | 036 5 1 |
| கனேடியன் டொலர் | 045 7 15 | 051 6 10 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 20 601 | 21 2240 |
| யூரோ | 113 3835 | 122 734 |
| ஜப்பான் யென் | 0 6221 | 0 6873 |
| சிங்கப்பூர் டொலர் | 036 0737 | 040 8 67 |
| ஸ்ரேலிங் பவுன் | 156 7765 | 165 2055 |
| சுவிஸ் பிராங் | 105 165 | 112 6 6 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 424 7477 |
| குவைட் | குவைட் தினார் | 557 0551 |
| ஓமான் | ஓமான் றியால் | 413 5574 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 035 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 74 8 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 43 8841 |

# வவுனியாவுக்கு வந்தது நீராவி புகையிரதம்







(வவுனியா செய்தியாளர்)

நீராவி மூலம் இயங்குகின்ற பாரந்தூக்கி புகையிரதமொன்று நேற்றுக் காலை வவுனியா புகையிரத நிலையத்தினை வந்தடைந்துள்ளது.

1953ஆம் ஆண்டு இங்கிலாந்திலிருந்து எமது நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட 100 அடி நீளமும், 35,000 கிலோகிராம் பாரத்தை உயர்த்தக்கூடியதுமான பாரந்துக்கி புகையிரமே இவ்வாறு வந்தடைந்தது

இப்புகையிரதம் முற்றும் முழுதாகவே நீராவி மூலம் இயக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹிருணிக்காவுக்கு எதிரான வழக்கு மே 23ஆம் திகதி விசாரணைக்கு

இளைஞர் ஒருவரை கடத்திய குற்றச்சாட்டில் ஹிருணிக்கா பிரேமச்சந்திரவுக்கு எதிரான வழக்கிற்கான விசாரணைத் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த வழக்கினை எதிர்வரும் மே மாதம் 23ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று(24) தீர்மானித்துள்ளது.

அன்றைய தினம் வழக்கின் சாட்சியாளர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான அறிவித்தலை விடுக்கும்படி மேல்நீதிமன்ற நீதிபதி அமல் ரனராஜா உத்தரவிட்டுள்ளார்.

தேசிய ஐக்கிய முன்னணியின்

# தேசிய அமைப்பாளராக ஷிராஸ் யூனூஸ் நியமனம்



(நூருல் ஹுதா உமர்)

முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணியின் தேசிய அமைப்பாளராக கொழும்பைச் சேர்ந்த ஷிராஸ் யூனூஸ் நேற்று (24) நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி இந்த நியமனத்திற்கான உத்தியோகபூர்வ கடிதத்தை கட்சியின் அலுவலகத்தில் வைத்து தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் ஷிராஸ் யூனூஸிடம் நேற்று கையளித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வளர்ச்சிக்காக கடந்த காலங்களில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்த ஷிராஸ் யூனூஸ் கடந்த கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் தேர்தலில் வேட்பாளராக களமிறங்கியிருந்ததுடன், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தேசிய இணைப்பாளராகவும் கடந்த காலங்களில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மூன்றாம் கட்ட தடுப்பூசி கட்டாயம்

## யாழ். கட்டளை தளபதி தெரிவிப்பு

(யாழ். செய்தியாளர்)



யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள அனைத்து மக்களும் மூன்றாம் கட்ட பூஸ்டர் தடுப்பூசியினை கட்டாயமாக பெற்றுக்கொள்ள வேண்டும் - என யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி தெரிவித்தார்.

தற்போது நாட்டில் கொரோனா பரவல் அதிகரிக்கின்ற நிலையில் மக்கள் அனைவரும் மூன்றாம் கட்ட தடுப்பூசியினை பெற்றுக் கொள்வதன் மூலம் தொற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

ஏற்கனவே இராணுவம் மற்றும் சுகாதாரப் பிரிவினரால் மூன்றாம் கட்ட பூஸ்டர் தடுப்பூசி யாழ்ப்பாண மாவட்டம் முழுவதிலும் பரவலாக பொதுமக்களுக்கு வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்தோடு பொதுமக்களுக்கு மூன்றாம் கட்ட தடுப்பூசி வழங்கலுக்குரிய சகல உதவிகளும் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே, பொதுமக்கள் தயக்கமின்றி தமது பிரதேசத்தினை தொற்றிலிருந்து பாதுகாத்து கொள்ளவேண்டுமாயின் மூன்றாம் கட்ட தடுப்பூசியினை பெற்றுக்கொள்வதால் தங்களை தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.





கொழும்பு - 12 , வாழைத்தோட்டத்தில் அமைந்துள்ள அல்-ஹிக்மா கல்லூரி மாணவர்களுக்கு தடுப்பூசியேற்றும் நடவடிக்கை ஜிந்துப்பிட்டியில் சுகாதார வைத்திய அதிகாரி பெத்தும் கொடிக்காரவின் கண்காணிப்பில் நேற்று (24) முன்னெடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு: ஏ.எஸ்.எம்.ஜாவித்)

# பலம் பொருந்தியவர்களே சுற்றாடலுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றனர்

## அமைச்சர் மஹிந்த அமரவீர குற்றச்சாட்டு



(கண்டி செய்தியாளர்)

நாட்டில் சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்துவோர் ஏதோவோர் அடிப்படையில் பலம் பொருந்தியவர்களாக உள்ளனர். எனவே, சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்துவோர் எத்தகைய தராதரம் கொண்டவர்களாக இருப்பினும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் - என சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கண்டி மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு நில அதிர்வு தொடர்பாக ஒழுங்குசெய்யப்பட்ட செயலமர்வில் பிரதம அதிதியாகக் கலந்து இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பணபலம் அல்லது அரசியல் பலம் பொருந்தியவர்களே அதிகமாக சுற்றாடல் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்களில் ஈடுபடுவதாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன், சில விடயங்களை அவதானிக்கும்போது அதில் சில உண்மைகள் இருப்பதுவும் தெரியவந்துள்ளது.

இந்த நாட்டில் சகல மக்களும் சுற்றாடலை நேசிக்கும் நிலை ஏற்படும் வரை சுற்றாடலைப் பாதுகாப்பதென்பது பாரிய சவாலாகவே இருக்கும். மரம் நடுவது அல்லது மரத்தை வெட்டுவது மட்டும்தான் சுற்றாடலுடன் தொடர்புபட்ட விடயம் என சிலர் நினைக்கின்றனர். இது தவறாகும்.

அதேபோல் நாட்டில் பாவிக்கப்படும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களில் 7 சதவீதம் மட்டுமே மீள்சுழற்சி செய்யப்படுகிறது. ஏனைய 93 சதவீதமானவைகளுக்கும் என்ன நடக்கிறது என்பது புதிராக உள்ளது. அதிகமானவர்கள் நாம் அவற்றை எரித்து விடுகிறோம் என்கின்றனர். இது சுற்றாடலுக்கு மேலும் அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இலங்கையில் மிகவும் அமைதியாக வாழ்வதற்கேற்ற காலநிலைகொண்ட ஓர் இடமாக கண்டியை நாம் நோக்குவதுண்டு. ஆனால், கண்டி நகரத்தை எடுத்துக்கொண்டால் இலங்கையில் அதிகளவு வாயு மாசடையும் ஓர் இடம் என்பதை விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்காலத்தில் கண்டியில் இருப்பவர்கள் கொவிட் பிரச்சினை தீர்ந்தாலும் முகக்கவசம் அணியவேண்டிய நிலை ஏற்படும் அளவுக்கு வாயு மாசடைவதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளன. இதற்குக் காரணம் வாகன நெரிசலாகும். கண்டிக்கு அடுத்தபடியாக குருநாகல் நகரமும் இதேபோல்தான் உள்ளது. ஆனால் கொழும்பிற்கு அதிர்ஷ்ட வசமாக பக்கத்தில் கடல் இருப்பதால் பாரிய விளைவுகள் இல்லை.

எனவே, இதற்கு மாற்று வழிகளைக் கண்டுபிடிக்கவேண்டும். கண்டி நகருக்குள் வரும் வாகன எண்ணிக்கையை கட்டுப்படுத்த வேண்டும் அல்லது மாற்றுப் பாதைகளை அமைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# ‘உண்மையை காணவும் பேசவும் முன்னே வாருங்கள்’ எனும் தொனிப்பொருளில் மன்னாரில் சர்வமதத் தலைவர்களுடன் கருத்தரங்கு







(மன்னார் நகர் செய்தியாளர்)

மத சகவாழ்வை பலப்படுத்துவதனூடாக ஒரு பன்மைத்துவ சமூகத்தைக் கட்டியெழுப்புவோம் எனும் தொனிப்பொருளில் தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையில் தொடர்பாடலுக்கான நிலையத்தின் ஒழுங்கமைப்பில் மன்னார் பிரதேச சர்வமத குழுவினரின் ஏற்பாட்டில் "உண்மையை காணவும் பேசவும் முன்னே வாருங்கள்" எனும் தொனிப்பொருளிலான விசேட கருத்தரங்கு மன்னார் தேசிய சமாதானப் பேரவையின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் மெடோசன் பெரேராவின் மேற்பார்வையில் தொடர்பாடலுக்கான நிலையத்தின் இணைப்பாளர் ஜோன்சன் தலைமையில் நேற்று திங்கட்கிழமை மன்னார் தனியார் விருந்தினர் விடுதியில் காலை 10 மணியளவில் இடம்பெற்றது.

மத ரீதியான பிளவு மற்றும் இன, மத முரண்பாடுகள் தொடர்பாக மதத் தலைவர்களின் நிலைப்பாடு மற்றும் அவர்களின் ஆலோசனைகளை வெளிக்கொண்டுவரும் முகமாக குறித்த விசேட கருத்தரங்கு மற்றும் விவாத நிகழ்வு ஒழுங்குசெய்யப்பட்டு இடம்பெற்றது.

பிரதேச ரீதியாக இடம்பெறும் சிலை உடைப்புகள், மதச் சின்னங்கள் புறக்கணிக்கப்படுகின்றமை, மதத் தலைவர்கள் மத்தியிலான முரண்பாடு, வெறுப்பு பேச்சு, சமூக ஊடகங்களின் தற்போதைய நிலை போன்றவை தொடர்பான விடயங்களில் மதத் தலைவர்கள் மற்றும் சர்வமதக் குழுவினரின் வகிபாகம் தொடர்பாக பூரண தெளிவுபடுத்தல் ஆகியன குறித்த நிகழ்வின் ஊடாக பகிரப்பட்டன.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நான்கு மதங்களைச் சேர்ந்த மதத் தலைவர்கள், அரச அதிகாரிகள், ஊடகவியளாலர்கள் மற்றும் மன்னார் சர்வ மதக் குழு அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர்.

LK Newspapers Viber Community

# டயகம பொலிஸ் பிரிவில் 14 வீடுகள் கொண்ட தொடர் லயன்குடியிருப்பில் திடீர் தீப்பரவல்





(க.கிஷாந்தன்)

டயகம பொலிஸ் பிரிவிற்குட்டபட்ட வேவர்லி தோட்டம் ஆடலி பிரிவு குடியிருப்பில் நேற்று (24) காலை 7.30 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 14 வீடுகள்கொண்ட தொடர் லயன் குடியிருப்பில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

இதனால், ஒரு வீட்டிற்குள் ஏற்பட்ட தீயினால் வீடு முற்றாக எரிந்துள்ளது. இதனால் இந்த வீட்டிலிருந்த 5 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தீ ஏற்பட்டபோது வீட்டில் இருந்தவர்கள் கூச்சலிட்டதையடுத்து, அயலவர்கள் ஓடி வந்து ஏனைய வீடுகளுக்கு தீ பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

முற்றாக எரிந்த வீட்டில் பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், உடுதுணிகள் என பெருமளவிலான பொருட்கள் தீக்கிரையாகியுள்ளன.

இதேவேளை, இது தொடர்பாக டயகம பொலிஸ் நிலையத்திற்கும், தோட்ட நிர்வாகத்திற்கும் பிரதேசவாசிகளால் தகவல் அளிக்கப்பட்டுள்ளது.

அதன்பின் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் தீ பரவலுக்கான காரணங்களை கண்டறிய மேலதிக விசாரணகளை மேற்கொண்டுவருவதோடு, தோட்ட நிர்வாகம் இவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்து வருகின்றது.

# நீர்நிலைகளில் நீர்மட்டம் வீழ்ச்சி; தேசிய மின் உற்பத்திக்கு சிக்கல்

(மஸ்கெலியா நிருபர்)



மத்திய மலைநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலையால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வேகமா குறைவடைந்து வருகிறது.

மேல்கொத்மலை, விக்டோரியா, கொத்மலை, மகாவலி, காசல்ரீ, மவுசாகலை, கெனியோன், லக்ஸபான, நவலக்ஸபான விமலசுரேந்திர உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைந்துள்ளது.

தேசிய மின் உற்பத்திக்கு பாரியளவில் பங்களிப்புசெய்யும் காசல்ரீ நீர்த்தேககத்தின் நீர்மட்டம் என்றுமில்லாதவாறு குறைவடைந்துள்ளது. தற்போது சுமார் 15 அடிவரை குறைவடைந்துள்ளதாக மின்சாரத்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் தாழ்ந்து காணப்படுவதனால் நீரில் மூழ்கிக்கிடந்த கட்டடங்கள் தற்போது தென்பட ஆரம்பித்துள்ளன.

நீர் ஓடைகள், அருவிகளின் நீர் வற்றிக் காணப்படுவதனால் சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்களின் மின் உற்பத்தியும் பாரிய அளவில் குறைவடைந்துள்ளது.

நீர்த்தேக்கங்களின் அருகாமையிலுள்ள பற்றைக்காடுகளில் மிருகங்களை வேட்டையாடுவதற்காகவும், பொழுது போக்கிற்காக காடுகளுக்கு தீ வைப்பதனால் நீரூற்றுகள் அற்றுப்போய் பாரிய குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான அபாயமும் காணப்படுகின்றது.

ஆகவே, காடுகளுக்கு தீ மூட்டுவதனை உடன் நிறுத்துமாறு பொதுமக்களிடம் சூழல் ஆய்வாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். தொடர்ச்சியாக இந்த வரட்சியான காலநிலை காணப்படும்பட்சத்தில் விவசாயத்துறையும் பாதிக்கப்படுவதற்கான அறிகுறிகளும் காணப்படுகின்றன.

எனவே, நீர்நிலைகளை பாதுகாப்பதற்கான விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் வரட்சியான காலப் பகுதியில் மரங்களை தறிப்பது உடன் நிறுத்தப்பட வேண்டும் என பலரும் கோரிக்கை விடுக்கின்றனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# பெண்களின் தலைமுடியை வெட்டிய மற்றொருவர் பண்டாரவளையில் கைது

## பையிலிருந்து 38 முடி சுருள்களும் மீட்பு

(பதுளை நிருபர்)

பண்டாரவளை பகுதியில் மாணவியொருவரது தலைமுடியை வெட்டிய நபரொருவர் ஹீல்ஓய புகையிரத நிலையத்தில் மறைந்திருந்தபோது, பண்டாரவளை பொலிஸாரால் நேற்று (24) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹீல்ஓயாவைச் சேர்ந்த இம் மாணவி, பண்டாரவளை நகரில் தனியார் மேலதிக வகுப்பொன்றிற்கு சென்று, பின் தனியார் பஸ்ஸொன்றில் ஏறி தனது வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்தபோதே தலைமுடியை இழந்தார்.

இது தொடர்பாக பண்டாரவளை பொலிஸாருக்கு செய்த முறைப்பாட்டினையடுத்து, பொலிஸார் விரைந்து மேற்கொண்ட தேடுதலில், ஹீல்ஓய புகையிரத நிலையத்தில் மறைந்திருந்த குறித்த சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரின் பையை சோதனையிட்டபோது, அந்த பைக்குள் இருந்து மாணவிகள் மற்றும் யுவதிகளுடையதெனக் கருதப்படும் 38 தலைமுடிச் சுருள்களையும் கைப்பற்றினர்.

இந்நபர் பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்ட வேளையில், அழகிய பெண்களின் தலைமுடிகளை வெட்டி சேகரிப்பது தனது பொழுதுபோக்காகக்கொண்டிருப்பதாக வாக்குமூலம் வழங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மேலும், கைதுசெய்யப்பட்டவர் 33 வயதுடைய திருமணமானவரென்றும் பொலிஸார் கூறினர்.

விசாரணைகளின் பின்னர், சந்தேகநபர், பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவாரென்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# தம்புள்ளை நகரில் கொரோனா தீவிரம்; சுகாதார விதிமுறைகளை மீற வேண்டாம்

## நகருக்கு வரும் மக்களுக்கு முதல்வர் அறிவுறுத்தல்

(மாத்தளை நிருபர்)

தம்புள்ளை நகரில் மீண்டும் கொரோனா தாக்கம் தலைதூக்க ஆரம்பித்துள்ளதால் தம்புள்ளை நகர மக்களும் நகருக்கு வருகின்ற ஏனைய பிரதேச மக்களும் பொதுச் சுகாதார விதிமுறைகளைப் பேணி முகக்கவசம் அணிந்தவர்களாக வரவேண்டும். அவ்வாறு மேற்படி விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் - என தம்புள்ளை மாநகர முதல்வர் தெரிவித்துள்ளார்.

தம்புள்ளை நகருக்கு தினசரி இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் அதிகளவிலான மக்கள் வருகை தருவதாகவும் இதில் அநேகமானோர் சுகாதார விதிமுறைகளை மீறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. முகக்கவசம் அணியாமல் வருவதால் கொரோனா தொற்று அதிகரிக்க வாய்ப்புள்ளதாக மாநகர முதல்வர் தெரிவிக்கின்றார்.

தம்புள்ளை மாநகர சபையின் சுகாதாரப் பகுதியினர் ஏனைய அதிகாரிகளுடன் தம்புள்ளை மாநகரில் தேடுதல் நடத்தி முகக்கவசம் அணியாதோருக்கு இலவச முகக்கவசங்களை வழங்கும் வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும்போதே மாநகர முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தம்புள்ளை நகரம் என்பது இலங்கையின் முக்கிய வர்த்த நிலையங்களில் ஒன்றாகும். இந்நகரத்துக்கு நாட்டின் நாலாதிசைகளிலிருந்தும் வர்த்தக நோக்கத்திற்காக பொருட்களைக் கொள்வனவுசெய்யவும் விற்பனை செய்யவும் இரவு பகலாக மக்கள் வந்தவண்ணம் இருக்கின்றார்கள்.

தம்புள்ளை நகரம் வர்த்த ரீதியாக 24 மணி நேரமும் இயங்கிக்கொண்டிருக்கக்கூடிய ஒரு நகரம் என்பதால் முகக்கவசம் அணியாமல் பொதுச் சுகாதார விதிமுறைகளை மீறி தம்புள்ளையிலிருந்து நாட்டின் ஏனைய பாகங்களுக்கு தொற்று பரவுவதற்கு சாதகமான நிலைமைகள் உருவாகும் என்று தெரிவிக்கும் மாநகர முதல்வர் சுகாதார விதிமுறைகளை பின்பற்றி முகக்கவசம் அணிந்தவர்களாக தம்புள்ளை நகருக்கு வருமாறு மாநகர முதல்வர் தெரிவித்தார்.

# மலையகப் பகுதியில் காடுகளுக்கு தீ வைக்கும் சம்பவங்கள் அதிகரிப்பு




(மனூர சுதத்)

மத்திய மாகாணத்தில் நிலவும் வரட்சியான காலநிலைகளுக்கு மத்தியில் வட்டவளை, ரொசெல்ல, குயில்வத்த பிரதேசங்களில் காடுகளுக்கு தீ வைக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருவதால் அப்பகுதிகளில் கடுமையான சுற்றாடல் அழிவுகள் இடம்பெற்று வருகின்றன.

இப்பகுதியிலுள்ள சிலரால் காடுகளுக்கு தீ வைப்பதால் பாரிய சுற்றாடல் பாதிப்பு ஏற்படுவதோடு, கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் இந்நிலைமை தொடர்பில் கருத்து தெரிவித்த பிரதேசத்திலுள்ள பலர் தெரிவித்தனர்.

காடுகளுக்கு தீ வைப்பவர்களை கண்டு பிடித்து அவர்களுக்கு கடும்தண்டனைவழங்குவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தகர்.





பதுளை பொது வைத்தியசாலை சிரேஷ்ட வைத்திய அதிகாரி கிரிஷான் வேதநாயகம் தலைமையில் சுகாதார அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் பதுளை பொது வைத்தியசாலை முன்னெடுக்கும், பாடசாலை மாணவர்கள் மத்தியில் சுகாதார விழிப்புணர்வு செயலமர்வு நேற்று (24) பசறை - கோணக்கலை தமிழ்த் தேசிய பாடசாலையில் இடம்பெற்றது. (படங்கள் : நடராஜா மலர்வேந்தன்)

# ஜனாதிபதிக்கு வாக்களிக்காத மக்கள் அனைவரும் இரண்டாந்தர பிரஜைகளா?

(நுவரெலியா நிருபர்)



**வாக்களிக்காததை மனதில் வைத்துக்கொண்டு இனப்பிரச்சினை விடயத்திலும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதிலும் இழுத்தடிப்பு செய்யப்படுகின்றதா என்றும் பேராசிரியர் விஜேசந்திரன் கேள்வி**

ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் இலங்கையில் நான்கு இனங்கள் இருக்கின்றார்கள் என்பதையோ, அந்த இனங்களுக்கு இனப்பிரச்சினை இருக்கின்றது என்பதையோ, தான் தேர்தலின்போது இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவது தொடர்பாகவோ எந்தவிதமான ஒரு விடயத்தையும் தன்னுடைய உரையில் தெரிவிக்காமையானது சிறுபான்மை மக்களின் மனங்களில் ஒரு மனவேதனையை ஏற்படுத்தியிருக்கின்றது - என பேராதனை பழ்கலைக்கழகத்தின் பொருளியியல்துறை பேராசிரியரும் மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகமுமான சங்கரன் விஜேசந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, சிறுபான்மை மக்கள் அவருக்கு வாக்களிக்கவில்லை என்ற ஒரு விடயத்தை மனதில் வைத்துக்கொண்டு இந்த இனப்பிரச்சினை விடயத்திலும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதிலும் இழுத்தடிப்பு செய்யப்படுகின்றதா என்ற ஒரு கேள்வியும் எங்களிடம் எழுகின்றது.

ஜனாதிபதியின் நாடாளுமன்ற உரை தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் கொரோனா பிரச்சினையை காரணங்காட்டி பல அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக பேசப்படவில்லை. ஆனால், தற்போது இலங்கையில் கொரோனா பிரச்சினையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில், ஏனைய விடயங்கள் தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுக்கொள்கின்ற வகையில் தற்பொழுது அரசியல் யாப்பு சீர்திருத்தம் தொடர்பாக பேசப்பட்டு வருகின்ற நிலையில், இந்த வருடத்தில் அதனுடைய செயற்பாடுகள் எவ்வாறு அமையும் அல்லது அது தொடர்பான விடயங்களை அரசாங்கம் எவ்வாறு முன்னெடுக்க எத்தனித்துள்ளது, அரசாங்கத்தின் திட்டம் என்ன, அதனை எவ்வாறு கையாளப்போகின்றது போன்ற விடயங்கள் தொடர்பாக எந்தவிதமான விடயமும் பேசப்படவில்லை.

எனவே, ஜனாதிபதிக்கு வாக்களிக்காதவர்களை ஓர் இரண்டாம் தர பிரஜையாக கருதுகின்றாரா? என்ற ஒரு கேள்வியும் எழுகின்றது. தான் பதவி ஏற்றபோது தனக்கு வாக்களித்த, வாக்களிக்காத அனைவருக்கும் ஜனாதிபதி எனக் கூறிவிட்டு இன்று அதற்கு முரண்பாடாக அனைத்து இடங்களிலும் ஜனாதிபதி பேசி வருகின்றமையானது சிறுபான்மை மக்கள் மத்தியில் ஒரு மன உளைச்சலை ஏற்படுத்துகின்றது.

ஜனாதிபதி தான் கலந்துகொள்கின்ற அனைத்து முக்கிய கூட்டங்களிலும் பௌத்த மதத்தையும் அதன் கலாசாரத்தையும் தான் பாதுகாப்பதற்கு முழுமையான முயற்சிகளை மேற்கொண்டுவருவதாக கூறுகின்றார். அதனை நாம் தவறு என்று கூற முடியாது. ஆனால், இந்த நாட்டில் இருக்கின்ற ஏனைய இனம், மதம், மொழியையும் பாதுகாக்கவேண்டிய பொறுப்பும் அவருக்கு இருக்கின்றது. அதனையும் முறையாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சிறுபான்மை மக்கள் அவருக்கு வாக்களிக்கவில்லை என்ற ஒரு விடயத்தை மனதில் வைத்துக்கொண்டு இந்த இனப்பிரச்சினை விடயத்திலும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதிலும் இழுத்தடிப்பு செய்யப்படுகின்றதா என்ற ஒரு கேள்வியும் எங்களிடம் எழுகின்றது.

இந்த நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மை மக்களுக்கு கிடைக்கவேண்டிய உரிமைகளை பெற்றுக்கொடுப்பதற்கு பின்வாங்குகின்றாரா? மலையக, வடக்கு, கிழக்கு மக்களுக்கு ஓரளவேனும் அரசியல் அதிகாரங்களை பெற்றுக்கொடுத்த மாகாண சபை முறைமையை இல்லாது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா? என்ற கேள்வி எழும்புவதோடு, இதன்மூலமாக சிறுபான்மை மக்களை இரண்டாம் தர பிரஜைகளாக மாற்றுவதற்கான ஒரு திட்டமா? இப்படி பல கேள்விகளை எங்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றது.

ஆனால், சிறுபான்மை மக்களாகிய நாங்கள் அனைவரும் அவரை அனைவருக்குமான ஒரு ஜனாதிபதியாகவே பார்க்கின்றோம். இந்த நாட்டில் இருக்கின்ற அனைவரையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்க்கவேண்டும். 30 வருடங்களுக்கு மேலாக இருக்கின்ற இனப்பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும். மலையக மக்கள் விடயத்திலும் விசேட கவனம் செலுத்தப்படவேண்டும்.

எனவே, இந்த விடயத்தில் அவருடைய கட்சியும் அவருடன் இணைந்திருக்கின்ற ஏனைய கட்சிகளும் அரசாங்கமும் இதற்கான ஒரு திட்டத்தை ஏற்படுத்தி அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பே எங்களிடம் இருக்கின்றது – என்றார்.

LK Newspapers Viber Community

# இலங்கையில் புதிய 12th Gen Gaming and Creator மடிகணினி தொடர்களை வெளியிடும் MSI

## - "Gameverse" ஒன்லைன் நிகழ்வில் வெளியீடு

- 01s F Hs n Gr hron rrn F n 2 h

விளையாட்டு, வடிவமைப்பு, வர்த்தக மடிகணினிகளில் (gaming, creator, business laptops) புத்தாக்கம் மிக்க கணினி தயாரிப்பாளரான MSI, மிக நவீன 12th Gen Intel H series processorகளுடனான மடிகணினிகளின் புதிய வரிசையை பெருமையுடன் வெளியிட்டுள்ளது. கேமிங் துறையில் உலகளாவிய முன்னணி நிறுவனமான MSI, 12th Gen (12ஆவது தலைமுறை) தயாரிப்பு வரிசை மடிகணினிகளை இலங்கைக்கு கொண்டுவரும் முதலாவது வர்த்தக நாமமாகும். இதன் மூலம் MSIஆனது, metaverse எனும் எதிர்வரும் சகாப்தத்திற்கான அவர்களின் உறுதியையும் நோக்கையும் நிரூபித்துள்ளது. Meta-ready இலச்சினையைப் பெருமைப்படுத்தும் இப்புதிய மடிகணினிகள் Metaverseஇற்கு இணக்கமான செயல்திறனை அனுபவிக்க விரும்பும் அனைவருக்காகவும், Intel CoreTM i7 அல்லது அதற்கு அடுத்த processor மற்றும் NVIDIA GeForce RTX 3070 அல்லது அதற்கு அடுத்த வகையிலான கிரபிக் வசதியையும் கொண்டுள்ளன.

புதிய கேமிங் லெப்டொப் வரிசையானது முந்தைய மாதிரிகளை விட குறிப்பிடத்தக்க செயல்திறன் மேம்பாட்டைக் கொண்டுள்ளது. இதில் CPU செயல்திறனில் 30% - 45% அதிகரிப்பு உள்ளது. மேலும் MSI ஆனது, Phase Change Liquid Metal Pad போன்ற அம்சங்களுடன் வெப்பமாதல் தொடர்பான தீர்வுகளில் புதுமைகளைச் சேர்த்துள்ளது. MSIயினது பிரத்தியேகமான குளிரூட்டல் அமைப்பானது, புதிய 12th Gen Intel processorகளின் சக்தியை முழுமையாக வெளிப்படுத்த உதவுகிறது. இது திரவ உலோகத்தைப் போன்ற திறனான - ஆனால், பாதுகாப்பான மற்றும் நம்பகமான தீர்வை வழங்குகிறது.

MSIஇன் Creator தொடர் தற்போது 17 அங்குலங்கள் வரையான திரையைக்கொண்ட உயர் வகையானதாக உள்ளது. புதிய Vapor Chamber Cooler (ஆவியாதல் தொகுதி குளிர்விக்கும் அறை) மூலம் ஒட்டுமொத்த CPU செயற்றிறன் 45% ஆக மேம்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், MSI MSI Penஇற்கான தொடுதிறன் வசதி, Calman இனது True Pixel Display திரை மற்றும் DTS உடனான சிறந்த, அதிவேக surround ஒலி அனுபவத்திற்கான உள்ளடக்கத்தை விரும்புபவர்களுக்கான அம்சங்களையும் இணைத்துள்ளது. .

இப்புதிய மடிகணினிகளின் விவரங்கள் வருமாறு:

நேர்த்தியான, அதிநவீன GS77 / 66 Stealth மடிகணினிகள் விருதுபெற்ற Stealth GS தொடரின் ஒரு பகுதியாகும். அவை கேமிங் மற்றும் தொழில்துறைப் பயன்பாட்டிற்கான இலகுரக, சக்திவாய்ந்த மடிகணினிகளாகும். GS77 ஒரு புதிய கறுப்பு ("core black") வர்ணம் மற்றும் மடிக்கும் இடத்தில் நீடித்து நிலைக்கும் zinc alloy உடனான கீழிடத்துடன் வருகிறது. அடிச் சட்டத்திலிருந்தான (Z height) 21mm இற்கும் குறைவான உயரம், துல்லியமான மற்றும் வசதியான தட்டச்சு அனுபவத்திற்காக MSIஆனது touchpad மற்றும் keycap அளவை பெரிதாக்கியுள்ளது. மிருதுவான treble மற்றும் சக்திவாய்ந்த bassஇற்கான ஆறு ஸ்பீக்கர்கள் இதில் பொருத்தப்பட்டுள்ளன. வணிக ரீதியாக விளையாட்டில் ஈடுபடுபவர்களுக்கு webcam lock switch மற்றும் சிறந்த பாதுகாப்பு மற்றும் இயக்கத்திற்காக 100W வரையான PD சார்ஜிங் வசதிகள் மூலம் பயன் பெற முடியும்.

MSI Raider GE Series (GE76 / 66) ஆனது கண்கவர் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இது panoramic aurora





ஒளி உணர்திறனைக் கொண்டுள்ளது. இது ஒரு கவர்ச்சியான விஞ்ஞானவியல் காட்சிச் சூழலை உருவாக்குவதுடன், இதன் செயற்றிறன் இன்னும் வியக்க வைக்கிறது. MSIஇன் புத்தாக்கமான வெப்ப எதிர்ப்பு வடிவமைப்புடன், Raider GE தொடரின் செயற்றிறன் MSI OverBoost ஊடாக GeForce RTX 3080 Ti மூலம் 220W வலு வரை செல்லலாம். Phase Change Liquid Metal Pad ஆனது, செயற்றிறன் மேலும் 10% ஆக அதிகரிப்பதுடன், Discrete Graphic Mode உதவியுடன் 4K வரையிலான காட்சிகளுடன், MSI Raider தொடரில் விளையாட்டாளர்கள் வேகமான மற்றும் மிருதுவான அனுபவத்தைப் பெற முடியும்.

Vector GP Series (GP76 / 66) ஆனது, செயற்றிறன் அடிப்படையிலான மடிகணினிகள் ஒரு புதிய எண்ணக்கருவுடன் உருவாக்கப்பட்டுள்ளன. "Vector" எனும் பெயர், விளையாட்டு, பொறியியல் அல்லது விஞ்ஞான ரீதியான கணினி செயற்பாடு ஆகியவற்றில் திருப்திகரமான அனுபவத்துடன் முன்னேறத் தேவையான அனைத்து ஆற்றலையும் GP தொடருக்கான MSIஇன் எதிர்பார்ப்பைக் குறிக்கிறது. Cooler Boost 5 தொழில்நுட்பத்துடன், Vectorஇன் செயற்றிறன் ஆனது, MSI OverBoost வழியாக 210W வரை அடையலாம்.

Crosshair GL Series ஆனது, MSI மற்றும் Ubisoft இடையேயான கூட்டுப்பணியாகும். இத்தொடரானது விளையாட்டின் உணர்வு மற்றும் மனநிலையால் ஈர்க்கப்பட்ட பிரத்தியேக விஞ்ஞான ரீதியான கூறுகளுடன் கூடிய எதிர்கால வடிவமைப்பைக் கொண்டுள்ளது. மேலும் Intel CoreTM i9 processorகள் மற்றும் Cooler Boost 5 தொழில்நுட்பம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. கிரபிக் செயற்றிறன் உச்சபட்ச மட்டத்தில் உள்ளமையானது, Crosshair தொடரை அதன் போட்டியிலிருந்து வேறுபடுத்துகிறது. Crosshair GL தொடர் மூன்று வகைகளில் வருகிறது. Crosshair 15, Crosshair 17 மற்றும் பிரத்தியேக அம்சங்களுடனான, மட்டுப்படுத்தப்பட்ட பதிப்பான Crosshair 15 Rainbow Six Extraction பதிப்பு ஆகியன இதில் அடங்குகின்றன.

Creator Z17 என்பது pen touch இனை ஆதரிக்கும் உலகின் முதல் 17 அங்குல மடிகணினியாகும். அத்துடன், 16:10 திரை விகிதத்துடன் மெல்லிய சட்டக ஓர வடிவமைப்பு மற்றும் True Color தொழில்நுட்பம் ஆகியன படைப்பாளர்களுக்கு சிறந்த உதவியாக இருக்கும். Creator Z16Pஆனது Vapor Chamber Cooler உடன் மேலதிக 20% செயற்றிறன் boost இனை




கொண்டுள்ளது. இது 76% மேலதிக குளிர்விக்கும் பகுதியையும், 65% மேலதிக காற்றோட்டத்தையும் உருவாக்குவதுடன், மேற்பரப்பு வெப்பநிலையை 2C (3.6F) ஆக குறைக்கிறது. போட்டித்திறன் மற்றும் CNC-சீரமைக்கப்பட்ட அலுமினியம் சட்டத்துடன், Creator Z தொடர் மடிகணினிகளானவை, NVIDIA Studio மடிகணினிகளாகும். இவை படைப்பாளிகள், ஆர்வம் மிக்க தொழில் வல்லுநர்கள் அல்லது உயர்தர, ப்ரீமியம் தயாரிப்புகளை அனுபவிக்கும் நுகர்வோர்களுக்காக உருவாக்கப்பட்டவையாகும்.

MSI அதன் வன்பொருளுடன் மட்டும் புத்தாக்கமான விடயங்களை உருவாக்கவில்லை என்பதுடன், எப்போதும் இல்லாத புத்திசாலித்தனமான மடிகணினிகளை உருவாக்கும் நோக்கத்துடன் MSI மையப்படுத்திய மென்பொருளையும் கொண்டுள்ளது. MSI Smart Auto ஆனது, உங்கள் பயன்பாட்டைப் பொறுத்து பொருத்தமான முறைகளை தானாக மாற்றும் அதே நேரத்தில், Ambient Silent AIஆனது, மடிகணினி விசிறியின் வேகத்தை சரிசெய்வதற்காக சுற்றுப்புற இரைச்சலின் அளவை (dB) கண்டறிந்து, ஒப்பீட்டளவில் அமைதியான விசிறியாக அதனை மாற்றி உங்களுக்கு சிறந்த செயற்றிறனையும் வழங்குகின்றது.

MSIயின் புதிய Gaming மற்றும் Content Creation தொடர்கள், MSIஇனது தனித்துவ அழகியல் அம்சத்துடன் தொடர்ந்து சக்திவாய்ந்த செயற்றிறன், புதுமையான வெப்ப தடுப்பு தொடர்பான தீர்வுகள் மற்றும் புதிய அம்சங்களின் தொகுப்பை வழங்குகிறது.

MSI MSIology Virtual Event: msi.gm/MSIology2022

MSI 12th gen products: https://msi.gm/12thGenGaming

MSI Twitch: twitch.tv/msigaming

MSI GAMING: https://www.msi.com/

MSI Facebook: https://www.facebook.com/MSIGamingSriLanka/

MSI Instagram: https://www.instagram.com/msigaming/

MSI YouTube: https://www.youtube.com/user/MSIGamingGlobal

MSI Twitter: https://twitter.com/msitweets

உடனுக்குடனான செய்திகள் மற்றும் மேலதிக தயாரிப்பு தகவலுக்கு: https://www.msi.com/rss ஊடாக MSI RSS இணைப்பில் இணையவும்.

MSI GAMING பற்றி

உலகின் முன்னணி கேமிங் தரக்குறியீடான கேமிங் மற்றும் இணைய விளையாட்டுகளில் MSI மிகவும் நம்பகமான பெயராகும். வடிவமைப்பில் முன்னேற்றம், விசேடத்துவங்களை தொடர்ந்து கொண்டுவருதல், தொழில்நுட்பப் புத்தாக்க கண்டுபிடிப்புகள் ஆகியவற்றின் கொள்கைகள் தொடர்பில் நாம் உறுதியாக இருக்கிறோம். விளையாட்டாளர்கள் மிக விரும்பும் தீவிர செயற்றிறன், யதார்த்தமான காட்சி வெளிப்பாடுகள், உண்மையான ஒலி, துல்லியமான கட்டுப்பாடு, மிருதுவான ஸ்ட்ரீமிங் செயல்பாடுகளை அதன் கேமிங் அம்சங்களில் ஒருங்கிணைத்து, MSI ஆனது விளையாட்டாளர்களை கடினமான சோதனைகள் மற்றும் பிழைகளிலிருந்து விடுவித்து, கேமிங் செயற்றிறனை அதன் எல்லைகளுக்கப்பால் கொண்டுசெல்கிறது. கடந்தகால சாதனைகளை முறியடிக்கும் உறுதி காரணமாக தொழில்துறை முழுவதும் கேமிங் உணர்வைக்கொண்ட ஒரு 'True Gaming' தரக்குறியீடாக MSI மாறியுள்ளது. தயாரிப்புகள் தொடர்பான மேலதிக தகவலுக்கு: https://www.msi.com

இந்த செய்திக்குறிப்பில் வெளியிடப்பட்ட தொழில்நுட்பம், படங்கள், வசனங்கள் மற்றும் ஏனைய உள்ளடக்கத்தின் அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. முன்னறிவிப்பு இல்லாமல் இந்த உள்ளடக்கங்கள் மாற்றங்களுக்கு உள்ளாக்கப்படலாம்.

# DPMC மடபாத்த வேர்க்ஷொப் வணிக ரீதியான வாகனங்களைத் தற்பொழுது கையாள்கிறது




டேவிட் பீரிஸ் குழுமத்தின் குழுமத் தலைவரும், முகாமைத்துவப் பணிப்பாளருமான ரோஹன திசாநாயக்க மங்கல விளக்கேற்றி வைக்கின்றார்.



இலங்கையின் பாரிய வாகன நிறுவனமான டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவேட்) லிமிட்டெட் மற்றுமொரு மைல்கல்லாக வணிக ரீதியிலான வாகனங்களின் திருத்தப் பணிகள் மற்றும் பராமரிப்புகளை மேற்கொள்வதற்கான வசதிகளை DPMC மடபாத்த வேர்க்ஷொப்பில் அறிமுகப்படுத்தியுள்ளது.

DPMC மடபாத்த வேர்க்ஷொப்பின் வர்த்தக ரீதியான வாகனங்களுக்கான வசதிகள் டேவிட் பீரிஸ் குழுமத்தின் குழுமத் தலைவரும், முகாமைத்துவப் பணிப்பாளருமான ரோஹன திசாநாயக்கவால் திறந்துவைக்கப்பட்டது. கொவிட்-19 ஒழுங்குவிதிகளுக்கமைய எளிமையான முறையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் டேவிட் பீரிஸ் குழுமத்தின் பிரதான அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தின் 28ஆவது வருடப்பூர்த்தியுடன் இணையும் வகையில் இந்நிகழ்வு அமைந்ததுடன், பாரம்பரியமான முறையில் கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றிய இன் பிரதிப் பொது முகாமையாளர் (சேவைகள்) சன்ன ரணவக்க குறிப்பிடுகையில், "DPMC மடபாத்த வேர்க்ஷொப்பில் பஜாஜ் வாகனங்களுக்கு மேலதிகமாக அனைத்து வகையிலான கார்கள் மற்றும் எஸ்யூவி வாகனங்களை சேர்விஸ் மற்றும் பழுதுபார்த்தல்களை மேற்கொள்ளலாம். எமது செயற்பாடுகளை விஸ்தரிக்கும் எண்ணக்கருவின் கீழ் வர்த்தக ரீதியிலான வாகனங்களுக்கான எமது நிபுணத்துவ சேவையை விரிவுபடுத்துவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்" - என்றார்.

இங்கு தற்பொழுது வர்த்தக ரீதியிலான வாகனங்களினதும் பராமரிப்பு, காலமுறையான சேவைகள், செயற்படும்போதான பழுதுகள், டிங்கரிங் மற்றும் பெயின்டிங், விபத்துகளின் பின்னரான பழுதுபார்த்தல்கள், சஸ்பென்ஷன், ஏசி பழுதுபார்த்தல்கள், இலத்திரனியல் பழுதுபார்த்தல்கள், கிறீசிங், இயந்திரம், எரிபொருள் முறைமை மற்றும் கியர்பொக்ஸ் பழுதுபார்த்தல்கள், வாகனங்களைக் கழுவுதல் மற்றும் உள்ளகப் பகுதியை சுத்தம் செய்தல் போன்ற சேவைகள் பொறுப்பேற்கப்படுகின்றன.

குழுமத்தின் டிபி லொஜிஸ்டிக்ஸ் நிறுவனத்தின் அனைத்து வர்த்தக ரீதியிலான வாகனங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்கள் DPMC மடபாத்த வேர்க்ஷொப்பினால் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றிலிருந்து கிடைத்த அனுபவங்களைக்கொண்டு வாடிக்கையாளர்களின் வர்த்தக ரீதியிலான வாகனங்களுக்கும் இவ்வசதிகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

அறிமுகப்படுத்தலுக்கான விசேட சலுகையாக புதிய வசதியில் சேர்விஸ் மற்றும் பழுதுபார்த்தல்களை மேற்கொள்ளும் வர்த்தக ரீதியிலான வாகனங்களுக்கு ஊழியர்களின் சேவைக்கான அறவீட்டில் 10 வீதக் கழிவும், உதிரிப்பாகங்களில் 5 வீதக் கழிவும் வழங்கப்படுகிறது.

புதிய வசதி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள 0114700600 என்ற இலக்கத்துக்கு அழைக்கவும்.




LK Newspapers Viber Community

# தண்ணீரூற்று பொதுச்சந்தை காவலாளிமீது தாக்குதல் நடத்திய ரவுடிக் கும்பல்

(வன்னி செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குச் சொந்தமான தண்ணீரூற்று பொதுச்சந்தை நேற்று (24 )நள்ளிரவு ஒரு மணியளவில் சில விஷமிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளதோடு சந்தையின் காவலாளியும் தாக்குதலுக்குள்ளாகி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.






## பொதுச் சந்தை சொத்துகளுக்கும் சேதம்

மதுபோதையில் சந்தையின் நுழைவாயிலை உடைத்துக்கொண்டு உள்ளே சென்ற கும்பல் பொதுச் சந்தையின் கட்டடங்கள், தளபாடங்களை உடைத்து சேதமாக்கியுள்ளது. மூன்று பேர் கொண்ட கும்பல் இணைந்து இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளமை பொதுச்சந்தை சி.சி.ரி.வி. கெமராவில் பதிவாகியுள்ளது.

முள்ளியவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாவிடில் மீண்டும் முடக்க நிலையை நோக்கிச் செல்லவேண்டிய அபாயம் ஏற்படும்

## யாழ். அரச அதிபர் மகேசன் தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

அனைத்து செயற்பாடுகளும் வழமைக்குத் திரும்பியுள்ள நிலையில் பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவிடத்து மீண்டும் ஒரு முடக்க நிலையை நோக்கிச் செல்லவேண்டிய அபாயம் ஏற்படும் - என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.



நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்ட சுகாதார மேம்பாட்டு கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது கொரோனா, டெங்கு, மலேரியா போன்ற தொற்றுநோய்ப் பரவலை தடுப்பது குறித்தும் ஆராயப்பட்டது.

யாழில் இதுவரை 19,062 பேர் கொரோனா தொற்றாளர்களாகவும் 502 இறப்புகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. தற்போது 35 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தலில் உள்ளன.

தடுப்பூசியை பொறுத்தவரை 30 வயதுக்கு மேல் 3,09,839 பேரும் 20 தொடக்கம் 29 வயதுடையவர்களில் 56,000 பேரும் 12 தொடக்கம் 19 வயதுடையவர்களில் 57,265 பேரும் முதலாவது தடுப்பூசியை பெற்றுள்ளனர்.

பூஸ்டர் தடுப்பூசியை 88,800 பேர் பெற்றுள்ளனர். முதலாம், இரண்டாம் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்கள், பூஸ்டர் தடுப்பூசியை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

30 வீதமானவர்களே பூஸ்டர் தடுப்பூசியை இதுவரை பெற்றுள்ளனர். ஒமிக்ரொன் திரிபு தற்போது பரவிவரும் நிலையில், யாழிலும் அது பரவுவதற்கான நிலைகள் காணப்படுகின்றன.

இந்தச் சூழ்நிலையில் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்வது அவசியம். இதற்கமைய, எதிர்வரும் 31ஆம் திகதி முதல், பூஸ்டர் தடுப்பூசி வாரம் பிரகடனப்படுத்தப்படவுள்ளது.

பாடசாலை போக்குவரத்து உட்பட அனைத்துச் செயற்பாடுகளும் வழமைக்குத் திரும்பியுள்ள நிலையில், பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவிடத்து மீண்டும் ஒரு முடக்க நிலையை நோக்கிச் செல்லவேண்டிய அபாயம் ஏற்படும் – என்றார்.

# தென்கொரிய சபாநாயகருக்கு நினைவுப் பரிசு

(சாவகச்சேரி நிருபர்)

இலங்கைக்கான உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள தென்கொரிய சபாநாயகருக்கான நினைவுப்பரிசில் கடந்த வெள்ளிக்கிழமை (21) வழங்கப்பட்டது.



தென்கொரிய சபாநாயகர் உள்ளிட்ட நாடாளுமன்ற பிரதிநிதிகளை வழியனுப்பி வைக்கும் நிகழ்வின்போதே இலங்கை விஜயத்தின்போது எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள் அடங்கிய தொகுப்பினை நினைவுப்பரிசாக வழங்கினர்.

குறித்த நிகழ்வில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட இலங்கை பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# வவுனியாவில் டெங்கு பரவும் இடங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை





(வவுனியா நிருபர்)

டெங்கு அபாயத்தையடுத்து வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதாரப் பிரிவினரினால் டெங்கு பரவும் இடங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதுடன், டெங்கு பரவும் அபாயம் காணப்பட்ட இடங்களுக்கு சிவப்பு எச்சரிக்கையும் வழங்கப்பட்டது.

வவுனியாவில் கடந்த இரு மாதங்களில் 20 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ள நிலையில், அதனைக் கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதன் ஒரு கட்டமாக வவுனியா, இறம்பைக்குளம் கிராம அலுவலர் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையில் நகரின் சகாயாமாதாபுரம், சூசைப்பிள்ளையார்குளம் ஆகிய பகுதிகளில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் விதமாக விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அப்பகுதியிலுள்ள வீடுகள், வர்த்தக நிலையங்களின் திண்மக்கழிவுகள் நகரசபை வாகனத்தில் ஏற்றப்பட்டதுடன், நுளம்புக் குடம்பிகள் பெருகும் நிலையில் காணப்பட்ட இடங்களுக்கு எச்சரிக்கை அறிவித்தலும் வழங்கப்பட்டது.

இந்நடவடிக்கை பொலிஸ் உத்தியோகத்தர்கள், சுகாதார ஊழியர்கள், நகரசபை சுகாதார ஊழியர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சங்கத்தானையில் மீள்குடியேற்ற அமைச்சின் வீட்டுத்திட்டம்

(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சங்கத்தானை ஜே/302 கிராம அலுவலர் பிரிவிலுள்ள வீடற்ற குடும்பம் ஒன்றுக்கு மீள்குடியேற்ற அமைச்சின் பத்து இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.



யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதனின் சிபாரிசுக்கமைவாக வழங்கப்பட்ட குறித்த வீட்டுத்திட்டத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (23) காலை இடம்பெற்றது.

வீட்டுக்கான அடிக்கல்லை அங்கஜன் எம்.பியின் இணைப்பாளர்கள் நாட்டி வைத்திருந்தனர்.


# மாமூலையில் பட்டப்பகலில் வீடு புகுந்து திருட்டு; ஒரு இலட்சத்து 90 ஆயிரம் பணம் கொள்ளை!

## வீட்டார் பொலிஸில் முறைப்பாடு

(முல்லைத்தீவு நிருபர்)

முல்லைத்தீவு - முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாமூலை கிராம அலுவலர் பிரிவிலுள்ள வீடொன்றில் கடந்த சனிக்கிழமை (22) முற்பகல் வேளையில் திருட்டுச்சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டின் குடும்பத்தலைவன் கால்நடை வளர்ப்பிற்காகவும், மனைவி உறவினர் வீட்டிற்கும் சென்ற நிலையில், வீட்டில் எவருமில்லாத சமயம் வீட்டின் கூரையினைப் பிரித்து உள்நுழைந்து, வீட்டு அலுமாரியிலிருந்த ஒரு இலட்சத்து 90 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் முள்ளியவளை பொலிஸாருக்கு தாம் தகவல் வழங்கியதைத் தொடர்ந்து, பொலிஸார் நேரடியாக வீட்டிற்கு வருகைதந்து நிலைமைகளைப் பார்வையிட்டதாகவும் வீட்டு உரிமையாளர்கள் தெரிவித்தனர்.



அதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் (23) குறித்த வீட்டிற்கு தடயவியல் பொலிஸார் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேலும் இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களை மோதிவிட்டு தப்பியோடிய தனியார் பஸ்

(யாழ். நிருபர்)

பாடசாலைக்கு சென்ற மாணவர்கள் மீது மோதி விபத்துக்குள்ளாக்கிய தனியார் பஸ் ஒன்று அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளது.

குறித்த விபத்தில் இரண்டு மாணவர்கள் உள்ளிட்ட மூவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நீர்வேலி பூதவராயர் மடம் பகுதியில் நேற்று திங்கட்கிழமை காலை 7 மணியளவில் இடம்பெற்ற குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குடும்பப் பெண் ஒருவர் மோட்டார்சைக்கிளில் தனது பிள்ளை உள்ளிட்ட இருவரை பாடசாலைக்கு அழைத்துச் சென்றவேளை, பருத்தித்துறை வீதி வழியாக யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் (மினி வான்) அவர்கள் மீது மோதி விபத்தினை ஏற்படுத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

இவ்விபத்தில் காயமடைந்த மாணவர்கள் இருவரும் அவர்களை பாடசாலைக்கு அழைத்துச் சென்ற குடும்பப் பெண்ணும் காயங்களுக்குள்ளான நிலையில், அங்கிருந்தவர்கள் மீட்டு கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

கோப்பாய் வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# யாழ். மாநகர சபையின் ‘காணும் பொங்கல் – 2022’





(யாழ். நிருபர்)

யாழ். மாநகர மக்கள் மற்றும் வர்த்தகர்களுடன் இணைந்து யாழ். மாநகர சபை முன்னெடுக்கும் ‘காணும் பொங்கல் விழா’ நேற்று முன்தினம் (23) மாலை 2 மணிமுதல் மாநகர ஆணையாளர் தலைமையில் யாழ். பண்ணைக்கடற்கரையில் நடைபெற்றது.

இத் தமிழ்ப் பாரம்பரியமிக்க பொங்கல் நிகழ்வில் யாழ். மாநகர மக்கள் மற்றும் வர்த்தகர்களுடன் இணைந்து யாழ். மாநகர சபையின் அனைத்து நிர்வாக அலகுகள் உட்பட 50இற்கும் மேற்பட்ட பானைகளில் பொங்கும் நிகழ்வும் சின்னஞ்சிறார்களை மகிழ்வூட்டுவதற்காக அவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் பெரியவர்களுக்கான முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல் உட்பட பல விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கனியவள அகழ்வுக்கு எதிராக மன்னாரில் பல இடங்களில் விழிப்புணர்வு பதாகைகள்

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்திலுள்ள கரையோரப் பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத கனியவள அகழ்வு மற்றும் ஆய்வுகளை உடனடியாக நிறுத்தக்கோரி மன்னாரின் சுற்றாடலை பாதுகாக்கும் அமைப்பின் ஒழுங்கமைப்பில் பொது இடங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.







மன்னார் கடற்கரையோரங்களில் காணப்படும் மணல்களில் மிகவும் விலை உயர்ந்த அரிதான தைய்தனியம் எனும் கனிமம் அதிகளவு காணப்பட்டு வருகின்ற நிலையில், குறித்த தைய்தனியத்தை அகழ்வு செய்யும் பணிகள் சட்டவிரோதமாக இடம்பெறுவதைத் தடுக்கக்கோரி குறித்த விழிப்புணர்வு பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலிய நிறுவனமொன்று குறித்த தைய்தனியம் அகழ்வுக்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாகவும் முதற்கட்டமாக மன்னாரில் பேசாலை, தலைமன்னார் உட்பட பல பகுதிகளில் மணலுக்கு அடியில் பல மீற்றர்கள் குழி தோண்டப்பட்டு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் அவற்றை உடனடியாக நிறுத்தக்கோரி மன்னாரின் சுற்றாடலை பாதுகாக்கும் அமைப்பினர் மும்மொழிகள் அடங்கிய குறித்த பதாகைகளை பிரதான பஸ் நிலையம், வைத்தியசாலை சந்தி, மடு சந்தி உட்பட பல பகுதிகளில் காட்சிப்படுத்தியுள்ளனர்.

மேற்படி காட்சிப்படுத்தப்பட்ட சில பதாகைகள் சில இடங்களில் கனியவள அகழ்வுடன் சம்மந்தப்பட்ட விஷமிகளால் கிழிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Newspaper Viber Community

# ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் படுகொலைக்கு நீதிகோரி மட்டக்களப்பில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்






(கனகராசா சரவணன்)

திருகோணமலையில் கடந்த 2006ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் 16ஆவது ஞாபகார்த்த தினமான நேற்று (24) அவரின் படுகொலைக்கு நீதிவேண்டி மட்டக்களப்பு காந்தி பூங்காவின் முன்னால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு ஊடக அமைப்புகளின் ஒத்துழைப்புடன் இடம்பெற்ற இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள், சமூக அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரின் படுகொலைக்கு நீதிவேண்டும் எனவும், ஊடகவியலாளர் கோகிலன் உட்பட கைதுசெய்யப்பட்ட முகப்புத்தக செயற்பாட்டாளர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனவும் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## போடியார் புலம்பல்!



கோட்டா பகல் கனவு காணுறாராம் எண்டு சம்மந்தரு சொல்லுறாரு. நல்லாட்சி காலத்தில சம்பந்தரும் பதினாறு எம்.பீ மாரும் நரி ரணிலோட நால்ரை வருஷமாக நாடகமாடி மக்கள ஏமாத்தின எலுவா.. பதினாற பத்தாக மாத்தின பெரும ரணிலிட்ட நீங்க கண்ட பகல் கனவு எலுவா.. ?

# பிரித்தானிய ‘எடின்பரோ கோமகன் சர்வதேச விருது’ அம்பாறையில் மூவர் வெண்கல விருதுக்கு தெரிவு

(கல்முனை நிருபர்)



பிரித்தானிய ‘எடின்பரோ கோமகன் சர்வதேச விருது’ வழங்கல் விழா - 2019/2020 விருதுக்கு (The Duke of Edinburgh's International Award) இவ்வருடம் அம்பாறை மாவட்டத்தில் ஜீனியஸ் 7 விருதுப்பிரிவூடாக 03 இளைஞர்கள் வெண்கல விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான இவ் சர்வதேச விருது வழங்கும் விழா இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் வழிகாட்டலின்கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் பணிப்பாளர் நாயகம் தமித்த விக்ரமசிங்க தலைமையில் முக்கியஸ்தர்கள் பலரின் பங்கேற்புடன் நாளை 26ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் டங்கன் ஒயிட் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விருதானது 13-24 வயது உட்பட்ட இளைஞர் யுவதிகளின் ஆளுமை, நுண்ணறிவு, வெளிக்கள ஆய்வு, தலைமைத்துவம், ஆற்றல், கல்வி, திறமை, விளையாட்டு, சர்வதேச தொடர்புகளுடைய இளைஞர் யுவதிகளுக்கு வழங்கப்படுகின்ற ஓர் சர்வதேச விருதாகும்.

இதேவேளை, அம்பாறை மாவட்ட முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரும் யூத் அலியன்ஸ் ஸ்ரீலங்கா இளைஞர் அமைப்பின் (Youth Alliance Sri Lanka) ஸ்தாபகத் தலைவரும் மற்றும் ஜீனியஸ் 7 விருதுப் பிரிவின் (Genius7 Award Unit) தலைவருமான இசட்.எம்.ஸாஜீத் இவ்விருதினை பெறவுள்ள அம்பாறை மாவட்ட இளைஞர் யுவதிகளை நெறிப்படுத்தி ஊக்கப்படுத்தி வழிகாட்டலை மேற்கொண்டவராவார்.

# இறக்காமம் வீதிகளுக்கு புதிய பெயர்ப்பலகைகள்

(இறக்காமம்)

இறக்காமம், வரிப்பத்தான்சேனை பிரதேசத்திலுள்ள பல வீதிகள் நீண்டகாலமாக பெயர்ப்பலகை இன்றி காணப்படுகின்றன. இவ்வீதிகளுக்கு பெயர்ப்பலகை பொருத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பிரதேச மக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இறக்காமம் பிரதேச சபை நிர்வாகத்திற்குட்பட்ட பெரும்பாலான உள்ளக வீதிகள் நீண்டகாலமாக பெயர்ப் பலகை இல்லாத நிலையில் காணப்படுகின்றன. இதனால் பிரதேச செயலகப் பிரிவில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்கள், வடிகான் மற்றும் வீதி புனரமைப்பு வேலைகளை இனங்காண்பதிலும் அவ் வேலைகள் தொடர்பான விடயங்களை கையாள்வதிலும், கணக்காய்வுக்கு உட்படுத்துவதிலும் நிர்வாக ரீதியாக அரச அதிகாரிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை, சில வீதிகளுக்கு இதுவரை சட்டரீதியாக பெயர் இடப்படாத நிலை காணப்படுவதுடன், கடந்த காலங்களில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களாகவும் தவிசாளராகவும் பதவி வகித்தவர்கள், குறித்த வீதிகளுக்கு பெயர்ப்பலகை பொருத்துவதற்கோ பெயரிடப்படாத வீதிகளுக்கு சட்டரீதியாக பெயரிடுவதற்கோ எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை எனவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அக்கரைப்பற்றில் புகைப்படத் திருவிழா




(றாசிக் நபாயிஸ்)

Photo Club Ceylonica அமைப்பினரால் எதிர்வரும் 29, 30ஆம் திகதிகளில், காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.30மணி வரையில் அக்கரைப்பற்று மாநகர சபையின் ஹல்லாஜ் மண்டபத்தில் புகைப்படத் திருவிழா நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இத்திருவிழா முற்றிலும் இலவசமாக நடைபெறவுள்ளதுடன், சர்வதேச புகைப்படப் போட்டிகளில் கலந்துகொண்டு விருதுகள் பெற்ற புகைப்படக் கலைஞர்கள் மற்றும் அவர்களின் புகைப்படங்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவின் மீளாய்வு கலந்துரையாடல்





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பேரிடர்கள் ஏற்படும்போது பொது மக்கள் நலன்கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முன்னாயத்தம் தொடர்பாக ஆராயும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவின் விசேட கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை (21) மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இம் மாவட்டத்தில் மழையுடன் கூடிய காலநிலை எற்படும் சந்தர்ப்பத்தில் பிரதேச செயலகப் பிரிவுகள் ரீதியாக அதிலும் குறிப்பாக மாவட்டத்தில் வெள்ளத்தினால் அதிகமாக பாதிப்பிற்குள்ளான கிரான், ஏறாவூர்ப்பற்று, மட்டக்களப்பு நகர், காத்தான்குடி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் முன்னெடுக்கப்பட்ட அனர்த்த நடவடிக்கைகள் தொடர்பாக இதன்போது விரிவாக ஆராயப்பட்டன. கடந்த காலங்களில் அனர்த்த வேளைகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக எவ்வாறான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என்பது தொடர்பான விபரங்கள் இதன்போது மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினால் முன்வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் யானை - மனித மோதல்களால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன், அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டன. இம்மாவட்டத்தில் சுனாமி இடர் ஏற்படும்போது பொது மக்களினை பாதுகாப்பதற்காக ஏழு சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளதாக உதவிப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.சியாத் தெரிவித்தார்.

அத்துடன் நாவற்குடா கிழக்கு பிரதேசத்தில் மழைக் காலங்களில் நீர் வழிந்தோடமுடியாது நீர்த்தேங்கி வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருந்த பிரதேசங்களில் நீர் வடிந்து தோணாவிற்கு செல்வதற்காக புதிதாக அமைக்கப்பட்ட 300 மீற்றர் நீளமான வடிகான் அமைப்பினை அனர்த்த முகாமைத்துவ உயர் அதிகாரிகள் குழு களவிஜயம் செய்து பார்வையிட்டது. இவ் வடிகான் அமைப்பு அமைத்ததினால் சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட பொது மக்கள் நன்மையடைந்துள்ளனர்.

மேலும் ஆரையம்பதி, காத்தான்குடி எல்லைப் பகுதியில் மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு நீர்வடிந்து ஓடாது தேங்கியிருப்பதினையும் இக்குழுவிற்கு மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி என்.சத்தியானந்தி தெரியப்படுத்தினார். இதனை நேரில் சென்று பார்வையிட்ட இக்குழு இதற்கான தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்காக புதிதாக 250 மீற்றர் வடிகானினை அமைப்பதற்கு ஐந்து மில்லியன் ரூபாவை ஒதுக்கித் தருவதாக உறுதி வழங்கியது. இதனூடாக வெள்ளநீரானது கடலுக்கு தடையின்றி செல்வதுடன், ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.சியாத் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இவ்விசேட கலந்துரையாடலில் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன், மனிதவளம் மற்றும் நிர்வாகத்திற்குப் பொறுப்பான அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் எ.திலகரத்ன, அனர்த்த முகாமைத்துவ செயற்றிட்ட பணிப்பாளர் பிரிகேடியர் டபிள்யூ.எல்.ஏ.சி.பெரேரா, பயிற்சி மற்றும் விழிப்புணர்வுக்கான பணிப்பாளர் சுகத் திசாநாயக்க, அனர்த்த முகாமைத்துவ திட்டமிடலுக்கான பணிப்பாளர் சுனில் ஜயவீர, இராணுவ ஒருங்கிணைப்பாளர் கமாண்டர் எச்.என்.எஸ்.பெரேரா, அனர்த்த முகாமைத்துவ தகவல் தொடர்பாடல் உதவிப் பணிப்பாளர் துசித்த வைத்தியரத்ன, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன், மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் (ஆரையம்பதி) திருமதி நமசிவாயம் சத்தியானந்தி மற்றும் ஏனைய துறைசார் திணைக்களங்களின் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# புதிய அரசியலமைப்பையும் மாகாணசபைத் தேர்தலையும் நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடிப்பதே அரசின் விருப்பம்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன்

(வீரமுனை நிருபர்)



புதிய அரசியலமைப்பு என்ற ஆயுதத்தை கையில் எடுத்து மாகாணசபைத் தேர்தலை இழுத்தடிப்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாக உள்ளது. அரசாங்கம் இவ்விரண்டு விடயங்களை இழுத்தடித்துக்கொண்டு உள்நாட்டு அரசியல்வாதிகளை மட்டுமல்ல, இந்தியா உட்பட சர்வதேச நாடுகளையும் ஏமாற்றி வருகிறது என மட்டு. மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

தற்போதைய அரசின் புதிய அரசியலமைப்பு தொடர்பாக மேலும் கூறுகையில்,

இலங்கையில் நடைமுறையிலுள்ள எந்த அரசியல் யாப்புகளும் தமிழ்த் தலைமைகளின் ஒப்புதல் இன்றியே நிறைவேற்றப்பட்ட அரசியல் யாப்புகளாகும்.

புதிய அரசியல் யாப்பு மாற்றம் தொடர்பாக கடந்த நல்லாட்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றி, பலதரப்பட்ட குழுக்களை அமைத்து செயற்பட்டாலும் இறுதியில் அப்போதிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பௌத்த மகாசங்க பிக்குகளுடன் கலந்துரையாடினார்.

அதன் பின்னர் அரசினால் அத்தகைய சட்ட மூலமொன்று தயாரிக்கப்படுமாயின் நாட்டின் எதிர்கால ஸ்திரத்தன்மை தொடர்பாக, ஆழமாக ஆய்வு செய்யப்பட்ட பின்னரே தயாரிக்கப்படும் என்றும் ஜனாதிபதி மைத்ரி தெரிவித்திருந்தார்.

பௌத்த மகா சங்கத்தின் சந்திப்பின் பின்னர் அப்போதைய ஜனாதிபதி மைத்ரி, புதிய அரசியல் யாப்பு ஒன்று வரக்கூடாது என்பதில் குறியாக இருந்து அதை வரச்செய்யாமல் காலத்தைக் கடத்தினார். இதற்கு அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவும் உடந்தையாக இருந்தார்.

அதன் பின்னர் 2019இல் புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற கோட்டாபய ராஜபக்ஷ 2020, பொதுத்தேர்தலுக்கு பின்னர் அவரின் ஆட்சியில் புதிய அரசியலமைப்பிற்கான அடிப்படை சட்டமூலத்தை தயாரிப்பதற்கான புத்திஜீவிகள் குழுவை நியமித்திருந்தார்.

நாட்டுக்கு தேவையான புதிய அரசியலமைப்பை வகுப்பதற்கான சட்டமூலத்தை தயாரிக்கவென ஒன்பது பேர் கொண்ட புத்திஜீவிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சர் உதய பிரபாத் கம்மன்பில கூறியிருந்தார்.

இந்தக் குழுவிற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா தலைமையில் ஜனாதிபதி சட்டத்தரணி காமினி மாரப்பன, ஜனாதிபதி சட்டத்தரணி மனோகர டி சில்வா, ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன, பேராசிரியர் திருமதி நசீமா ஹமூர்தீன், கலாநிதி ஏ.சர்வேஸ்வரன், ஜனாதிபதி சட்டத்தரணி சமந்த ரத்வத்தே, பேராசிரியர் வசந்த செனவிரத்ன, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

இது தொடர்பாக அமைச்சரவைத் தீர்மானம், 20ஆவது அரசியல் யாப்பு திருத்தம் மற்றும் புதிய அரசியல் யாப்பு ஒன்றுக்கான திருத்த வரைபு, இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பில் 2015ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 19ஆவது திருத்தத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை மற்றும் குறைபாடுகளை களைவதற்காக குறுகிய கால நடவடிக்கை என்ற ரீதியில் 20ஆவது அரசியல் யாப்புத் திருத்தத்திற்கான திருத்தச் சட்டமூலத்தை வகுப்பதற்காக சட்டத் திருத்த வரைபிற்கு ஆலோசனை வழங்குவதற்கு 2020.08.19ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

2020.08.19ஆம் திகதி அன்று அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட வகையில் நீதி அமைச்சர் சமர்ப்பித்த பரிந்துரையை கவனத்திற்கொண்டு புதிய அரசியல் யாப்பு ஒன்றுக்கான அடிப்படை திருத்தச் சட்ட மூலத்தை தயாரிப்பதற்காக நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இந்த குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கை கடந்த வருடம் 2021 டிசம்பர் கையளிக்கப்படுவதாகவும் இந்த 2020, ஜனவரியில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும் கூறப்பட்டது.

ஆனால் தற்போது கடந்த வாரம் ஜனாதிபதி கோட்டாபய, பௌத்த மகாசங்க பிக்குகளை அழைத்து கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தார். ஜனாதிபதிக்கு பூரண ஆதரவு வழங்குவதாக உறுதி கூறியதாக செய்திகள் வந்தன. எந்த விடயங்களுக்கு ஆதரவு வழங்குவதாக உறுதி கூறினார்கள் என விபரமாக கூறப்படாவிட்டாலும் நிச்சயமாக, புதிய அரசியல் யாப்பு திருத்தம் தொடர்பாக ஆலோசனைகளை தெரிவிக்காமல் இருந்திருக்க மாட்டார்கள்.

இந்த வருடத்துக்குள் புதிய அரசியல் யாப்பு நிறைவேறலாம் என அமைச்சர்கள் பலர் கூறுகின்றனர். இதனை விட மாகாணசபைத் தேர்தலும் இந்த வருடத்திற்குள் நடத்தலாம் என்பதை கூறுகின்றனர்.

உண்மையில் அரசாங்கத்தின் போக்கால் ஆட்சியாளர்களுடைய செல்வாக்கு குறைந்துள்ளது. அதுமட்டுமன்றி, பொருளாதார நெருக்கடி, உணவுப்பஞ்சம் என அரசின் செயல்பாடுகளால் வீழ்ச்சி நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான காரணத்தை அரசாங்கமும் அமைச்சர்களும் வெளியில் சொல்லாமல் புதிய அரசியல் யாப்புத் திருத்தத்தை இழுத்தடித்துக்கொண்டு மாகாணசபைத் தேர்தலை காலம் கடத்துவதே அரசின் நிலைப்பாடு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரை எந்த வேளையில் எந்த தேர்தல் இடம்பெற்றாலும் அதற்கு முகம் கொடுக்க தயாராகவே உள்ளது எனவும் மேலும் கூறினார்.

# வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தினை மேம்படுத்தும் பயிற்சிநெறி - காசோலை வழங்கல்




(கிண்ணியா நிருபர்)

வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தினை மேம்படுத்தும் நோக்கில் பயிற்சிநெறியொன்று தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று (24) இடம்பெற்றது.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் தம்பலகாமம் பிரதேச சமுர்த்தி கிளையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இச்செயலமர்வில் கால்நடை வளர்ப்பாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல், பொருளாதார அபிவிருத்திக்கு முன்னெடுத்தல் உட்பட பல பயிற்சிகளும் வழங்கப்பட்டதுடன், 35 பயனாளிகளுக்கு 64 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலைகளும் இதன்போது வழங்கப்பட்டன.

சுயதொழில் உற்பத்தி, வாழ்வாதாரத் திட்டத்தை மேம்படுத்தல், வியாபார கைத்தொழில் போன்ற நுட்பங்களை வளர்ச்சி பெறச்செய்தல் உள்ளிட்ட பயிற்சியினை வளவாளராக கலந்துகொண்ட திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐங்கரன் முன்வைத்தார். குறித்த நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி, உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சித்திக் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

LK Newspapers Viber Community

# ஞாயிறு தினங்களில் நடைபெறும் தனியார் வகுப்புகளால் அறநெறிப் பாடசாலை கல்வி நடவடிக்கைகள் பின்னடைவு

(துறைநீலாவணை நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புகள் நடைபெறுவதனால் அறநெறிப் பாடசாலைகளை மூடி விடுகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளதாக அறநெறிப் பாடசாலைகளின் அதிபர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அறநெறிப் பாடசாலைகளை மேம்படுத்தும் நோக்கில் கல்வி அமைச்சு சுற்றுநிருபங்களை வெளியிட்டுள்ள நிலையில், அதனை உதாசீனப்படுத்தும் நோக்கில் கிழக்கு மாகாணத்தில் பல இடங்களில் தனியார் கல்வி நிலையங்கள் ஞாயிறு தினங்களில் தனியார் வகுப்புகளை முன்னெடுத்து வருவதாகவும் இதனால் அறநெறிப் பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகை தருவதில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகவும் இவ்வாறான நிலைமை தொடருமாயின் மிக விரைவில் அறநெறிப் பாடசாலைகளை மூடிவிட வேண்டிய துர்ப்பாக்கியமான நிலை உருவாகும் எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக இந்து சமய அறநெறிப் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு கிராமப்புறங்களில் தனியார் கல்வி நிலையங்கள் தடையாக அமைந்துள்ளன.

கல்வி அமைச்சின் அங்கீகாரத்துடன் இயங்கும் அறநெறிப் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படுத்தும் நோக்கில் உழைப்பினை அடிப்படையாகக்கொண்டு சிலர் முன்னெடுத்துவருகின்ற செயற்பாடுகள் விழுமியக் கல்விக்கு சவாலாக மாறியுள்ளது.

இது தொடர்பாக பல தடவைகள் பிரதேச, மாவட்ட, மாகாண ரீதியாக உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ள போதிலும் இதுவரைக்கும் எதுவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பது அறநெறிப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் முன்வைக்கின்றன கருத்தாகும்.

இது தொடர்பாக துரிதமாக துறைசார் அதிகாரிகள் நடவடிக்கையை முன்னெடுத்து அறநெறிக் கல்வியினை மேம்படுத்துவதற்கு உதவுமாறு கோரிக்கை முன்வைக்கின்றனர்.

# கிண்ணியாவில் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

(பதுர்தீன் சியானா)

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அஹமட் லேன் பகுதியில் ஹசிஸ் போதைப்பொருள் மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (23) மாலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் திருகோணமலை மாவட்ட முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் என்பவரின் மூத்த மகனான முஹம்மட் மஹ்ரூம் அப்துல்லா (31 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் திருகோணமலை பிராந்தியத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து குறித்த சந்தேகநபரை சோதனையிட்டபோது, அவரிடமிருந்து ஹசிஸ் என்றழைக்கப்படும் போதைப்பொருள் ஒரு கிராம் 170 மில்லி கிராம் மற்றும் ஹெரோயின் 150 மில்லி கிராம் கைப்பற்றப்பட்டதாகவும் பிராந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேகநபரை போதைப்பொருளுடன் கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதுடன், சந்தேகநபரை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த கசிப்புப் போத்தல்கள் மீட்பு

## கொக்கட்டிச்சோலையில் ஒருவர் கைது

(கல்லடி நிருபர்)

நிலத்தில் விற்பனைக்காக புதைக்கப்பட்டிருந்த கசிப்பு போத்தல்களுடன் மட்டு. கொக்கட்டிச்சோலையில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாந்திமலை பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவுப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். இதன்போது விற்பனைக்கென வைக்கப்பட்டிருந்த 20,000 மில்லிலீற்றர் கசிப்பு அடங்கிய போத்தல்கள் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. மாவட்டத்தில் சேதனப் பசளை உற்பத்தி தொடர்பான செயலமர்வு





ஜனாதிபதியின் எண்ணக்கருவில் உதித்த சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்துக்கமைவாக பசுமையான நஞ்சற்ற நாடு எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு மாவட்ட மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் இயற்கை உர உற்பத்தி தொடர்பான செயலமர் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர் விவசாயத்துறையில் உள்ளவர்கள் விவசாயிகளின் உற்பத்தியை அதிகரிப்பதை நோக்காகக்கொண்டு செயற்படவேண்டும். இவ்வாறு செயற்படுவதன் மூலம் அதிக விளைச்சலை பெறமுடியும். இயற்கை உரத்தினை துரிதமாகவும் வினைத்திறனாகவும் உற்பத்திசெய்யவேண்டும். இதற்காக இராணுவத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளது.

பெரும்போகத்தின்போது இயற்கை உரத்தினை மட்டும் பாவனைக்கு விவசாயிகளுக்கு சிபாரிசு செய்யப்பட்டது. இம்முறை இரசாயன உரம் தனியாரினால் விற்பனைசெய்யப்படவுள்ளது இரசாயன உரப் பாவனையினால் தொற்றாநோய் அதிகளவில் ஏற்படுகிறது. மற்றும் எமது நாட்டின் உணவு பாதுகாப்பினை அனைத்து உத்தியோகத்தர்களும் உறுதிப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த், பசுமை உற்பத்தி செயலணி அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் பிரிகேடியர் டிலுக்க பண்டார, மாவட்ட விவசாயப் பணிப்பாளர், பிரதி விவசாய பணிப்பாளர், கமநல சேவை ஆணையாளர், பணிப்பாளர்கள், இராணுவ அதிகாரிகள், விவசாய போதனா ஆசிரியர்கள், பெரும்போக உத்தியோகத்தர்கள், விவசாய துறையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# திருகோணமலையில் படுகொலைசெய்யப்பட்ட ஊடகர் சுகிர்தராஜனுக்கு மட்டக்களப்பில் 16 ஆவது நினைவுதினம்





(வெல்லாவெளி நிருபர்)

திருகோணமலையில் படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் சு.சுகிர்தராஜனின் 16ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று (24) மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டு. ஊடக அமையத்தில் மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு.ஊடக அமையம் ஆகியன இணைந்து இந்த நிகழ்வினை நடத்தியது.

இதன்போது படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் சு.சுகிர்தராஜனின் படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு, ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய செயலாளர் எஸ்.நிலாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஊடகவியலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பா.அரியநேத்திரன், ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

2006 இல் உயர்தரக் கல்வியை முடித்து பின்பு, பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருந்த 5 மாணவர்கள், திருகோணமலை கடற்கரையில் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

படுகொலைசெய்யப்பட்ட இந்த மாணவர்களை இவர் நிழற்படமெடுத்து செய்தி வெளியிட்டிருந்தார். மாணவர்களின் இறப்புக்கு கைக்குண்டுத் தாக்குதலே காரணம் என்று விசாரணையை திசை திருப்ப முயற்சிக்கப்பட்டபோது, இவர் எடுத்த நிழற்படங்கள் தலையில் சுடப்பட்டு இறந்ததை தெளிவாக எடுத்துக்காட்டின. இதனால் அரசுக்கு சர்வதேச ரீதியில் அவப்பெயரும், அழுத்தங்களும் ஏற்பட்டன.

அத்துடன், கொலை செய்யப்படுவதற்கு முதல் நாள், அரசு சார்பு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் திருகோணமலையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் அடங்கிய தகவல்களை இவர் சுடரொளியில் வெளியிட்டிருந்தார்.

சுகிர்தராஜன் மட்டக்களப்பு, குருமண்வெளியில் பிறந்தார். தந்தையார் சுப்பிரமணியம். தாயார் அருள் ஞானம்மா. அம்பாறை வீரமுனையை வசிப்பிடமாகக்கொண்ட இவர், திருகோணமலையில் பணி நிமித்தம் தங்கியிருந்தார்.

பாண்டிருப்பு கதிர்ப்பு கலை இலக்கிய வட்டத்தின் ஸ்தாபகத் தலைவரான இவர், 1997இல் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் ஊழியராக பணியாற்றினார். அத்துடன், சுடரொளி, உதயன் ஆகிய பத்திரிகைகளின் திருகோணமலை நிருபராகக் கடமையாற்றினார்.

இவருக்கு மிதுசா (வயது 19), சதுர்சன் (வயது 17) என்று 2 பிள்ளைகள் இருக்கின்றனர். உள்ளதை உள்ளபடி உலகுக்கு வெளிப்படுத்தும் ஊடகப் பணியை நேர்மையாக செய்பவர்களின் உயிருக்கு உத்தரவாதம் இருப்பதில்லை. இதில் பலியானவர்களின் தொகை எண்ணிலடங்காதவை. அவர்களுக்கு நாம் செய்யும் ஒரே நன்றிக்கடன், அவர்களின் நினைவுநாளில் அவர்களுக்கான மரியாதையை செலுத்துவதும், அவர்களின் அர்ப்பணிப்பையும், தியாகத்தையும் நினைவு கூருவதுமாகும். தனது 36ஆவது வயதில் உயிரிழந்த சுகிர்தராஜனுக்கு கண்ணீர் அஞ்சலிகள் உரித்தாகட்டும்.

# கந்தளாய் மோட்டார்சைக்கிள் விபத்தில் நால்வர் படுகாயம்

(பதுர்தீன் சியானா)

திருகோணமலை - கந்தளாய் பிரதான வீதி சாலியபுர சந்தியில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் நால்வர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து நேற்று முன்தினம் (23) இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கடமையாற்றிவரும் பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.


இவ்விபத்தில் கந்தளாய், கந்தலாவ பகுதியைச் சேர்ந்த சானுக்க தனபால (35 வயது) என்ற பொலிஸ் உத்தியோகத்தரே படுகாயமடைந்துள்ளார்.

மதுபோதையில் மோட்டார்சைக்கிளில் பொலிஸ் உத்தியோகத்தர் மூவரை ஏற்றி வந்ததாகவும் குறுக்கே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

விபத்து தொடர்பிலான விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காரைதீவு ஸ்ரீ அரசடிப்பிள்ளையார் ஆலய சங்காபிஷேகம்





(காரைதீவு நிருபர்)

அம்பாறை மாவட்ட காரைதீவு பிரதான வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ அரசடிப் பிள்ளையார் ஆலயத்தில் நேற்றுக்காலை 9 மணியளவில் சங்காபிஷேகம் ஆரம்பித்து 12.30 வரை பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் உற்சவ யாகசாலை கிரியைகள், பூஜைகள் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து சிவாச்சாரியார்கள் வேதமந்திரங்கள் முழங்க, கோவில் வளாகத்தில் திரண்டிருந்த பக்தர்கள் பக்தி அரோகரா அரோகரா என கோஷங்கள் செய்ய புனிதநீரை சங்கினால் விநாயகப்பெருமனுக்கு அபிஷேகம் செய்து பூக்களை தூவி வழிபட்டதுடன், விநாயகப்பெருமன் தேரில் எழுந்தருளி உள்வீதியுலா இடம்பெற்றன.

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து நாட்டுமக்கள் பாதுகாப்புப் பெறவேண்டியும் உலக மக்களுக்குமான நல்லாசி வேண்டியும் யாகசாலை கிரியைகள் இடம்பெற்றன. பக்தர்கள் வழிபாடுகளில் கலந்து சிறப்பித்தனர்.

# அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் 49ஆவது பொதுக் கூட்டம் கல்முனையில்

## புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது

(பெரியநீலாவணை நிருபர்)

அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் 49ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் (23) கல்முனை அல்-பஹ்ரியா தேசிய பாடசாலையில் நடைபெற்றது. இந்தப் பொதுக் கூட்டத்திற்கு இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் சார்பாக அதன் கிழக்கு பிராந்திய அபிவிருத்திக் குழு உறுப்பினரும், ஓட்டமாவடி உதைபந்தாட்ட லீக்கின் செயலாளருமான ஏ.எம்.மன்சூர் கலந்துகொண்டு புதிய நிர்வாகத் தெரிவை நடத்திவைத்தார்.

இதன்போது 2022 / 2023 காலப்பகுதிக்கான அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் நிர்வாகத்தினர் தெரிவுசெய்யப்பட்டனர்.

மாவட்டத்தின் லீக்கில் பதிவுசெய்யப்பட்ட 31 விளையாட்டுக் கழகங்களிலிருந்தும் கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கமைய லீக்கின் புதிய தலைவராக போட்டியின்றி








LK NewsPapers Viber Community

முன்னாள் தலைவரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான வை.கே.ரஹ்மான் தெரிவுசெய்யப்பட்டார். பொதுச் செயலாளராக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பிரதி பொதுச் செயலாளரும், கிழக்கு மாகாண அபிவிருத்திக் குழு தவிசாளரும் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான எம்.ஐ.எம்.அப்துல் மனாப், உதவிச் செயலாளர் எஸ்.ரி.எம்.பஸ்வாக், உதவிப் பொருளாளர் ஏ.எச்.எம்.பாரிஸ் ஆகியோரும் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டனர்.

பொருளாளர் மற்றும் உப தலைவர் பதவிகளுக்கான தெரிவு வாக்கெடுப்பின் மூலம் நேற்று இடம்பெற்றன. வாக்கெடுப்பின் போது மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட 31 கழகங்களிலிருந்தும் 81 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர். எனினும், வாக்களிப்பின்போது இருவர் வருகை தராததால் 79 பேர் வாக்களிப்பில் கலந்துகொண்டனர்.

புதிய பொருளாளர் பதவிக்கு எஸ்.எம்.கான், ஆர்.எம்.பஸ்லூன் ஆகியோர் போட்டியிட்டனர். இதில் 52 வாக்குகளைப் பெற்று எஸ்.எம்.கான் புதிய பொருளாளராக தெரிவுசெய்யப்பட்டார். லீக்கின் 06 உப தலைவர் பதவிகளுக்காக அப்பாஸ் எம்.நியாஸ், எம்.எஸ்.உமர் அலி, எம்.எல்.ரபீக், என்.எம்.ஜெலீல், எம்.பி.எம்.ரஷீட், அலியார் பைஸர், யு.எல்.றமீஸ், எம்.எல்.எம். ஜமால்டீன், கே.கேலும் குமார பெர்னாண்டோ ஆகிய 09 பேரின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டிருந்தன. வாக்களிப்பின்போது ஒருவர் விலகிக்கொண்டதுடன், எம்.பி.எம்.றஷீட் (65), அப்பாஸ் எம் நியாஸ் (63), அலியார் பைஸர் (58), எம்.எல். ரபீக் (57), கே. கேலும் குமார பெர்னாண்டோ (55), என்.எம்.ஜெலீல் (49) வாக்குகளை பெற்று உப தலைவர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

நிகழ்வின்போது, அண்மையில் கிழக்கு மாகாண உதைபந்தாட்ட அணிக்கு தெரிவுசெய்யப்பட்ட 30 வீரர்களில் அம்பாறை மாவட்ட லீக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து விளையாட்டு வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டதை பாராட்டி குறித்த வீரர்கள் இங்கு பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

# கல்முனை வின்னர்ஸ் பூப்பந்தாட்ட மைதானம் - விளையாட்டு பயிற்றுவிப்பு நிலையத்தின் மேம்பாட்டுக்காக நிதியுதவி!




(மாளிகைக்காடு நிருபர்)

அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவரும், அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினருமான 'கிழக்கின் கேடயம்' செயற்பாட்டாளர் எஸ்.எம்.சபீஸினால் கல்முனை வின்னர்ஸ் பூப்பந்தாட்ட மைதானம் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பு நிலையத்தின் மேம்பாட்டுக்காக நிதியுதவி வழங்கப்பட்டது. கல்முனை வின்னர்ஸ் தலைவரும், பயிற்றுவிப்பாளருமான ஆசிரியர் யூ.எல்.எம்.ஹிலாலின் வேண்டுகோளுக்கிணங்க வின்னர்ஸ் பூப்பந்தாட்ட மைதானத்தில் வைத்து இந்த உதவித்தொகை வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றிய 'கிழக்கின் கேடயம்' செயற்பாட்டாளர் எஸ்.எம்.சபீஸ், அன்றாட வேலைப்பளு மற்றும் நேரமின்மை காரணமாக நாம் உடற்பயிற்சி செய்வது குறைவாகத்தான் உள்ளது. இவ்வாறான விளையாட்டு அரங்குகள் சுகாதாரத்தை மேம்படுத்த அவசியமானதொன்றாகும். இன்றைய காலகட்டத்தில் பலர் பல்வேறு வகையான தொழில்துறைகளில் முதலீடுகளை மேற்கொண்டுவரும் நிலையில் பூப்பந்தாட்ட விளையாட்டுத்துறையினை மேம்படுத்தும் நோக்கில் மட்டுமல்லாமல், உடற்பயிற்சியினையும் உடல் ஆரோக்கியத்திற்கு வழியமைக்கும் வகையில் இப்பூப்பந்தாட்ட உள்ளக அரங்கம் இருப்பதையிட்டு இந்த நல்ல செயற்றிட்டத்தை வரவேற்பதுடன், பூப்பந்தாட்ட விளையாட்டு மூலம் உடல் செம்மையை சீராக வைத்திருக்க முடியும் என்ற நம்பிக்கை காணப்படுகிறது.

மேலும் இளைஞர்கள் இந்த பூப்பந்தாட்ட விளையாட்டின் மூலம் தம்மிடையே காணப்படும் திறனை விருத்திசெய்யும் வாய்ப்புள்ளது. இதன் மூலம் திறமைகளை வெளிக்கொண்டுவர முடிவதுடன் எதிர்காலத்தில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக இடம்பெறும் பூப்பந்தாட்ட போட்டியில் பிரகாசிக்கக்கூடிய நிலை உள்ளது - என்றார்.

இந்நிகழ்வில் கல்முனை வின்னர்ஸ் பூப்பந்தாட்ட மைதானம் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பு நிலைய உத்தியோகத்தர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், வீரர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மெத்தனப்போக்கான செயற்பாட்டால் மாளிகைக்காடு மக்கள் அசௌகரியம்

## வாகனங்கள் பழுதாகும் நிலை தோன்றியுள்ளது!





(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டம் மாளிகைக்காடு கிராமம் ஆரம்பிக்கும் தேவாலய சந்திமுதல் காரைதீவு பிரதேச செயலக முடிவு வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் மேற்கொண்ட வீதி அபிவிருத்தியில் சீரின்மை காரணமாக வாகனங்கள் பழுதாகும் நிலை ஏற்பட்டுள்ளதாக வாகனச் சாரதிகளும், பாதசாரிகளும் விசனம் தெரிவித்து வருகின்றனர்.

கடந்த பல மாதங்களாக மேற்குறித்த பிரதேசத்தில் வீதியை இருவழிப் பாதையாக மாற்ற வீதியின் நடுவில் கொங்கிரீட் தூண்களைக்கொண்டு பிரித்திருந்த நிலையில் இரவுவேளைகளில் அதன்மூலம் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை அனுபவித்து வந்ததுடன், விமர்சனங்களும் எழுந்தன. அதனையடுத்து வீதியை அகலமாக்குவதற்கு தீர்மானித்த வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் அவசர அவசரமாக காபட் வீதியின் மேல் மேலும் அஸ்பால்ட் இட்டு சீரானமுறையில் மட்டப்படுத்தாமல் விட்டதன் காரணமாக மாளிகைக்காடு கிராமம் ஆரம்பிக்கும் தேவாலய சந்திமுதல் காரைதீவு பிரதேச செயலக முடிவு வரை வீதி கடுமையானமுறையில் பழுதடைந்து வாகனங்களை சீரான வேகத்தில் செலுத்த முடியாத நிலை உருவாகியுள்ளதுடன், வாகனங்களும் அலறி பழுதாகும் நிலை தோன்றியுள்ளது.

கல்முனை - அக்கரைப்பற்றை இணைக்கும் குறித்த வீதி நெடுந்தூரம் பயணிப்பவர்களுக்கு பிரதான வீதியாக அமைந்துள்ளதுடன், ஒருநாளைக்கு சுமார் 8000இற்கும் அதிகமான வாகனங்கள் பயணிக்கும் வீதியாக அமைந்துள்ளது. இதனால் இவ்வீதியை பாவிக்கும் மக்கள் கடுமையான சிக்கல்களை அனுபவித்து வருவதனால் வீதி அபிவிருத்தி அதிகாரசபை உடனடியாக இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுத்தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். இதற்காக பாவிக்கப்பட்ட கனரக வாகனங்களும் இதுவரை அகற்றப்படாமல் அவ்விடத்திலேயே தரித்துநிறுத்தப்பட்டுள்ளதால் பல்வேறு நெருக்கடி நிலைகள் தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு ஆட்பதிவுத் திணைக்கள உதவி ஆணையாளராக திரவியராஜ் நியமனம்



(கல்லடி நிருபர்)

ஆட்பதிவுத் திணைக்களத்தின் கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான உதவி ஆணையாளராக இ.திரவியராஜ் கடந்த சனிக்கிழமை (22) தனது கடமைகளை மட்டக்களப்பிலுள்ள ஆட்பதிவுத் திணைக்களத்தின் காரியாலயத்தில் பொறுப்பேற்றுக்கொண்டார். இவர் அக்கரைப்பற்று ஆலையடிவேம்புப் பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

இப்பதவிக்கு இவர் நியமிக்கப்படும்வரை பொத்துவில் பிரதேச செயலாளராகப் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டு. நகருக்கு 8 கிலோ மான் இறைச்சியை எடுத்துச்சென்ற இளைஞர்கள் இருவர் கைது; முச்சக்கரண்டி ஒன்று மீட்பு!



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஆயித்தியமலை பிரதேசத்திலிருந்து மட்டக்களப்பு நகருக்கு வியாபாரத்துக்காக 8 கிலோ மான் இறைச்சியை முச்சக்கரவண்டி ஒன்றில் எடுத்துச்சென்ற இருவரை வவுணதீவு பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் (22) இரவு கைதுசெய்துள்ளதாக வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிசந்த அப்புஹாமி தெரிவித்தார்.

விசேட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலொன்றினையடுத்து சம்பவ தினமான நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் வவுணதீவு பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் ஆயித்தியமலை வவுணதீவு வீதியில் கண்காணிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

இதன்போது மட்டக்களப்பு நகரை நோக்கி பிரயாணித்த முச்சக்கரவண்டியை நிறுத்தி சோதனையிட்டபோது அங்கு மறைத்துவைக்கப்பட்டிருந்த 8 கிலோ மான் இறைச்சியுடன் இருவரை கைதுசெய்ததுடன், முச்சக்கரவண்டி ஒன்றையும் மீட்டுள்ளனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்கள் வவுணதீவு பிரதேசத்தைச் சேர்ந்த 26, 24 வயதுடையவர்கள் எனவும் ஆயித்தியமலை பிரதேசத்தில் இறைச்சியை வாங்கி மட்டக்களப்பு நகரில் விற்பனைசெய்துவருவதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதுடன், கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# அம்பாறையில் பாலின உணர்திறன் கொள்கைகள் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கும் நிகழ்வு





(மருதமுனை நிருபர்)

பொருளாதார, நல்லாட்சியில் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பங்கேற்பு தொடர்பான செயற்றிட்டத்தை அம்பாறை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்திவரும் பெரேண்டினா அரச சார்பற்ற நிறுவனமும் கிழக்கு மாகாண கிராமிய திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த சிவில் சமூக நிறுவனங்களில் மகளிர் கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கான பாலின உணர்திறன் கொள்கைகள் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கும் நிகழ்வு அம்பாறை தனியார் ஹோட்டலில் கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் என்.தனராஜன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சிவில் சமூக நிறுவனங்களில் காணப்படும் மகளிர் கிராம அபிவிருத்தியின் செயற்பாடுகள், கிராமிய பெண்களின் திறன் அபிவிருத்தி, பெண்களினூடாக சிறந்த வலைப்பின்னலை உருவாக்கி அபிவிருத்தியை நோக்கி நகர்தல் மற்றும் பெண்களின் பொருளாதார நிலைமை போன்ற தலைப்புகளில் களனிப் பல்கலைக்கழக விரிவுரையாளர் இனோகா பிரியதர்ஷினி கலந்துகொண்டு வளவாளராகச் செயற்பட்டு கருத்துகள் வழங்கினார்.

தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட உத்தியோகத்தர்களிடம் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், பெண்கள் கிராமிய அபிவிருத்திச் சங்கங்களை ஒன்றாக்குதல், கிழக்கு மாகாண கிராமிய சங்கங்களின் யாப்பை மாற்றுதல், பெண்கள் கிராமிய சங்கங்களில் பெண்களின் பங்குபற்றலை அதிகரித்தல், பெண்கள் கிராமிய மட்ட சங்கங்களுக்கு பயிற்சிகள் வழங்குதல், பெண்கள் கிராமிய அபிவிருத்திச் சங்கங்களின் குடும்ப ஆட்சி நடைபெறுமாயின் அதற்கான தீர்வுகள் பெறப்படவேண்டும் எனப் பல விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீஸன், அம்பாறை மாவட்ட பிரதேச செயலக செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பெண்கள் கிராமிய அபிவிருத்தி உறுப்பினர்கள் மற்றும் அம்பாறை மாவட்டத்தில் செயற்றிட்டத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட நாவிதன்வெளி, அட்டாளைச்சேனை, பொத்துவில், உகண மற்றும் மகாஓயா பிரதேச செயலக உறுப்பினர்கள், பெரேண்டினா நிறுவன திட்ட முகாமையாளர் எஸ்.சிவராஜா, பெரேண்டினா நிறுவன திட்ட உத்தியோகத்தர் சுயானி, அம்பாறை மாவட்ட கணக்கு மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எல்.ஹாதி அஹமட், மட்டக்களப்பு மாவட்ட கணக்கு மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் எம்.மதன் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# மட்டு. சமுர்த்திப் பணிப்பாளராக சிசுபாலன் புவனேந்திரன் நியமனம்



(கல்லடி நிருபர்)

இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த சிசுபாலன் புவனேந்திரன் மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ளார்.

மட்டக்களப்பு கிரான்குளத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர், தனது கல்வியினை மட்/கிரான்குளம் விநாயகர் வித்தியாலயத்தில் கற்றார். இதனைத் தொடர்ந்து உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானார். இவர் அங்கு அரசறிவியலில் சிறப்புக் கற்கையைப் பூர்த்திசெய்து, 2011/2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

இந்நிலையில், 2012ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவைக்குத் தெரிவுசெய்யப்பட்ட இவர், பசறை பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளராக முதல் நியமனத்தைப் பெற்றுக்கொண்டார்.

இதன்பின்னர் போரதீவுப்பற்றுப் பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளராகப் பணிபுரிந்துள்ளார்.

# ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை ஏமாற்றமே தவிர எந்த மாற்றமும் இல்லை

## மட்டு. மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீநேசன்

(வீரமுனை நிருபர்)

தமிழர்கள் மத்தியில் இனப்பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதியின் மனதில் மாற்றம் ஏற்பட்டிருக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைப் பேச்சுக்கு அழைப்பார்கள் என்றெல்லாம் ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. ஆனால், ஜனாதிபதியின் உள்ளத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறீநேசன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை தொடர்பாக வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதியின் உள்ளம் ஓரினம் சார்பாகவே இருக்கிறதென்பது அவரது பேச்சில் வெளியாகியது. சிங்கள பௌத்தர்களின் தலைவர் என்ற சிந்தனைத் தளத்திலிருந்து ஜனாதிபதி மாறுவதாக இல்லை. பல்லின மக்களின் தலைவர் என்பதை அவர் புரியமாட்டார் என்பது புலனாகிறது.

அதாவது சிங்களத் தலைவர்கள் தமிழர்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொள்வார்கள், அதனைத் தீர்ப்பார்கள் என்று தமிழர்கள் நினைப்பது முட்டாள்தனமான சிந்தனையாகவே இருக்கும் என்று விடுதலைப் புலிகளின் தலைவர் எதிர்வுகூறிய கருத்தொன்று நிரூபணமாகியுள்ளது. அந்த வரலாற்றுப் பட்டறிவினை ஜனாதிபதி மீண்டும் ஒரு தடவை மெய்ப்பித்திருக்கிறார்.

74 ஆவது சுதந்திர தினத்தை நோக்கி சிங்களத் தலைவர்கள் நகர்ந்தாலும் இனப்பிரச்சினை விடயத்தில் அக்கறையற்றவர்களாகவே இருக்கிறார்கள். மேலும் உள்நாட்டுப் பொறிமுறையால் இனப்பிரச்சினையைதீர்க்கும் ஆளுமை, சக்தி இலங்கைத் தலைவர்களிடம் இல்லை என்பதை உணர முடிகிறது.

இந்நிலையில், தமிழ்த் தலைவர்கள் உறுதியான முடிவுக்கு வர வேண்டும். எமது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரே வழிமுறை சர்வதேச அணுகுமுறைதான் என்பதை உணர்ந்து அதற்கேற்ப தமது அணுகுமுறைகளை வேகமாகவும் விவேகமாகவும் நகர்த்த வேண்டும்.

ஜனாதிபதி அழைப்பார், பேசுவார், தீர்ப்பார் என்றெல்லாம் நினைப்பது ஏமாற்று வேலையாகவே அமையும். எனவே, உள்நாட்டில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சிங்கள ஆட்சியாளர்களால் முடியாதென்பது மட்டும் தெளிவான உண்மையாகும். அப்படி இந்த சிங்களத் தலைமைகள் அழைத்தாலும் தமிழ் மக்களை மட்டுமல்ல, சர்வதேசத்தையும்



ஏமாற்றும் செயலாகவே அமையும்.

தமிழர்களின் பிரச்சினை அபிவிருத்தி மாத்திரம்தான். அதனைத் தீர்த்துவிட்டால் தமிழர்கள் சரணாகதியாகிவிடுவார்கள் என்று ஜனாதிபதியும் அவரது அரசாங்கத்தினரும் நினைக்கிறார்கள்.

வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ்க் கட்சிகள் தமது நிலைப்பாட்டைத் தற்காலிகமாகவேனும் மாற்றித் தன்னோடு ஒத்துழைக்குமாறு ஜனாதிபதி கேட்டிருக்கின்றார்.

இனப்பிரச்சினைத் தீர்வு விடயம், காணாமலாக்கப்பட்டவர்களின் நீதி, காணி அபகரிப்பு, வடக்கு, கிழக்கில் திட்டமிட்ட பேரினவாதக் குடியேற்றம், அரசியல் கைதிகள் விடயம், அரசுக்கு எதிரான ஜனநாயக செயற்பாடுகள், மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் இவற்றையெல்லாம் கைவிட்டு தமிழ்த் தேசியக் கட்சிகள் கைகட்டி வாய்பொத்தி நிற்கவேண்டும் என்று ஜனாதிபதி எதிர்பார்க்கின்றாரா என்பதுதான் சொரணையுள்ள தமிழர்களின் கேள்வியாகும்.

கற்றுக்குட்டிகள், கட்டுப்பட்ட பொம்மையர்கள் வெறும் பதவிகளுக்காக உழைப்புக்காக கை கட்டி வாய்பொத்தி நின்று துதி பாடலாம். ஆனால், உண்மையான தமிழ்ப் பிரதிநிதிகள் இவற்றைச் செய்ய முடியாது. ஓட்சிசன் இன்றியும் வாழ்வார்கள். ஆனால், பதவியில்லாமல் வாழார்கள் என்கின்றவர்களுக்கு ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை தித்திக்கலாம்.

ஆனால், தமிழர்களுக்கு ஏமாற்றத்தைத் தவிர எந்த மாற்றத்தினையும் விளக்கவுரை அளிக்கவில்லை. இதனைத்தான் உப்புச்சப்பற்ற உதவாத குப்பை உரையென்று கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பந்தன் குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதி நாட்டை முழுமையாகக் கடன் பொறிக்குள் சிக்கவைத்து நாட்டின் சொத்துகளையும் இறைமையையும் இழந்தாலும் தமிழர்களின் உரிமையைத் தானாக வழங்கமாட்டார் என்பது மட்டும் உண்மையாகும்.

எனவே, ஜனாதிபதியின் அழைப்பைத் தமிழ்த் தலைவர்கள் எதிர்பார்க்காமல் சர்வதேச அணுகுமுறைகளைக் கையாள்வதொன்றே சரியான நிலைப்பாடாகும். இந்நிலையில், தமிழ்க் கட்சிகள் தமக்குள் காணப்படும் தன்முனைப்புச் சிந்தைகளைத் தள்ளி வைத்துவிட்டு தமிழ் மக்களுக்காக ஒற்றுமையாகி உழைக்கவேண்டும் என்பதே தமிழர்களின் ஏகோபித்த விருப்பமாகும். எவரும் தன்முனைப்பான முரண்பாடான கருத்துகளைக் கொட்டித் தமிழர் ஐக்கியத்தினைச் சிதைக்காமல் இருக்க வேண்டியது அவசியமாகும்.

சிங்கள பௌத்த சிந்தனைத் தளத்தால் உருவாக்கப்பட்ட இராணுவமயப்பட்ட சிந்தனையில் ஊறியுள்ள பிடிவாதப்போக்குடைய நாட்டின் தலைவரிடமிருந்து தமிழர்கள் எதனையும் எதிர்பார்க்க முடியாது என்பதே உண்மையாகும் - என்றார்.

LKNewspapers Viber Community

# ஆபத்து பற்றி நாட்டுக்கு நாமே முதலில் கூறினோம் ஆனால் அரசாங்கம் அவற்றை மட்டுப்படுத்தவில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு




கொரோனாவின் ஆபத்துகள் மற்றும் அதன் பின்விளைவுகள் குறித்து இந்நாட்டு மக்களுக்கு முன்கூட்டியே சொன்னது, தான் உள்ளடங்களான ஐக்கிய மக்கள் சக்தியே ஆகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மாத்தறை, ஹக்மன, ஊர்பொக்கவில் நேற்றுமுன்தினம் (23) ஆர்ப்பாட்டமொன்றை ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்ததோடு, அவ் ஆர்ப்பாட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் கலந்து கொண்டார். அங்கு மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எனினும், அரசாங்கம் எவ்விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் அதனை புறக்கணித்தது. அந்தப் புறக்கணிப்பின் பலனை இன்று முழு நாடும் அனுபவித்து வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். அப்போது நாம் கூறியதற்கு அரசாங்கம் செவிசாய்த்து செயற்பட்டிருந்தால் கொரோனா தொற்றாளர்களது அதிகரிப்பையும் கொரோனா மரணங்களையும் மட்டுப்படுத்தியிருக்கலாம், அவர்களின் உயிரைக் காப்பாற்றியிருக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

அரச அதிகாரத்தை தன் கையில் வைத்துக்கொண்டு அரசாங்கம் செய்யாததை, ஆட்சி அதிகாரம் அற்ற ஐக்கிய மக்கள் சக்தி செய்து வருவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ஐக்கிய மக்கள் சக்தியின் 'மூச்சு' மற்றும் பிரபஞ்சம் வேலைத்திட்டங்கள் அதற்கு சிறந்த உதாரணம் எனவும் குறிப்பிட்டார்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களும் தொலைநோக்குப் பார்வையும் ஐக்கிய மக்கள் சக்திக்கு இருப்பதாக குறிப்பிட்ட எதிர்க்கட்சித் தலைவர் ஊழல் மற்றும் மோசடிகளை இல்லாதொழித்தல் அதிகாரங்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் அப்பால் நின்று பரோபகாரமான அரசை கட்டியெழுப்புவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியுடன் கைகோர்க்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

தற்போதைய ஆட்சியினால் நாட்டு மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு அரசாங்கத்தின் பொறுப்பற்ற ஆட்சியே காரணம் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இதன் போது தெரிவித்தனர்.

# மூவர் மோட்டார் சைக்கிளில் பாதுகாப்பற்ற பயணம்

## புத்தளத்தில் விபத்து; ஒருவர் பலி




(ஜூட் சமந்த)

புத்தளம், கல்லடியில் மோட்டார் சைக்கிள் லொறியொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கல்லடிக்கு நேற்றுமுன்தினம் இசை நிகழ்ச்சியொன்றை பார்வையிட மோட்டார் சைக்கிளில் சென்ற மூவரே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள், லொறியுடன் மோதியதால் விபத்து இடம்பெற்றுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர். கடும் காயங்களுக்குள்ளான மூவரும் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் அவ்வேளையில் ஒருவர் உயிரிழந்துள்ளார். புத்தளம் சின்னநாகவில்லுவைச் சேர்ந்த சுனில் சாந்த குமார என்ற 28 வயதான நபர் ஒருவரே இதன்போது பலியாகியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, லொறியின் சாரதியை கைதுசெய்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

# மினுவாங்கொடையில் கொரோனா கொத்தணி உருவாகும் அபாயம்

## திருமண நிகழ்வில் கலந்துகொண்ட 26 பேருக்கு தொற்று

மினுவாங்கொடை, கமரகொட பிரதேசத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவரது திருமண நிகழ்வின் பின்னர் மூத்த சகோதரர் உள்ளிட்ட 26 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவரும் ஒரே தினத்தில் திருமணம் செய்துள்ளனர்.

சந்தலங்காவ பிரதேசத்திலுள்ள தேவாலயமொன்றில் இவ்விரு திருமண நிகழ்வுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், திவுலம்பிட்டிய பிரதேசத்திலுள்ள ஹோட்டலொன்றில் தங்கியிருந்து திருமண நிகழ்வை முன்னெடுத்துள்ளமை சுகாதாரப் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த திருமண நிகழ்வில் இரு தரப்புகளிலுமிருந்து 350 பேர் பங்குபற்றியிருந்தனர். அவர்களில் ஒரு மணமகன் உள்ளிட்ட மேலும் ஐவர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அதனைத் தொடர்ந்து மினுவாங்கொடை சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயத்தினூடாக கமரகொட ரோமன் கத்தோலிக்க தேவாலயத்தில் இந்த திருமண நிகழ்வில் பங்குபற்றிய 28 பேர் ரெபிட் அன்ரிஜன் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் 26 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# பதுளையில் 44 பேருக்கு கொரோனா தொற்று

(நடராஜா மலர்வேந்தன்)

பதுளை மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் (23) 44 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பதுளை - 04, பண்டாரவளை - 09, எல்ல - 01, ஹாலிஎல - 01, ஹப்புத்தளை - 14, லுணுகலை - 02, மஹியங்கனை - 03, பசறை - 02, ரிதிமாலியத்த - 01, சொரணாதொட - 01, ஊவாபரணகம - 04, வெலிமடை - 03 என்ற அடிப்படையில் நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரையும் தனிமைப்படுத்தல் முகாமுக்கு அழைத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் இவர்களுடன் தொடர்புகளை பேணியோருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பிராந்திய சுகாதார காரியாலயம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றுப்பரவல் குறித்து பொதுமக்கள் அக்கறையுடன் செயற்படாமையே வேகமாக பரவுவதற்குக் காரணம் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர். பதுளையில் பல்வேறு வகையான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றுகூடல்



(நூருல் ஹுதா உமர்)

இலங்கையின் முதலாவது இளைஞர் நாடாளுமன்றத்தின் 10ஆவது வருடத்தை முன்னிட்டு முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்று கூடல் சிகிரியா மலைக் குன்றில் அண்மையில் இடம்பெற்றது. இருநூறுக்கும் மேற்பட்ட முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கையின் சகல பிரதேசங்களிலிருந்தும் வருகை தந்திருந்தனர்.

இந்த ஒன்றுகூடலின்போது முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றதுடன் இவ்வாறான ஒன்றுகூடல் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு மாவட்டத்தில் இடம்பெற வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் அரசியல், இன, மத வேறுபாட்டுக்கு அப்பால் உறுப்பினர்களுக்கிடையே நட்பு ரீதியானதாக இருக்க வேண்டும். இதனை எதிர்காலத்தில் மேலும் எவ்வாறு கொண்டு செல்லலாம் எனவும் ஆலோசனைகள் செய்யப்பட்டதுடன் சிகிரியா மலைக் குன்று மற்றும் அதனை அண்டிய பிரதேசத்திலும் சிரமதானப் பணிகளில் இவ் உறுப்பினர்கள் ஈடுபட்டனர்.

# சமகால அரசியலை தெளிவுபடுத்தும் வகையில் அட்டாளைச்சேனையில் மகளிர் மாநாடு




சமகால அரசியல் நிலைப்பாடுகளையும், அபிவிருத்தி முன்னெடுப்புகளையும் தெளிவு படுத்தும் மகளிர் மாநாடு அட்டாளைச்சேனையில் இடம்பெற்றது.

"தீர்வை நோக்கிய பயணத்தில்" எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்த பெண்கள் மாநாட்டில், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் விசேட உரையையும் நிகழ்த்தினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப்பின் அட்டாளைச்சேனை இணைப்பாளரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எஸ்.எம்.அறூஸ் தலைமையில் இடம்பெற்ற இம்மாநாட்டில் பெருந்திரளான பெண்கள் கலந்து கொண்டிருந்தனர்.

சமகால அரசியலில் நாம் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பிலும், அரசாங்கம் முன்னெடுக்கும் மக்கள் சார்ந்த அபிவிருத்திப் பணிகளின் அவசியத்தையும் இம்மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் வலியுறுத்தி பேசினார்.

இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் எ.சீ.எம்.சஹீல், அல்-மினா வித்தியாலய அதிபர் எம்.ஐ.எம்.நியாஸ், சமூக செயற்பாட்டாளர் ஏ.எல்.கியாஸ்தீன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள குடும்பம் பெண்களின் வாழ்வாதார அபிவிருத்தி முன்னெடுப்புகளுக்காக சுமார் 50 இலட்சம் ரூபா நிதியை நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரப்பினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# 15 வயது சிறுமி துஷ்பிரயோகம்; இளைஞரும் தாயாரும் கைது

(கெலும் குணதிலக)

பொரலந்த ஹிம்புட்டுவெல்தோவவில் 15 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியதாகக் கூறப்படும் 18 வயதான இளைஞரையும் உதவி புரிந்த இளைஞரின் தாயாரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தனியார் வகுப்புக்குச் செல்வதாகக் கூறிவிட்டு கடந்த 22ஆம் திகதி காதலனான இளைஞரின் வீட்டுக்கு சிறுமி சென்றுள்ளார். அங்கு அவர்கள் தங்குவதற்கு இளைஞரின் தாயார் உதவிசெய்துள்ளார்.

இந்நிலையில், மகளைக் காணவில்லையென சிறுமியின் பெற்றோர் குடாஓயா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். அதற்கமைய, விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் இளைஞரையும் அவரது தாயாரையும் கைதுசெய்துள்ளனர். மேலும், சிறுமியை வெல்லவாய வைத்தியசாலையில் மருத்துவ சிகிச்சைகளுக்காக அனுமதித்துள்ளனர்.

# புதையல் தோண்டச் சென்ற குழுவினர் பொலிஸாரால் கைது

## இராமநாதபுரத்தில் சம்பவம்




(வன்னி செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டம் இராமநாதபுரம் பகுதியில் புதையல் அகழ்வதற்காக இரண்டு வாகனங்களில் சென்ற ஏழு பேர் கொண்ட குழுவினர் வட்டக்கச்சி பொலிஸ் சோதனைச் சாவடியில் நேற்றுமுன்தினம் (23) இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து புதையல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்படும் ஸ்கேனர் இயந்திரம் ஒன்றும் ஏனைய சில பொருட்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கைதானவர்களில் ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர் என்று தெரியவந்துள்ளது.

இராமநாதபுரம், சம்புக்குளம் பகுதியில் புதையல் அகழ்ந்து வந்ததாக அவர்களின் முதற்கட்ட விசாரணையின்போது தெரிவித்துள்ளனர். கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த பகுதியில் இதற்கு முன்னரும் புதையல் தோண்டும் முயற்சியில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தங்கம் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற தகவலின் அடிப்படையில் அவற்றை அகழ்வதற்கான முயற்சிகள் பல தடவைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# குற்றம் தவிர்

## போதைப்பொருளுடன் சந்தேக நபர்கள் கைது

### மட்டக்குளி

மட்டக்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமித்புரவில் 25 கிராம் ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த நபர் ஒருவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் (23) கைதுசெய்துள்ளனர். பமுணகமவைச் சேர்ந்த 23 வயதான சந்தேக நபரே கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

### மாவத்தகம

மாவத்தகம பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மாஸ்வெவ பகுதியில் நேற்றுமுன்தினம் (23) மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது 15 கிராம் 450 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெண்ணொருவரும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து வாள், மூன்று கத்திகள், சிறுத்தையின் தோல் மற்றும் ஒரு இலட்சத்து 46 ஆயிரம் பணம் மீட்கப்பட்டுள்ளது. இவர்களில் மாத்தளையில் 50 இற்கும் மேற்பட்ட வீடுகளில் கொள்ளையில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர்கள் 55, 50, 33, 41 வயதுடையவர்களென பொலிஸார் தெரிவித்தனர்.

### மொரகஹஹேன

மொரகஹஹேன, ஒலபொடுவ கந்த என்ற இடத்தில் 05 கிராம் 900 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த நபர் ஒருவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர். சந்தேக நபர் கோணபலவைச் சேர்ந்த 30 வயதுடையவரென பொலிஸார் தெரிவித்தனர்.

### பொரளை

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காதர்நானா வத்த என்ற இடத்தில் பொலிஸார் நேற்றுமுன்தினம் (23) மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின்போது 05 கிராம் 900 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பொரளையைச் சேர்ந்த 38 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

### கல்கிஸை

கல்கிஸை, இரத்மலானையில் 02 கிராம் 520 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த 28 வயதான நபர் ஒருவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் (23) கைதுசெய்துள்ளனர். சந்தேக நபர் எகொடஉயன, மொரட்டுவை, கல்கிஸை, தெஹிவளை ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவரென ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## மனிதப் படுகொலை

### சூரியவெவ

சூரியவெவ, வல்சபுகலவில் விவசாயியொருவரை கொலைசெய்த சந்தேக நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் (23) கைதுசெய்யப்பட்டுள்ளார். இச்சம்பவத்தில் 62 வயதான நபர் ஒருவரே கொலைசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்தக் கொலையுடன் தொடர்புடைய சூரியவெவயைச் சேர்ந்த 45 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### நீர்கொழும்பு

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடாபாடுவயில் அடையாளம் தெரியாத நபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அந்நபர் கொலைசெய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். சுமார் 75 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன் அந்தச் சடலம் நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

LK Newspapers Viber Community

# இழுவைப் படகுகளுக்கான அனுமதியை உடனடியாக இரத்துச் செய்யக்கோரி கற்பிட்டியில் ஆர்ப்பாட்டம்

(ரஸீன் ரஸ்மின்)



புத்தளம் - கற்பிட்டி ஆழ்கடல் பகுதியில் மீன்பிடிப்பதற்காக இழுவைப் படகுகளுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதியை உடனடியாக இரத்துச் செய்யுமாறுகோரி கற்பிட்டி ஆனவாசல் இறங்குதுறை பகுதியில் நேற்றுமுன்தினம் (23) மாலை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

கற்பிட்டி பகுதியிலுள்ள ஐந்து மீனவச் சங்கங்களின் உறுப்பினர்கள் இணைந்து இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது, "எமது கடல் வளங்களை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும், இழுவைப் படகுகளுக்கு வழங்கப்பட்ட அனுமதியை இன்றே இரத்துச் செய், இலஞ்சம் வாங்கிவிட்டு இழுவைப் படகுத் தொழிலுக்கு அனுமதி வழங்காதே, சிறு கடற்றொழிலாளர்களும் வாழ வேண்டும்" போன்ற பல கோஷங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பினர்.

அத்தோடு, நாட்டில் டொலர் இல்லை என கூறுகிறார்கள். எனினும், கற்பிட்டி கடலில் டொலர்கள் இருக்கிறது என ஆர்ப்பாட்டக்காரர்கள் குறிப்பிட்டனர்.

கடந்த காலங்களில் கற்பிட்டி கடலில் அதிகமான இறால்கள், நண்டுகள் பிடிக்கப்பட்டு அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால், இன்று நமது நாட்டில் விற்பனை செய்வதற்கு கூட இறால்கள் இல்லை.

தடைசெய்யப்பட்ட இழுவை வலைகளை பயன்படுத்தி மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டமையே இதற்கு காரணமாகும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம் சுமத்தினர்.

கடந்த டிசம்பர் மாதம் 31ஆம் திகதி முதல் இந்த இழுவைப் படகுகள் மூலம் மீன்பிடிப்பதற்கான அனுமதிப்பத்திரத்திற்கு தடை விதிக்கப்பட்டது.

எனினும், தடைவிதிக்கப்பட்ட 23 நாட்களின் பின்னர் மீண்டும் அந்த இழுவை வலைகளை பயன்படுத்தி மீன்பிடிப்பதற்கு கடற்றொழில் அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக கேள்விப்பட்டோம்.

தடைசெய்யப்பட்ட இந்த 23 நாட்களில் கற்பிட்டி பூக்குளம், பல்காஹத்துறை, வன்னிமுந்தல், சேராக்குளி, கங்கேவாடி, கோயில்முனை, உச்சிமுனை, பத்தலங்குண்டு போன்ற பல மீனவக் கிராமங்களில் வாழும் 2 ஆயிரத்திற்கும் அதிகமான சிறுபடகு மீனவத் தொழிலாளர்கள் சிறந்த முறையில் தமது மீன்பிடித் தொழிலை முன்னெடுத்து வந்தனர்.

எனினும், தற்போது 23 இழுவைப் படகுகளுக்காக இந்த 2ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் மீண்டும் மீன்பிடித் தொழிலை கைவிட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

கொரோனா தொற்றுப் பரவல் காரணமாகவும் எரிபொருள் விலையேற்றம் காரணமாகவும் மீனவத் தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாறு இழுவைப் படகுகளை பயன்படுத்தி மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறினர்.

எனவே, எமது கடல் வளத்தையும் சிறுகடல் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பதுடன், இலங்கையில் தடைசெய்யப்பட்ட இழுவை வலை மீன்பிடித் தொழிலுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை உடனடியாக இரத்துச் செய்யுமாறு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் மீன்பிடி அமைச்சர் ஆகியோர்களிடம் கோரிக்கை விடுப்பதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது குறிப்பிட்டனர்.

# Skills for Inclusive Growth பிராந்திய அலுவலகம் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரால் திறந்து வைப்பு





Skills for Inclusive Growth (S4IG) திட்டத்தின் பிராந்திய அலுவலகத்தின் நடவடிக்கைகள் இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹொலியின் தலைமையில் கடந்த 09 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

S4IG என்பது அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் உதவித் திட்டத்தின்கீழ் திறன் அபிவிருத்தி அமைச்சு, தேசிய மற்றும் பிராந்திய அரச நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படுகின்றதொரு கருத்திட்டமாகும். சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையின் மேம்பாட்டின் மூலம் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்துவது S4IG திட்டத்தின் நோக்கமாகும். S4IG கடந்த பல ஆண்டுகளாக குறிப்பாக பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில் வாய்ப்பு உருவாக்கத்துக்கும் வருமான ஏற்றத்துக்கும் தொழில்துறை வளர்ச்சிக்கும் பங்களிப்பு செய்துள்ளது.

புதிய அலுவலகத்தின் திறப்பு விழாவுக்கு பயனாளிகள் மற்றும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றத்தை பிரதிபலிக்கும் வகையிலான கண்காட்சியொன்றும் நடத்தப்பட்டது. இங்கு உரையாற்றிய அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் கருத்து தெரிவிக்கையில், பல ஆண்டுகளாக இந்த வேலைத்திட்டத்தின் பங்காளியாக இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைவதாக குறிப்பிட்டார். கொவிட் பெருந்தொற்றை கட்டுப்படுத்தியதை தொடர்ந்து திறன் விருத்தியின் மூலம் சுற்றுலாத் துறையின் மறுமலர்ச்சிக்காக கவனம் செலுத்த வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

இந்த விழாவில் பொலன்னறுவை மாவட்டச் செயலாளர் டபிள்யூ ஏ. தர்மசிறி, அநுராதபுர மாவட்ட மேலதிக செயலாளர் டபிள்யூ பீ. டபிள்யூ. வணசிங்க, வடமத்திய மாகாண சுற்றுலா மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் கிருசாந்த குமார போப்பகே, ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவப் பிரிவின் பிரதானி கே.ரீ.என் அபேவிக்ரம, பொலனறுவை மாவட்ட வணிகச் சபையின் தவிசாளர் எச்.டீ.டீ குணசேகர, பொலனறுவை சுற்றுலா விடுதிகள் அமைப்பின் தலைவி சியாமளி தீப்திகா, அநுராதபுர ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்சனாத் குணசேகர, ஹபரணை ஹோட்டல்கள் அமைப்பின் தலைவர் ருவான் குணவர்தன, ஹபரணை மகா வித்தியாலய அதிபர் மொனிகா சுதர்சனி ஆகியோருடன் இலங்கை சமையற் கலை நிபுணர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள், ஹோட்டல் அமாயா பொது முகாமையாளர், ஹபரணை லொட்ஜ் பிரதான சூழலியலாளர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இத் திட்டத்தின் பயனாளிகள் கருத்து தெரிவிக்கையில், திறன் விருத்தி ஆட்களினதும் தொழில்முயற்சியாளர்களினதும் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுதாக குறிப்பிட்டனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரகடனப்படுத்தியுள்ள திறன் அபிவிருத்தி தசாப்தத்தில் இலங்கையின் திறன் அபிவிருத்தி எவ்வாறு மாறுகின்றதென்பதுடன், மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாடு மற்றும் இலங்கை அரசாங்கத்தின் திறன் அபிவிருத்தி மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு பிரவேசித்தல் மற்றும் ஒத்துழைப்பு வழங்குதல் இந்த உதாரணங்களின் மூலம் பிரதிபலிக்கின்றன.

# ஆர்.எம். கேக் ஆர்ட் நிறுவனத்தின் கண்காட்சி கல்லொழுவையில்



(ஏ.சீ. பௌசுல் அலீம்)



ஆர்.எம். கேக் ஆர்ட் நிறுவனத்தின் இயக்குனர் திருமதி. பிரெளஸா ரிஸா மொஹமட்டால் நடத்தப்பட்ட 3 மாத கேக் தயாரிப்பு மற்றும் அலங்கரிப்பு பாடநெறி பூர்த்தியை முன்னிட்டு ஒருங்கிணைக்கப்பட்ட கேக் கண்காட்சி மினுவாங்கொடை, கல்லொழுவையில் நேற்றுமுன்தினம் (23) நடைபெற்றது.

ஆர்.எம். இன் கேக் தொடர்பான பயிற்சி ஆசிரியர் திருமதி. பிரெளஸா ரிஸா மொஹமட்டின் வழிகாட்டலில் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த மாணவர்களினால் அலங்கரிக்கப்பட்ட பல வடிவங்களிலான கேக் வகைகள் காட்சிப் படுத்துப்பட்டன.

அம் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் 1ஆம்,2ஆம்,3ஆம் இடத்தினைப் பெற்ற கேக் அலங்காரத்திற்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. இக் கண்காட்சியைக் கண்டுகளிப்பதற்காக கம்பஹா மாவட்டத்தில் பல பிரதேசங்களில் இருந்தும் பலர் வருகைத் தந்தனர்.

இதில் பிரதம அதிதியாக சர்வதேச அங்கீகாரம் பெற்ற கேக் வடிவமைப்பாளர் திருமதி.நிலூபா அமீர்தீன் கலந்துகொண்டார். இது பற்றி திருமதி. பிரெளஸாவிடம் வினவியபோது, "பெண்களும் தமது இலட்சியங்களை நோக்கிச் செல்ல வேண்டியது ஒரு முக்கிய அம்சம்" என்பதை வலியுறுத்தினார். இது கல்லொழுவை கிராம வரலாற்றில் நடந்த முதலாவது கேக் கண்காட்சி என்பது குறிப்பிடத்தக்கது.

# சிலாபத்தில் கடலரிப்பால் வீதிகளுக்கு பாதிப்பு







(ஜூட் சமந்த)

சிலாபம் தொடுவாவ பகுதியில் கடலரிப்பு காரணமாக வீதிகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். அங்கு கடந்த சில வாரங்களாக கடல்நீர் மிக வேகமாக உட்புகுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.





தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கொலன்னாவை, வெல்லம்பிட்டிய, கொத்தொட்டுவ, முல்லேரியா போன்ற பகுதிகளில் காணி இருந்தும் வீடொன்றை நிர்மாணிக்க முடியாத வறிய குடும்பங்களுக்கு அதிகார சபையினால் வழங்கும் 5 இலட்சம் ரூபா வீடமைப்புக் கடன் உதவித்திட்டத்தினை வழங்கி பயனாளிகளது பங்களிப்புடன் 20 வீடுகளை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நிர்மாணித்து வருகின்றது. இத்திட்டம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் துமிந்த சில்வாவினால் கடந்த சனிக்கிழமை (22) ஆரம்பித்து வைக்கப்பட்டது. அத்துடன் ஏற்கனவே நிதியுதவி பெற்று வீடுகளை நிர்மாணித்துக் கொண்ட இரண்டு குடும்பங்களது வீடுகளும் திறந்து வைக்கப்பட்டன. (அஷ்ரப் ஏ சமத்)

# இளைஞர் நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வில் பேருவளை பிரதேச உறுப்பினர் அஹ்மத் ஸாதிக் உரை





ஐந்தாவது தேசிய இளைஞர் நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வு கடந்த 18 மற்றும் 19ஆம் திகதிகளில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக மாலைதீவு நாட்டின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய சபாநாயகருமான மொஹமட் நசீத் கலந்து கொண்டதுடன், இலங்கை இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரான நாமல் ராஜபக்ஷவும் கலந்து கொண்டிருந்தார். மேலும், ஏனைய அமைச்சர்களும் வருகை தந்திருந்தனர்.

"கொவிட் -19 தொற்றுநோய்ப் பரவலை அடுத்து நாட்டின் தேசிய வளர்ச்சியில் இளைஞர்களின் வகிபாகம்" எனும் தலைப்பை அடிப்படையாகக்கொண்டே இந்த அமர்வு இடம்பெற்றது.

இந்த அமர்வில் பேருவளை பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரும், வெளிவிவகாரம் மற்றும் இராஜதந்திர உறவுகளின் பிரதியமைச்சர் அஹ்மத் ஸாதிக் கருத்துக் கூறுகையில்,

கொவிட் -19 தொற்று காலத்தில் தமது நாட்டு நிலைமையை வெற்றிகொண்ட நாடுகளான (நியூசிலாந்து, வியட்நாம் மற்றும் தாய்லாந்து) போன்ற நாடுகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு, இலங்கையிலும் அந்த ஆலோசனைகளுக்கு அமைய புதிய கொள்கைகள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மேலும், இதனை தேசிய நாடாளுமன்றம் கருத்திற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

மேலும், இவ்வருடம் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரதேச வாரியாக செயற்திட்டங்களை நிறைவேற்ற அரசினால் வழங்குவதாக கூறப்பட்ட நிதியங்களோ, கொடுப்பனவுகளோ இதுவரை வழங்கப்படவில்லை. எனவே அது தொடர்பாகவும் கேள்விகள் எழுப்பப்பட்டன.

அவ்வாறிருந்தும் தமது பிரதேசத்தில் தன்னார்வமாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அதில் ஒன்று தான் இந்த "நான்கு பிரதான திட்டங்கள் நடைமுறைப்படுத்தல்" எனும் செயற்திட்டம் என்றும் குறிப்பிட்டார்.

இறுதியாக, இந்நாட்டின் முதுகெலும்பு இளைஞர்கள் என்ற விடயத்தையும், அவர்களுக்கான களத்தை அமைத்துத்தர வேண்டியது ஒவ்வொரு அரசின் கடமை என்றும் கூறினார்.

# அல்-ஹிக்மா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் தலைமைத்துவ பயிற்சிப் பட்டறை







(ஏ.எஸ்.எம்.ஜாவித்)





கொழும்பு -12 வாழைத்தோட்டம் அல்-ஹிக்மா கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் தமது கல்லூரியின் மாணவத் தலைவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட தலைமைத்துவ பயிற்சிப் பட்டறை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கல்லூரியில் இடம்பெற்றது.

கல்லூரியின் அதிபர் எம். மஹ்சூர் முஸ்தபா மற்றும் பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர் எச். எம். ஹஸன் இஸ்மத் ஆகியோரின் தலைமையில் விரிவுரை மற்றும் செயற்பாடு என்ற அடிப்படையில் இரு அங்கமாக இந்தப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

இலங்கை இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரிகளில் ஒருவரும் பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பணிப்பாளரும் சர்வதேச உறவுகள் தொடர்பான சிரேஷ்ட விரிவுரையாளருமான கேர்ணல் நளின் ஹேரத் விரிவுரைகளையும் கோப்ரல் உதயகுமார் உடற்பயிற்சி பயிற்சிகளையும் வழங்கினர்.

அல்-ஹிக்மா கல்லூரியில் தரம் 10, 11 மற்றும் க.பொ.த. உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவ, மாணவிகளிலிருந்து மாணவத் தலைவர்களாக 2022ஆம் ஆண்டுக்காக புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 70 பேருக்கு இந்த தலைமைத்துவ வழிகாட்டல் பயிற்சி வழங்கப் பட்டது.

தலைமைத்துவம், நேர முகாமைத்துவம், குழு செயற்பாடு, திறன் மற்றும் ஆளுமை விருத்தி, நன்னடத்தை போன்றவைகள் தொடர்பில் கேர்ணல் நளின் ஹேரத் பயிற்சிகளை வழங்கினார்.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பொதுச்செயலாளரும் ஊடகவியலாளருமான ஸாதிக் ஷிஹான் பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் வரவேற்புரை நிகழ்த்தியதுடன், பகுதித் தலைவரான ராஜேஸ்வரா பாடசாலை சார்பாக உரை நிகழ்த்தினார்.

நஜீம் ஆசிரியரினால் தொகுத்து வழங்கப்பட்ட இந்த நிகழ்வில் பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளர் எம். எஸ். எம். ஹஸன், உபதலைவர் எம்.எஸ்.எம்.புஹாத், ஆசிரியர்களான அஷ்பாக், எம். நஜாத் உட்பட பழைய மாணவர் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

பயிற்றுவிக்கப்பட்ட மேற்படி மாணவ மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கல் மற்றும் சின்னங்கள் அணிவிக்கும் நிகழ்வு நாளைமறுதினம் 27ஆம் திகதி கல்லூரி வளாகத்தில் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

LK Newspapers Viber Community

# இந்திய செய்திகள்

சிறந்த படம் - சிறந்த நடிகர் - சிறந்த நடிகை:

## நொய்டா சர்வதேச திரைப்பட விழாவில் 3 விருதுகளை அள்ளிய 'ஜெய்பீம்'




நொய்டா சர்வதேச திரைப்பட விழாவில் சூர்யாவின் 'ஜெய்பீம்' திரைப்படம் 3 விருதுகளை அள்ளியுள்ளது.

நடிகர் சூர்யா, லிஜோமோல் ஜோஸ், பிரகாஷ்ராஜ் உள்ளிட்டோர் நடித்த படம் 'ஜெய்பீம்'. ஓய்வுபெற்ற நீதிபதி சந்துருவின் வாழ்வில் நடைபெற்ற உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு இந்தப் படத்தை த.செ.ஞானவேல் இயக்கினார். பழங்குடியின பெண்ணின் சட்டப் போராட்டத்தை மையமாக வைத்து உருவான இப்படம், ஒஸ்கார் விருதுக்கான பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

இதனிடையே 'ஜெய்பீம்' படம் ஏற்கனவே பல்வேறு சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டுவரும் நிலையில், தற்போது 9ஆவது நொய்டா சர்வதேச திரைப்பட விழாவில் 3 விருதுகளை தட்டிச் சென்றுள்ளது.

சிறந்த திரைப்படத்திற்கான விருதை 'ஜெய்பீம்' வென்ற நிலையில் சிறந்த நடிகராக சூர்யாவுக்கும், சிறந்த நடிகையாக லிஜோமோல் ஜோஸுக்கும் விருது வழங்கப்பட்டுள்ளது. இது படக்குழுவினர் மற்றும் ரசிகர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நேற்று நடைபெற்ற 9ஆவது நொய்டா சர்வதேச திரைப்பட விழாவில், 50இற்கும் மேற்பட்ட உலக நாடுகளின் திரைப்படங்கள் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் 73ஆவது குடியரசு தினம் நாளை

• நாடுமுழுவதும் உச்சக்கட்ட பாதுகாப்பு

• தீவிர கண்காணிப்பில் ரயில் - விமான நிலையங்கள்

இந்தியாவின் 73ஆவது குடியரசு தினம் நாளை கொண்டாடப்படவுள்ள நிலையில் நாடு முழுவதும் விமான நிலையங்கள், ரயில் நிலையங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஜம்மு - காஷ்மீர் உள்ளிட்ட நாட்டின் எல்லைகளில் உச்சக்கட்ட பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

நாட்டின் 73ஆவது குடியரசு தினம் நாளை கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி, நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. டில்லியில் மட்டும் சுமார் 27 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடவுள்ளனர். இந்த ஆண்டு குடியரசு தின விழாவில் வெளிநாட்டு சிறப்பு விருந்தினர்கள் எவரும் பங்கேற்காத நிலையில், 2 மாதங்களுக்கு முன்பிருந்தே டில்லி பொலிஸார், மற்ற பாதுகாப்பு அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

வாகனங்கள், ஹோட்டல்கள், தங்கும் விடுதிகளில் சோதனை நடத்தியதோடு, சந்தேகிக்கும் படியான நபர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். அத்தோடு, ஆளில்லா ட்ரோன் விமானங்கள் மூலமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மொத்தமாக 200 குழுக்கள் குடியரசு தின பாதுகாப்பில் இடம்பெற்றுள்ளன.



ஜம்மு - காஷ்மீரின் ஸ்ரீநகர் லால்சவுக் பகுதிக்கு வந்தவர்களிடம் பாதுகாப்புப் படையினர் திடீர் சோதனை நடத்தியபோது...

கூடுதலாக சமூக வலைத்தளங்களிலும் சந்தேகத்திற்கிடமான வகையில் வரும் பதிவுகள் குறித்து கண்காணிக்கப்படுகிறது.

இதனிடையே, நாடு முழுவதுமுள்ள விமான நிலையங்களில் தீவிர சோதனை நடத்தப்படுகிறது. வெளிநாடுகளிலிருந்து வரும் பயணிகளின் உடைமைகள் கடும் சோதனைக்குட்படுத்தப்படுகிறது. விமான நிலையங்களில் மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. ரயில் நிலையங்களில் ரயில் பெட்டிகள், பயணிகள் அறை உள்ளிட்ட இடங்களில் மோப்பநாய்கள் கொண்டும், வெடிகுண்டு நிபுணர்கள் கொண்டும் சோதனை நடத்தப்படுகிறது. தமிழகத்திலுள்ள விமான மற்றும் ரயில் நிலையங்களிலும் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஜம்மு - காஷ்மீர் உள்ளிட்ட நாட்டின் எல்லைகளில் பாதுகாப்புப் படையினரும், பொலிஸாரும் இணைந்து இரவு, பகலாக கண்காணித்து வருகின்றனர்.

இந்த ஆண்டு குடியரசு தின விழாவில் பல் வேறு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. அரை மணிநேரம் தாமதமாக பத்தரை மணியளவில்தான் குடியரசு தின நிகழ்ச்சிகள் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அணிவகுப்பு தூரமும், அதில் பங்கேற்கும் வீரர்களின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்தியாவின் வலிமையை பறைசாற்றும் வகையில், போர்களில் பங்கேற்ற தாங்கிகள், பீரங்கிகள், 75 விமானங்கள் பங்கேற்கின்றன. இந்த ஆண்டு புதிதாக ஆயிரம் ஆளில்லா விமானங்கள் பங்கேற்கும் விமான கண்காட்சியும் நடைபெறவுள்ளது.

## இராமேஸ்வரம் மீனவர்கள் வேலைநிறுத்தம் அறிவிப்பு

இலங்கை அரசு தமிழக மீனவர்களின் படகுகளை ஏலம் விடுவதை தடுக்காவிட்டால் எதிர்வரும் பெப்ரவரி 2ஆம் திகதிமுதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக இராமேஸ்வரம் மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

தமிழக மீனவர்களின் மீது இலங்கை கடற்படையினர் அடிக்கடி தாக்குதல் நடத்துவதுடன், சமீபகாலமாக கைது நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளன.

இந்நிலையில், தமிழக மீனவர்களின் 105 படகுகளை இலங்கை கடற்படை ஏலம் விடுவதை தடுக்காவிட்டால் எதிர்வரும் 2ஆம் திகதி வேலைநிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக இராமேஸ்வரம் மீனவர்கள் சங்கம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கையிலுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்கக்கோரியும் இராமேஸ்வரம் மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## சமாஜ்வாதி கட்சியில் இணைந்தார் இந்தியாவின் உயரமான மனிதர்



8 அடி 2 அங்குலம் உயரம் உள்ள இவர், சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் முன்னிலையில் கட்சியில் நேற்றுமுன்தினம் இணைந்துள்ளார். 46 வயதான தர்மேந்திர பிரதாப் சிங் மிக உயரமான மனிதராக கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் பிரதாப்கர் மாவட்டத்திலுள்ள நர்ஹர்பூர் காசியாஹி கிராமத்தைச் சேர்ந்த தர்மேந்திர பிரதாப் சிங் முதுகலைப் பட்டம் பெற்றவர். இவர் கடந்த ஆண்டு ஏப்ரலில் நடந்த உத்தரப்பிரதேச பஞ்சாயத்து தேர்தலில் நண்பர் ஒருவருக்காக பிரசாரம் மேற்கொண்டார்.

இந்தியாவின் மிகவும் உயரமான மனிதர் என்று அறியப்பட்ட தர்மேந்திர பிரதாப் சிங் சமாஜ்வாதி கட்சியில் இணைந்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநில சட்டப் பேரவைக்கான தேர்தல் பெப்ரவரி 10ஆம் திகதிமுதல் மார்ச் 7ஆம் திகதிவரை மொத்தம் 7 கட்டங்களாக நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் ஆளும் பா.ஜ.கவுக்கும் சமாஜ்வாதி கட்சிக்கும் இடையே பலத்த போட்டி ஏற்பட்டுள்ளது. மேலும் அங்கு காங்கிரஸ் கட்சியும் தீவிர தேர்தல் பணியாற்றி வருவதால் மும்முனைப் போட்டி நிலவுகிறது.

இந்நிலையில், நாட்டின் மிக உயரமான மனிதரான தர்மேந்திர பிரதாப் சிங் சமாஜ்வாதி கட்சியில் இணைந்துள்ளார்.

சமாஜ்வாதி கட்சியில் இணைந்தது குறித்து தரமேந்திர பிரதாப் சிங் தெரிவிக்கையில்,

"என்னுடைய உயரத்தால் நான் நிறைய பிரச்சினைகளை எதிர்கொண்டேன். நான் வெளியில் செல்லும்போதெல்லாம் அதிக கவனத்தை ஈர்க்கிறேன். நான் மிகவும் பிரபலமாக இருக்கிறேன், எல்லாவற்றுக்கும் எனது உயரம்தான் காரணம். சமாஜ்வாதி கட்சியின் வெற்றிக்காக மாநிலம் முழுவதும் பிரசாரம் செய்வேன்" - என்றார்.

## மீனவர்களைத் தாக்கி - பொருட்களை களவாடி இலங்கை கடற்கொள்ளையர்கள் அட்டூழியம்





நாகை மாவட்டம் வேதாரண்யம் பகுதி மீனவர்கள் மீது ஒரேநாளில் இரண்டு முறை இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தி பொருட்களை களவாடிச் சென்றுள்ளனர்.

புஷ்பவனம் மீனவ கிராமத்தைச் சேர்ந்த 3 மீனவர்கள் அதிகாலை மீன்பிடிக்க கடலுக்குள் சென்றவேளை, அவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் காயமடைந்த 3 பேரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். காலை அதே கிராமத்தைச் சேர்ந்த சுமார் 8 பேர் புஷ்பவனத்திற்கு தென்கிழக்கே 30 நாட்டிகல் தொலைவில் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது, மீண்டும் இலங்கை கடற்கொள்ளையர்கள் வந்துள்ளனர்.

கையில் ஆயுதங்களுடன் மீனவர்களின் படகுக்குள் ஏறியவர்கள், அவர்களைத் தாக்கிவிட்டு, பேட்டரி, ஜி.பி.எஸ். கருவி, உட்பட சுமார் ஒரு இலட்சம் ரூபா மதிப்பிலான பொருட்களை கொள்ளையடித்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## இந்திய குடியரசு துணைத் தலைவர் வெங்கய்யா நாயுடுவுக்கு கொரோனா

### நாடாளுமன்ற பணியாளர்கள் 875 பேருக்கு தொற்று உறுதி

இந்திய குடியரசு துணைத் தலைவரும், மாநிலங்களவைத் தலைவருமான வெங்கய்யா நாயுடுவுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அத்தோடு, இந்திய நாடாளுமன்ற பணியாளர்கள் 875 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் கொரோனா மூன்றாவது அலை வேகமாக பரவி வருகிறது. நாடாளுமன்ற வளாகத்திலும் கொரோனா தொற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அங்கு மொத்தம் 2,847 பேருக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் 875 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் 271 பேர் மாநிலங்களவையிலும் மற்றவர்கள் மக்களவையிலும் பணியாற்றுபவர்களாவர்.

இதனிடையே குடியரசு துணைத் தலைவரும், மாநிலங்களவைத் தலைவருமான வெங்கய்யா நாயுடுவுக்கு



கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அவர் ஹைதராபாத்திலுள்ள தனது வீட்டில் தனிமைப்படுத்திக்கொண்டுள்ளார். 15 மாதங்களில் 2ஆவது முறையாக அவர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார். நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் ஜனவரி 31ஆம் திகதி தொடங்கவுள்ளது. இந்நிலையில், மாநிலங்களவைத் தலைவர் மற்றும் பெருமளவு ஊழியர்கள் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

## 2 மாத ஆண் குழந்தையை ஈடுவைத்து சூதாடிய தந்தை

**தோற்ற குழந்தை ரூ. 80 ஆயிரத்துக்கு விற்பனை; 3 பேர் கைது**



திருச்சியில் பிறந்து 2 மாதங்களேயான ஆண் குழந்தையை வைத்து சூதாடிய குழந்தையின் தந்தை, அக்குழந்தையை ரூ. 80 ஆயிரத்திற்கு விற்றவர் உட்பட 3 பேரை பொலிஸார் கைதுசெய்தனர்.

திருச்சி - உறையூரைச் சேர்ந்த அப்துல் சலாம் (வயது 37) - இவரது மனைவி கைருன்னிசா தம்பதியருக்கு ஏற்கனவே நான்கு குழந்தைகள் உள்ள நிலையில், கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் அப்துல் சலாம் - கைருன்னிசா தம்பதிக்கு 5ஆவதாக ஆண் குழந்தை பிறந்தது. சூதாட்ட பிரியரான அப்துல் சலாம், பிறந்து 2 மாதமான ஆண் குழந்தையை ஈடாக வைத்து சூதாடியுள்ளார்.

அதில், ஆரோக்கியராஜ் என்பவரிடம் தோற்ற குழந்தையை தொட்டியம் அருகேயுள்ள கீழடி நிவாச நல்லூரரைச் சேர்ந்த சந்திரகுமார் என்பவர் 80 ஆயிரம் ரூபா விலைக்கு வாங்கியுள்ளார். இதுகுறித்த தகவலறிந்த உறையூர் பொலிஸார் வழக்குப் பதிவுசெய்து குழந்தையை வைத்து சூதாடிய அப்துல் சலாம், அதை விற்ற ஆரோக்கியராஜ், வாங்கிய சந்தனகுமார் ஆகிய 3 பேரையும் கைதுசெய்துள்ளனர்.

LK Newspapers Viber Community

# உலக செய்திகள்

## தாய்வானை விட்டு தள்ளியே இருங்கள்

### சீனாவை எச்சரிக்கும் அமெரிக்கா



அமெரிக்கக் கடற்படை, அணுவாற்றலால் இயங்கும் இரண்டு விமானந்தாங்கிக் கப்பல்களைப் பிலிப்பைன்ஸ் கடற்பகுதிக்கு அனுப்பி போர்ப்பயிற்சியை நடத்தியுள்ளது. இதனுடன் ஜப்பானிய போர்க்கப்பலும் பயிற்சியில் இணைந்துள்ளது.

இது, தாய்வானின் உள்விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கியிருக்கும்படி சீனாவுக்கு அமெரிக்கா விடுத்துள்ள எச்சரிக்கையாகக் கருதப்படுகிறது. அதேநேரத்தில் இதற்குப் பதிலடியாக சீனா ஜே-10, ஜே-16 வகைகளைச் சேர்ந்த 39 போர் விமானங்களை தாய்வான் அருகிலுள்ள வான்பரப்பில் பறக்கச்செய்துள்ளது.

## ஹவுதி ஏவுகணைகளை இடைமறித்து தாக்கி அழித்த ஐக்கிய அரபு இராச்சியம்



ஹவுதி கிளர்ச்சியாளர்களின் இரண்டு ஏவுகணைகளை ஐக்கிய அரபு இராச்சியம் இடைமறித்துத் தாக்கி அழித்துள்ளது.

யேமனிலிருந்து செயற்படும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கடந்த ஆறாண்டுகளாக சவூதி அரேபியா தலைமையிலான கூட்டணிக்கு எதிராக ஏவுகணைகள், ட்ரோன்கள் கொண்டு பல்வேறு தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இந்நிலையில், கடந்த 17ஆம் திகதி ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஐக்கிய அரபு இராச்சிய தலைநகர் அபுதாபி மீது ட்ரோன் தாக்குதலில் அபுதாபி விமான நிலையம் அருகேயுள்ள முசாபா பகுதியில் செயற்பட்டுவரும் எண்ணெய் நிறுவனமான ADNOCஇல் மூன்று எண்ணெய்த் தாங்கிகள் தீப்பற்றி வெடித்துச் சிதறியுள்ளன.

அபுதாபி விமான நிலையப் பகுதிக்கு அருகேயுள்ள தேசிய எண்ணெய் நிறுவனத்தை குறிவைத்து நிகழ்த்தப்பட்ட இந்தத் தாக்குதலில் இரண்டு இந்தியர்கள் மற்றும் பாகிஸ்தானியர் ஒருவர் உட்பட 3 பேர் உயிரிழந்ததுடன், 6 பேர் படுகாயமடைந்தனர்.

இந்நிலையில், நேற்றும் அபுதாபியிலுள்ள இலக்குகளைக் குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணைகளைச் செலுத்தியுள்ளனர். அப்போது அவற்றை இடைமறித்துத் தாக்கி அழித்ததாக ஐக்கிய அரபு இராச்சிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இத்தோடு பெரும் சேதம் தவிர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## தலிபான் பிரதிநிதிகள் குழு நோர்வேயில் பேச்சுவார்த்தை

ஆப்கானிஸ்தானில் தலிபான் அமைப்பின் ஆட்சி அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு உலக நாடுகள் அங்கீகாரம் அளிக்கவில்லை. மனித உரிமை மீறல்களும் அதிகளவில் நடப்பதால், சர்வதேச அளவிலான உதவிகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக கடுமையான பொருளாதார நெருக்கடியை அந்நாடு எதிர்கொண்டுள்ளது. வறட்சி, பஞ்சம் ஏற்பட்டு மக்கள் மோசமான வாழ்க்கைச் சூழலை எதிர்கொண்டுள்ளனர். இந்நிலையில், இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக நோர்வேயின் உதவியை தலிபான்கள் நாடியுள்ளனர்.

இது தொடர்பாக பேச்சு நடத்துவதற்காக ஆப்கன் அரசின் பிரதிநிதிகள் நோர்வே சென்றுள்ளனர். ஓஸ்லோ நகரில் நேற்றுமுன்தினம் முதற்கட்ட பேச்சு தொடங்கியது. ஆப்கான் பொறுப்பு வெளியுறவுத்துறை அமைச்சர் அமீர்கான் முட்டாகி தலைமையிலான குழு இதில் ஈடுபட்டுள்ளது. 2ஆவது நாளான நேற்று அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா, ஜேர்மனி, இத்தாலி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளை தலிபான் பிரதிநிதிகள் குழு சந்தித்துள்ளது.

## அரசியலமைப்பு - ஆட்சியில் போதிய அதிகாரமில்லை

### பதவி துறப்பதாக அர்மீனியா ஜனாதிபதி பகிரங்க அறிவிப்பு



அர்மீனிய ஜனாதிபதி சர்கிஸ்சியன் தமது பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

நாட்டின் அரசியலமைப்பு மற்றும் ஆட்சி அதிகாரத்தில் தனக்கு போதிய அங்கீகாரம் அளிக்கப்படவில்லை என சர்கிஸ்சியன் தெரிவித்துள்ளார்.

இராணுவத் தலைவர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளிலிருந்து சர்கிஸ்சியன் விலக்கப்பட்டதால் அவருக்கும் பிரதமர் நிகோல் பஷின்யனுக்கு இடையே கருத்து மோதல் ஏற்பட்டது.

ஜனாதிபதி பதவியை விட பிரதமர் பதவி அதிக அதிகாரத்துடன் இருப்பதாகவும், அதனால் அடிப்படை பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை தன்னால் எடுக்கமுடியவில்லை என்றும் சர்கிஸ்சியன் தெரிவித்துள்ளார்.

## நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் மகள் அனிதாவுக்கு விருந்துபசாரம்



நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 125ஆவது பிறந்ததினத்தையொட்டி ஜேர்மனியில் வாழும் அவரது மகள் அனிதா போஸுக்கு இந்தியத் தூதரகம் சார்பாக விருந்துபசாரம் இடம்பெற்றுள்ளது.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸுக்கும் வியன்னாவை சேர்ந்த எமிலி ஷென்கிளுக்கும் 1937ஆம் ஆண்டு வியன்னாவில் திருமணம் நடைபெற்றது.

அவர்களுக்கு 1942ஆம் ஆண்டு அனிதா போஸ் என்ற மகள் பிறந்தார். ஆங்கிலேயர்களுக்கு எதிராக போர் நடந்ததால் மனைவி மற்றும் மகளை ஐரோப்பாவிலேயே விட்டு விட்டு தென்கிழக்காசியாவுக்கு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் வந்ததாக தெரிவிக்கப்படுகிறது. ஜேர்மனியின் Martin Pfaff என்னும் பேராசிரியரை மணந்துகொண்ட அனிதா போஸுக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர்.

## உக்ரைன் - ரஷ்யா விவகாரத்தில் சர்ச்சைக்குரிய கருத்து: இராஜினாமா செய்தார் ஜேர்மன் கடற்படைத் தளபதி

### "ரஷ்யாவுக்கு அமெரிக்கர்கள் பயணம் மேற்கொள்ள வேண்டாம்"- பைடன் அரசு அறிவிப்பு



உக்ரைன் - ரஷ்யா இடையேயான விவகாரத்தில், சர்ச்சைக்குரிய கருத்து தெரிவித்த ஜேர்மன் கடற்படைத் தளபதி தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்து சென்ற உக்ரைனை கைப்பற்ற முனைப்பு காட்டிவரும் ரஷ்யா, அந்நாட்டு எல்லைகளில் தனது படைகளை குவித்து வருகிறது.

உக்ரைன் மீது படையெடுக்கும் நோக்கில் ரஷ்ய படைகளை குவித்து வருவதாக அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

இந்த விவகாரத்தில் தொடக்கத்திலிருந்தே ஜேர்மனி உக்ரைனுக்கு ஆதரவாக இருந்து வருகிறது. இந்நிலையில், இந்தியா வந்திருந்த ஜேர்மன் கடற்படைத் தலைவர் கே அச்சிம் ஸ்கோன்பாக், முழுக்க முழுக்க ரஷ்யாவுக்கும், ஜனாதிபதி புட்டினுக்கும் ஆதரவான நிலைப்பாட்டுடன் பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியது.

இது தொடர்பாக, ஜேர்மனி தூதரை நேரில் அழைத்து உக்ரைன் கண்டனத்தை பதிவுசெய்திருந்தது. இந்நிலையில்தான் கே அச்சிம் ஸ்கோன்பாக் தனது ஜேர்மனி கடற்படை தலைவர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இதேவேளை, உக்ரைன் - ரஷ்யா இடையே போர்ப்பதற்றம் அதிகரித்துள்ள சூழலில் ரஷ்யாவுக்கு அமெரிக்கர்கள் பயணம் மேற்கொள்ள வேண்டாம் என அந்நாட்டு அரசு அறிவுறுத்தியுள்ளது.

உக்ரைன் மீது படையெடுக்கும் நோக்கத்தில் துருப்புகள், பீரங்கிகள், ஏவுகணைகளை குவித்துவைத்து ரஷ்யா அச்சுறுத்தல் விடுத்து வருகிறது. போர்ப்பதற்றத்தை தணிக்கும் வகையில் ரஷ்யாவுடன் பேச்சு நடத்தியும், எந்தப் பலனும் ஏற்படவில்லை என்ற நிலையில் அமெரிக்க அரசு நாட்டுமக்களுக்கு இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

எனினும், உக்ரைன் மீது படையெடுக்கும் நோக்கம் எதுவும் இல்லை என ரஷ்யா தொடர்ந்து கூறிவருகிறது.

அதேசமயத்தில் நேட்டோ நாடுகள் தங்கள் நாட்டுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி உக்ரைனுக்கு ஆதரவாக படைகளை விரிவாக்கம் செய்வதை நிறுத்தவேண்டும் எனவும், கிழக்கு ஐரோப்பிய பகுதிகளையொட்டி நிறுத்தப்பட்டுள்ள படைகள் திரும்பப் பெறப்பட வேண்டும் எனவும் ரஷ்யா வலியுறுத்தி வருகிறது.

## கடும் பனிப்பொழி: ஆப்கானில் 42 பேர் பலி; 76 பேர் படுகாயம்



ஆப்கானிஸ்தானில் கடும் பனிப்பொழிவால் 42 பேர் உயிரிழந்துள்ளதுடன் 76 பேர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானின் 15 மாகாணங்களில் கடுமையான பனிப்பொழிவு நிலவிவருகிறது. இதன் காரணமாக 42 பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் 76 பேர் காயமடைந்துள்ளனர்.

மேலும், கடந்த 20 நாட்களில் நாடு முழுவதும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து வீழ்ந்துள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் பேரழிவுகளைத் தடுக்க அவர்கள் கடுமையாக போராடி வருவதாக அந்நாட்டு பேரிடர் மேலாண்மை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனிடையே, கடுமையான பனிப்பொழிவு காரணமாக வீதிகளில் சிக்கித் தவித்துவந்த நூற்றுக்கணக்கானோர் மீட்கப்பட்டுள்ளதாகவும், மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கடந்த 18ஆம் திகதி மேற்கு பத்கிஸ் மாகாணத்தில் ஏற்பட்ட இரண்டு நிலநடுக்கங்களிலும் 28 பேர் உயிரிழந்தனர் மற்றும் 1,000 வீடுகள் தரைமட்டமானது குறிப்பிடத்தக்கது.

உறைபனி குளிர்காலம் மற்றும் கடுமையான பனிப்பொழிவு ஆகியவை ஆப்கானிஸ்தானின் வேலையின்மை, பட்டினி மற்றும் வறட்சிக்கு காரணமாக அமைந்துள்ளன.

## சுற்றுச்சூழலை பாதுகாக்க தலைமுடி தானம்

### பெரு கடலில் கலந்த எண்ணெய் படையை முடி கற்றைகளைக்கொண்டு அகற்ற முடிவு



பெருவில் கடலில் கலந்துள்ள எண்ணெய் படலத்தை நீக்க ஏராளமானோர் தங்கள் முடியை தானமாக வழங்கி வருகின்றனர்.

பெருவில் சுத்திகரிப்பு நிலையத்திற்கு எண்ணெய் கொண்டுசென்ற கப்பலில் ஏற்பட்ட கசிவு காரணமாக சுமார் 3 கிலோ மீற்றர் கடற்பரப்பு மாசடைந்துள்ளது. 6,000 பேரலல் எண்ணெய் கடலில் கலந்துள்ளதாகவும், 21 கடற்கரைகள் எண்ணெய் கழிவால் மாசடைந்துள்ளதாகவும் அந்நாட்டு சுற்றுச்சூழல் அமைச்சு கவலை தெரிவித்துள்ளது. கடற்கரையில் படர்ந்துள்ள எண்ணெய் படலத்தை அகற்றும் பணியில் ஏராளமான தன்னார்வலர்கள் ஈடுபட்டுள்ள நிலையில், எண்ணெய்க் கசிவை அகற்ற புதிய யுக்தியை கையில் எடுத்துள்ளது பெரு சுற்றுச்சூழல் அமைச்சு.

முடியை கயிறுபோல உருளை வடிவில் திரித்து அதனை கடற்கரை அலைகளில் மூழ்கடிக்கும்படி செய்வதால் நீரிலுள்ள எண்ணெய் படலங்களை முடி உறிஞ்சிவிடும் என தெரிவிக்கப்படுகிறது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த பல தொன் கணக்கிலான முடி தேவைப்படும் நிலையில், எண்ணெய் படலத்தை அகற்ற பொதுமக்கள் தங்கள் முடியை தானமாக வழங்கலாம் என அரசு, சமூக ஊடகங்கள் வாயிலாக அறிவித்தது.

இதையடுத்து சிகை அலங்கார நிபுணர்கள் உதவியுடன் லிமா நகராட்சி அலுவலகத்தில் முடி சேகரிப்பு மையமும் அமைக்கப்பட்டது. இதனை அறிந்த அந்நாட்டு மக்கள், சுற்றுச்சூழலை பாதுகாக்க தங்கள் முடியை தானமாக வழங்க படையெடுத்துள்ளனர். அண்மையில் டொங்கா அருகே கடலில் எரிமலை வெடித்ததின் எதிரொலியாக பெருவில் எழுந்த உயர் அலைகளால் கப்பலிலிருந்து எண்ணெய் கசிந்ததே இந்தப் பேரிடருக்குக் காரணம் என சந்தேகிக்கப்படுகிறது.

## வீதியில் நடந்துசென்ற சிறுமி சுட்டுக் கொலை

### அமெரிக்காவில் பரபரப்பு




அமெரிக்காவில் வீதியில் நடந்துசென்ற சிறுமியொருவர் சுட்டுக் கொலைசெய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சிக்காகோ நகரில் தனது பராமரிப்பாளருடன் 8 வயது சிறுமியொருவர் நடந்து சென்றுகொண்டிருந்தபோது, அடையாளம் தெரியாத மர்ம நபர், இளைஞர் ஒருவரை சுட முயன்ற நிலையில், குறி தவறி அந்த குண்டு சிறுமியின் தலையில் பாய்ந்தது.

வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும் வழியிலேயே சிறுமி உயிரிழந்த நிலையில், அந்த இளைஞரும் முதுகில் குண்டடி பட்டு, ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் நடத்திய மர்ம நபர் துப்பாக்கியுடன் தப்பியோடிவிட்ட நிலையில், குற்றவாளியை விரைவில் கண்டறிந்து சட்டத்தின் முன் நிறுத்துவோம் என சிக்காகோ நகர் பொலிஸ் கண்காணிப்பாளர் டேவிட் பிரவுன் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தானில் புயல் - கடும் மழை - மண்சரிவு: குழந்தைகள், பெண்கள் உட்பட 12 பேர் உயிரிழப்பு



பாகிஸ்தானின் வடமேற்கு மாகாணத்தை புரட்டிப்போட்ட புயல் மற்றும் கடும் மழையால் ஏற்பட்ட மண்சரிவு உள்ளிட்ட பேரிடர்களில் சிக்கி குழந்தைகள், பெண்கள் உட்பட 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

Khyber Pakhtunkhwa மாகாணத்தில் பெய்த மழையால் பல்வேறு பகுதிகளில் மண்சரிவு ஏற்பட்டு போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. வீட்டின் கூரைகள் இடிந்து வீழ்ந்ததில் குழந்தைகள், பெண்கள் உட்பட 12 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இடிபாடுகள் மற்றும் வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெறுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பொதுநலவாய விளையாட்டு விழாவுக்கு தகுதிபெற்ற இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி




இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமில் நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டு விழாவின் மகளிர் கிரிக்கெட் போட்டிக்கு மலேசியாவில் நடைபெற்ற தகுதிகாண் போட்டியில் சம்பியனான இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி தெரிவாகியுள்ளது.

முன்னதாக 7 அணிகள் பொதுநலவாய விளையாட்டு விழாவின் மகளிர் கிரிக்கெட் போட்டிக்கு தகுதிபெற்றிருந்த நிலையில், எஞ்சிய ஓர் அணியை தெரிவுசெய்வதற்காக மலேசியாவில் நடைபெற்ற தகுதிகாண் போட்டியில் இலங்கை, பங்களாதேஷ், மலேசியா, ஸ்கொட்லாந்து, கென்யா ஆகிய 5 அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

இதில் இலங்கை, பங்களாதேஷ் அணிகள் தலா 3 வெற்றிகளை பெற்றிருந்த நிலையில், இரு அணிகளும் இறுதி லீக் போட்டியில் நேற்று பலப்பரீட்சை நடத்தின. இதில் 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற இலங்கை மகளிர் அணி தாங்கள் விளையாடிய 4 போட்டிகளிலும் வெற்றிபெற்று சம்பியனானது. இதன்மூலம் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி பேர்மிங்ஹாமில் நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டு விழாவுக்கு தகுதிபெற்றுள்ளது.

# இந்திய அணியை 3–0 என வெள்ளையடிப்புச் செய்த தென்னாபிரிக்கா

சுற்றுலா இந்திய அணியுடனான மூன்று போட்டிகள்கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரை 3-0 என்ற அடிப்படையில் தென்னாபிரிக்க அணி கைப்பற்றி இந்திய அணியை வெள்ளையடிப்பு செய்தது.

முன்னதாக 3 போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரை 1-2 என்ற அடிப்படையில் இழந்த விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணி, தற்போது கே.எல்.ராகுல் தலைமையில் ஒருநாள் தொடரை 0-3 என்ற அடிப்படையில் எழுந்துள்ளமை ரசிகர்களிடத்தில் மிகப்பெரிய பேசுபொருளாக மாறியிருக்கிறது.

நேற்று முன்தினம் கேப்டவுனில் நடைபெற்ற மூன்றாவதும், இறுதியுமான ஒருநாள் சர்வதேச போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, விக்கெட் காப்பாளர் குயின்டன் டி கொக்கின் சதம், ரைன் வென் டர் டைஸனின் அரைச்சதத்தின் உதவியுடன் 49.5 ஓவர்களில் 287 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

288 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய இந்திய




அணிக்கு ஷிகர் தவான் மற்றும் விராட் கோஹ்லி ஆகியோர் சிறப்பான இணைப்பாட்டத்தை பகிர்ந்தனர். இருவரும் அரைச்சதம் கடந்து ஆட்டமிழந்த நிலையில், இறுதிநேரத்தில் தீபக் சஹார் அபாரமாக துடுப்பெடுத்தாடி 34 பந்துகளில் 54 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார்.

இறுதி ஓவரில் இந்திய அணியின் வெற்றிக்காக 6 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், ஒரு விக்கெட் மாத்திரம் கை வசம் இருந்தது. எனினும், குறித்த ஓவரின் 2ஆவது பந்துவீச்சில் சுழற்பந்துவீச்சாளர் யுஸ்வேந்திர சஹால் ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றிபெற்று ஒருநாள் சர்வதேச தொடரையும் 3-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

போட்டியின் ஆட்டநாயகனாக சதம் கடந்த விக்கெட் காப்பாளர் குயின்டன் டி கொக் தெரிவான அதேவேளை, தொடர் ஆட்டநாயகனாகவும் தொடரில் மொத்தமாக 229 ஓட்டங்களை குவித்த குயின்டன் டி கொக் தெரிவானார்.

# தோல்வியை தாங்க முடியாமல் கண்கலங்கிய சஹார்

தென்னாபிரிக்க அணியுடனான மூன்றாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் இந்திய அணி இறுதிநேரத்தில் பரிதாப தோல்வியை சந்தித்த நிலையில், இறுதிநேரத்தில் தனியாளாக போராடிய வேகப்பந்துவீச்சாளர் தீபக் சஹார் கண்கலங்கிய வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

குறித்த போட்டியில் இறுதிநேரத்தில் இந்திய அணி வெற்றி பெறும் என்ற நம்பிக்கையை தீபக் சாஹரின் ஆட்டம் கொடுத்தது. எதிர்பாராதவிதமாக இறுதிக் கட்டத்தில் அவர் ஆட்டமிழந்தார். இருப்பினும், அவர் ஆட்டமிழக்கும்போதும் இந்திய அணியின்



வெற்றிக்கு வெறும் 10 ஓட்டங்கள் மட்டுமே தேவைப்பட்டது. இரண்டு விக்கெட்டுகள், 17 பந்துகள் கைவசம் இருந்தன.

எப்படியாவது, அடித்துவிடுவார்கள் என சாஹர் எல்லைக்கோட்டிற்கு அருகிலேயே பேடை கூட கலட்டாமல் அமர்ந்து பார்த்துக்கொண்டிருந்தார். இந்திய அணியின் தோல்வி உறுதிசெய்யப்பட்டவுடன் அவர் கண் கலங்கிவிட்டார். தன்னுடைய ஆட்டம் வீணாகிவிட்டதே, இந்திய அணி வெற்றி பெறவில்லையே என அவர் முகம் அப்படியோ வாடிவிட்டது.

# சீன கலாசாரத்தைப் புரிந்துகொள்ள குளிர்கால ஒலிம்பிக் உதவும்

## - ஹெலனிக் ஒலிம்பிக் கமிட்டித் தலைவர்

*(அக்ஷரா)*



சீன நாட்டின் கலாசாரத்தைப் பற்றிய உலகின் புரிதலை மேம்படுத்த பீஜிங் 2022 விளையாட்டு உதவும் என்று ஹெலனிக் ஒலிம்பிக் கமிட்டித் தலைவரும், சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் உறுப்பினருமான ஸ்பைரோஸ் கப்ராலோஸ் தெரிவித்தார்.

பீஜிங் பெப்ரவரி 4 முதல் 20 வரை குளிர்கால ஒலிம்பிக்கை நடத்தவுள்ளது. அதைத் தொடர்ந்து பாராலிம்பிக் குளிர்கால விளையாட்டுகள் நடைபெறவுள்ளன. ஒலிம்பிக் இயக்கத்தின் வரலாற்றில் ஒலிம்பிக்கின் கோடை மற்றும் குளிர்கால போட்டிகள் இரண்டையும் நடத்தும் முதல் நகரமாக பீஜிங் இருக்கிறது.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

"உலகளவில் போற்றப்படும் மற்றும் மதிக்கப்படும் ஐயாயிரம் ஆண்டுகால புகழ்பெற்ற கலாசாரத்தின் நீண்ட வரலாற்றை சீனா கொண்டுள்ளது. பார்வையாளர்கள் இந்த கலாசாரத்தின் அம்சங்களை எல்லா இடங்களிலும் காணலாம். மக்களின் நடத்தை மற்றும் அவர்களின் விருந்தோம்பல் அணுகுமுறையிலிருந்து கலை வெளிப்பாடுவரை அனைத்தையும் அறிய இந்த விளையாட்டுப் போட்டி உதவும்" - என்றார்.




விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# தலவாக்கலை ஸ்ரேலிங் விளையாட்டு கழகத்தினால் எஸ்.பி.எல். சுற்றுப்போட்டி

*(ஜெகன் செல்வராஜ்)*



தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு தலவாக்கலை ஸ்ரேலிங் விளையாட்டுக் கழகத்தினால் எஸ்.பி.எல். விளையாட்டு சுற்றுப்போட்டியொன்று அண்மையில் ஜெகன் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது. கிரிக்கெட் மற்றும் கரப்பந்து என இரு விளையாட்டுகள் இதன்போது நடைபெற்றன.

இதில் எஸ்.வி.எல். அணியினர் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் சம்பியன் பட்டம் வென்றனர். நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பேட் போய்ஸ் அணியினர் சம்பியன் பட்டம் வென்றனர். கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக ரவீந்திரன், சிறந்த பந்துவீச்சாளராக அருள்ராஜ் மற்றும் வளர்ந்துவரும் சிறந்த துடுப்பாட்ட வீரராக சனோஜன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.





# கடினபந்து கிரிக்கெட் போட்டியில் சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டுக்கழகம் வெற்றி



*(எம்.என்.எம். அப்ராஸ்)*

அம்பாறை மாவட்டத்தில் முன்னணிக் கழகமான சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டுக் கழகம் புதிய அணித்தலைவருடன் தமது உத்தியோகபூர்வ முதலாவது போட்டியினை மட்டக்களப்பு மாவட்ட பூநொச்சிமுனை விளையாட்டுக் கழகத்துடன் இடம்பெற்ற சினேகபூர்வ கடினபந்து கிரிக்கெட் போட்டியில் மியன்டாட் விளையாட்டுக் கழகம் 6 விக்கெட்டுகளால் வெற்றியீட்டிக்கொண்டது.

இப்போட்டியானது பூநொச்சிமுனை இக்ரா பாடசாலை விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. 20 ஓவர்கள்கொண்ட இப்போட்டியில் ஆரம்பத்தில் துடுப்பாடிய பூநொச்சிமுனை விளையாட்டுக் கழகம் 4 விக்கெட்டுகளை இழந்து 184 ஓட்டங்களை பெற்றுக்கொண்டதுடன், இதன்போது தனது அணிக்காக அதிகூடிய ஓட்டத்தினை சஜி (50) பெற்றுக்கொடுத்தார்.

பதிலுக்குத் துடுப்பாடிய சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டுக் கழகம், வீரர்களின் அதித சிறப்பாட்டம் மூலம் 17.2 ஓவர்கள் நிறைவில் நிர்ணயிக்கப்பட்ட 185 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது. மியன்டாட் கழகத்தின் ஆரம்ப வீரரான ஏ.எம்.பயாஸ் மிகவும் அபாராமாக துடுப்பெடுத்தாடி 47 பந்துகளுக்கு 87 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்து அணியின் வெற்றிக்கு வழியமைத்து போட்டியின் சிறப்பாட்டக்காரராக தெரிவானார்.

# மீராவோடை மீரா விளையாட்டுக் கழகத்தின் சீருடை அறிமுக நிகழ்வும், கிரிக்கெட் போட்டியும்

*(மீராவோடை நிருபர்)*

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மீராவோடை மீரா விளையாட்டுக் கழகத்தின் சீருடை அறிமுக நிகழ்வும், சிநேகபூர்வ ரி-20 கிரிக்கெட் போட்டியும் ஞாயிற்றுக்கிழமை ஓட்டமாவடி அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

மீராவோடை மீரா விளையாட்டுக் கழகத் தலைவர் ஐ.எம். நிஸ்வின் தலைமையில் நடைபெற்ற ரி-20 கடின பந்து போட்டியில் மீராவோடை மீரா, சாய்ந்தமருது பிளையிங் கோர்ஸஸ் ஆகிய அணிகள் பங்குபற்றின. போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மீரா அணியினர் 13 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 73 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பிளையிங் கோர்ஸஸ் அணியினர் 9 ஓவரில் 6 விக்கெட்டுகளை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றனர். இப்போட்டியில் வெற்றிபெற்ற சாய்ந்தமருது பிளையிங் கோர்ஸஸ் அணிக்கு ஓட்டமாவடி ஸெய்க்கா






ஹோல்ட் ஹவுஸ் நிறுவனத்தால் ரூ.10 ஆயிரம் பணப்பரிசும், வெற்றிக்கிண்ணமும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக சட்டத்தரணி எம்.எம்.எம்.%ராசிக் கலந்து கொண்டதுடன், விசேட அதிதியாக கல்குடா சலஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத் தலைவர் கே.பி.அப்துல் ஜப்பார் மற்றும் பிரதேச விளையாட்டுக் கழகத் தலைவர்கள், வர்த்தக நிலைய உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

LK Newspapers

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7